KALKI
24.1.88
ரூ. 2.

கல்கி





ஜெயலலிதாவின் எதிர்காலம் என்ன?



சுவைமிக்கது
பிசுக்கற்றது
பல முறை பயன்படக்கூடியது
புதிய
சுப்ரீம்
இருமுறை சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான தாவர எண்ணெய்
Supreme
சிறந்தவை அனைத்தும் கொண்ட சிக்கன சமையல் எண்ணெய்
எஸ்.எஸ்.டி ஆயில் மில்ஸ் கம்பெனி (பி) லிட்.,
வில்லேஜ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-34.
Artig/SSD/218/87 TAM/A

ஜெயலலிதாவின்

எதிர்காலம் என்ன?



ஜெயலலிதாவின் மதுரைப் பொதுக்கூட்டம் ரத்து செய்யப்பட்டது ஏன்?

ஜானகி — வீரப்பன் கோஷ்டி; ஜெயலலிதா — நெடுஞ்செழியன் கோஷ்டி ஆகியவை தொடர்ந்து இரண்டு கோஷ்டிகளாகவே இயங்கும் நிலையில் கட்சிக்காரர்களின் ஆதரவும் மக்களின் ஆதரவும் யாருக்கு அதிகமாக இருக்கும்? — இதோ மதுரைக்கும், ஆண்டிப்பட்டிக்கும் சென்று சேகரித்த நமது நேரடி ரிப்போர்ட்......

பிரம்மாண்டமான போஸ்டர்கள், வரவேற்பு வளைவுகள், வாண வேடிக்கை என்று திட்டமிடப்பட்டிருந்த செல்வி ஜெயலலிதாவின் தென் மாவட்டச் சுற்றுப்பயணம் திடீரென்று ரத்து செய்யப்பட்டவுடன், அவரது ஆதரவாளர்கள் நொந்து போனார்கள் என்பது உண்மை. எம். ஜி. ஆர். தனிக் கட்சி துவங்கியவுடன், முதலில் பேசியது மதுரையில். அதனால், 'சென்டிமென்டில்' தாமும் தமது பொதுக் கூட்டத்தை மதுரையிலேயே ஆரம்பிக்கலாம் என்று திட்டமிட்டிருந்தார் ஜெயலலிதா!

முதலில் தென் மாவட்டங்களை ஜெயலலிதா தேர்ந்தெடுத்ததற்குக் காரணங்கள் உண்டு. எம். எல். ஏக்களில் பெரும் பகுதியினர் வீரப்பன் — ஜானகி கோஷ்டியில் இருந்தாலும், மதுரை புறநகர்ச் செயலாளர் சேடப்பட்டி முத்தையா, மதுரை நகர மாவட்டச் செயலாளர் நவநீதகிருஷ்ணன்,









பம்பாய் மெரீன் டிரைவில் இப்படியொரு பேனர் வைக்கப்பட்டிருந்தது.
— செம்பூர் சந்துரு.

காமராஜர் மாவட்டத்தில் கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன், பசும்பொன் மாவட்டத்தில் கண்ணன், ராமநாதபுரம் 'தென்னவன்,' நெல்லை, சிதம்பரனூர் மாவட்டங்களில் கருப்பசாமி பாண்டியன் என்று பல தென் மாவட்டச் செயலாளர்கள் ஜெயலலிதா அணியில் திரண்டு விட்டனர். இவர்களைத் தவிர, தென் மாவட்ட எம். ஜி ஆர். இளைஞர் அணிச் செயலாளர்கள், அண்ணா தொழிற்சங்கப் பேரவை உறுப்பினர்கள், மகளிர் அணித் தலைவிகள் ஆகியோரின் ஆதரவும் இருக்கிறது. இதைக் கண்டு எரிச்சலடைந்துதான் வீரப்பன், தம் கோஷ்டியின் துணைப் பொதுச் செயலாளர் ராகவானந்தம் மூலம் நெல்லை — சிதம்பரனூர் மாவட்டச் செயலாளர் கருப்பசாமி பாண்டியன், மதுரை நகர மாவட்டச் செயலாளர் நவநீதகிருஷ்ணன் ஆகியோரையும்மதுரைமாவட்டஎம்.ஜி.ஆர். இளைஞர் அணியின் செயலாளர் ஜக்கையனையும் அ. தி. மு. க. விலிருந்து நீக்கி விட்டதாக அறிவித்தார். (இதுபற்றிய வழக்கு இப்போது நீதிமன்றத்தில் இருப்பது வேறு விஷயம்!)

அவரது அறிவிப்பைக் கேட்ட தொண்டர்கள் விலா எலும்பு நோகச் சிரித்து, 'இவர் யார் எங்களை நீக்குவதற்கு?' என்று எதிர்க் கேள்வி கேட்டார்கள். இதைவிட வேடிக்கை என்னவென்றால், நவநீதகிருஷ்ணனுக்குப் பதிலாகப் பொறுப்பேற்றிருக்கும், வீரப்பன் கோஷ்டியைச் சேர்ந்த மாரிமுத்து, (எம். எல். ஏ.) மாவட்டத்தில் அறிமுகமே இல்லாதவர். 'மதுரையில் எத்தனை வார்டுகள் என்று கூட அவருக்குத் தெரியாது' என்றார் தொண்டர் ஒருவர்.

ஊழியர்களின் பரவலான ஆதரவு, ஜெயலலிதாவுக்குத்தான் என்பதற்கு மற்றொரு உதாரணம், சமீபத்தில் பரமக்குடியில் நடந்த ஒரு சம்பவம். பரமக்குடி அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர் பாலுச்சாமி அ. தி. மு. க. ஊழியர்களிடம் வீரப்பன் கோஷ்டிக்கு ஆதரவு திரட்டச் சென்ற போது, நகரச் செயலாளர் ஜமால், பாலுச்சாமியை நடுத்தெருவில் நிறுத்தி 'பணத்துக்கு விலை போயிட்டியே; வெட்கமாக இல்லை' என்று காரமான கேள்விகளைக் கேட்க, வேறு வழியில்லாமல் பாலுச்சாமி திரும்ப வேண்டி வந்துவிட்டதாம்.

தென் மாவட்டங்களில், காளிமுத்துவை வைத்து ஜானகிக்கு ஆதரவைக் கூட்டலாம் என்று நினைத்த வீரப்பன் அணியினருக்குக் காளிமுத்துவின் தற்போதைய நடத்தை சந்தேகத்தை அளித்திருக்கிறது. 'மந்திரிசபையில் தன்னைச் சேர்க்காததால் எரிச்சலடைந்திருக்கிறார் காளிமுத்து' என்றும் சொல்கிறார்கள். "காங்கிரஸுக்கு வேண்டாதவர் காளிமுத்து. அவருக்கு மந்திரி பதவி கொடுத்தால் காங்கிரஸ் ஆதரவை இழந்து விடுவோம் என்று பயப்படுகிறது வீரப்பன் கோஷ்டி" என்றார் ஜெயலலிதா கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர். இது குறித்துக் காளிமுத்துவிடம் கேட்டதற்கு, 'இன்னும் சிறிது நாட்கள் பொறுங்கள்; உங்களிடம் மனம் விட்டுப் பேசுகிறேன்' என்று மதுரைப் பத்திரிகையாளர்களிடம் சொல்லியிருக்கிறாராம்!

இவற்றோடு இப்போது ராமநாதபுரம் மாவட்டத்தில் ஜானகி கோஷ்டியை ஆதரிக்கும் மந்திரி ராமசாமி, பொ. அன்பழகன் (எம். எல். ஏ.) ஆகிய இருவரும் நேற்று வரை ஜெயலலிதாவைத்தான் ஆதரித்துக் கொண்டிருந்தனர். எம். ஜி. ஆர். இறப்பதற்குச் சில நாட்கள் முன்பு ஜெயலலிதாவை அழைத்து, ராமநாதபுரத்தில் கூட்டம் போட்டு 'தலைவரின் ஒரே வாரிசு ஜெயலலிதா

தான்' என்று கோஷமிட்டவர்கள்தான் அவர்கள். இப்போது கோஷ்டி மாறி வந்து விட்டார்கள். இது நிலையாக இருக்குமா என்பது மறுபரிசீலனைக்குரியதே என்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

அதிகாரிகள் — அரசு ஊழியர்களின் மனநிலை இந்த விஷயத்தில் எப்படியிருக்கிறது என்பதைத் தெரிவிக்கும் இன்னொரு விஷயம்: மதுரைப் பத்திரிகையாளர் ஒருவர் பெரிய போலீஸ் அதிகாரி ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்த போது. அந்த அதிகாரி பத்திரிகையாளரிடம் 'யாருக்குங்க ஆதரவு?' என்று கேட்டிருக்கிறார். பத்திரிகையாளர், 'அந்த அம்மாவுக்குத்தாங்க' என்று இருபொருள் பட பதில் சொல்லியிருக்கிறார். 'ஜெயலலிதா அம்மாவுக்குத்தானே?' என்று அந்த அதிகாரி திருப்பிக் கேட்டாராம்!

இந்நிலையில், 'தூள் கிளப்பி விடலாம்' என்ற எண்ணத்திலிருந்த தென் மாவட்டத் தொண்டர்கள், ஏமாற்றம் அடையும்படி ஜெயலலிதா பயணத்தை ரத்து செய்து விட்டாரே, ஏன்? — இந்தக் கேள்வியை மதுரையில் உள்ள ஜெயலலிதா ஆதரவாளர்களிடம் கேட்டதற்கு, 'உடம்பு சரியில்லை என்று சொல்லி விட்டார்களே அம்மா' என்று பதிலளித்தாலும், ஜெயலலிதாவுக்கு நெருங்கிய வட்டாரத்தில் விசாரித்ததில் பல விஷயங்கள் தெரிய வந்தன.

இரு கோஷ்டிகளையும் சமாதானப்படுத்திச் சேர்த்து வைக்கும் முயற்சியில் இறங்கிய ராஜீவ் காந்தி, தம்மை, கடந்த எட்டாம் தேதி வந்து சந்தித்த குழந்தைவேலிடம் 'ஜெயலலிதாவைக் கட்சிப் பொதுச் செயலாளராகவும், ஜானகி அம்மாளை மீதியுள்ள இரண்டு வருடங்களுக்கு முதல்வராகவும் வைத்துக் கொள்ளலாம்' என்று யோசனை கூறினாராம். கூடவே, 'இரண்டு நாட்களில் எனக்கு அதுபற்றித் தகவல் சொல்லுங்கள்' என்றும் கேட்டுக் கொண்டாராம். ஆனால் ஜெ. கோஷ்டி இந்த யோசனைக்கு ஒப்புக் கொள்ளவில்லையாம். எந்த விதச் சமரச முயற்சியும், ஒருங்கிணைப்பும் ஜானகியைச் சம்பந்தப்படுத்தாமல் இருக்க வேண்டும் என்று கூறியதாம். 'அப்படியானால் கொஞ்சம் பொறுங்கள், ஜானகியிடம் பேசிவிட்டுச் சொல்கிறேன்' என்று பிரதமர் தரப்பிலிருந்து பதில் வந்ததாம். இந்த விஷயங்கள் நடந்து கொண்டிருக்கும் போது, கூட்டங்களில் உணர்ச்சி வசப்பட்டுப் போய் ஏதாவது பேசிவிட்டால், நிலைமை சிக்கலாகி விடும் என்றுதான் ஜெயலலிதா பயணத்தை ரத்து செய்து விட்டாராம்! எம். எல். ஏக்களின் ஆதரவு எப்படியிருந்தாலும், தென் மாவட்டங்களைப் பொறுத்தவரை கட்சிப் பொறுப்பில் உள்ளவர்களின் பரவலான ஆதரவு ஜெயலலிதா கோஷ்டிக்குத்தான் என்பது மதுரை, மற்றும் சுற்று வட்டார மக்களிடம் பேசியதில் தெரிய வந்தது.

— தில்லப்பா



"நாடு ரொம்பத்தான் கெட்டுப் போச்சு!"

"ஏன் சலிச்சுக்குறீங்க?"

"பின்ன என்னங்க. தெருவில 'தலைவரே'ன்னு கூப்பிட்டா, அத்தனை பேரும் திரும்பிப் பார்க்கிறானுக!"

— கடுவை கோபால்சாமி.



"டாக்டர் என்னைத் தக்காளியும், தேங்காயும் சேர்த்துக் கொள்ளக் கூடாதுன்னு சொல்கிறார்."

"ஏன்?"

"அதெல்லாம் சாப்பிட்டால் அவருக்கு ஃபீஸ் கொடுக்க என்னிடம் பணம் இருக்காதாம்!"

— தேனி. எஸ். மாரியப்பன்.



"ரெண்டு பல் செட் வச்சிருக்கீங்களே எதுக்கு...?"

"ஒண்ணு சைவம் சாப்பிட. இன்னொண்ணு அசைவம் சாப்பிட..!"

— சரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.



அழகர்சாமி

* ஜக்கையன்

* ஆர். நாகராஜன்

* பிச்சைராமன்

* ஏ. வி. சந்தனம்

* த. அய்யம்மாள்

* இ. விஜயா

* எம். பரமசிவம்

* த. பஞ்சவர்ணம்

* வி. சரஸ்வதி

* வி. நாகராஜன்

* சேட் அருணாசலம்

* ஜெயமணி

ஆண்டிப்பட்டியில் ஓர் அலசல்

ஜானகியா? ஜெயலலிதாவா?

எம்.ஜி.ஆரைத்தேர்ந்தெடுத்ததொகுதி ஆண்டிப்பட்டி. ஜானகி முதல்வராக நீடித்து இருந்தால், ஏதாவது ஒரு தொகுதியிலிருந்து எம். எல். ஏ. வாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அந்த நிலையில் கோஷ்டி பூசல் நீடித்து ஜெயலலிதா எதிர்த்துப் போட்டியிட்டால் யார் அங்கு வெற்றி பெறுவார்கள்? இந்தக் கேள்வியை மதுரை மாவட்ட அ. தி. மு. க. முக்கியஸ்தர்களையும், ஆண்டிப்பட்டி பொது மக்களையும் கேட்டோம்.

ஜக்கையன் (முன்னாள் எம். பி.):

"தலைவர் அவர்கள் உயிருடனிருந்தபோது, அவருக்கு நெருங்கிய நண்பர்கள், பணியாட்கள், உறவினர்கள் என்று பலர் இருந்த போதும் அவர்களைத் தலைவர் அரசியலுக்கு அறிமுகப்படுத்தியதில்லை. புரட்சிச் செல்வி ஜெயலலிதாவை மட்டுமே அரசியலில் அறிமுகப்படுத்தினார். கட்சியில் சில பூசல்களை ஒழிக்க ராஜதந்திரத்துடன் செயல்பட்டு வந்த தலைவர், இன்னும் உயிரோடிருப்பாரேயானால், சந்தேகமே இல்லாமல் ஜெயலலிதாவே தமது அரசியல் வாரிசு என்று அறிவித்திருப்பார். இந்நிலையில் ஆண்டிப்பட்டியில் இடைத் தேர்தல் வரும் பட்சத்தில், ஜெயலலிதா ஆதரிக்கும் வேட்பாளரே வெற்றி பெறுவார்.

ஆர். நாகராஜன் (துணைத் தலைவர், ஆண்டிப்பட்டி பேரூராட்சி):

இந்த கோஷ்டிப் பூசல் துரதிர்ஷ்டவசமானது; துயரமானது. மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தொண்ணூறு சதவீத அ. தி. மு. க. ஊழியர்கள் ஆதரிப்பது ஜெயலலிதாவைத்தான்.

பிச்சைராமன் (ஒத்தக்கோயில்):

எங்க கிராமத்துல பொம்பளைங்களெல்லாம் ஜெயலலிதா அம்மாவைத்தான் ஆதரிக்கிறாங்க. எம். ஜி. ஆருக்கு அடுத்தபடியா அந்தம்மாதான் கட்சியையும், ஆட்சியையும் காப்பாத்தும்.

ஜெயமணி:

ஜானகியும் ஜெயலலிதாவும் ஒருவரையொருவர் எதிர்த்து நின்றால், நான் ஜானகி அம்மாவுக்குத்தாங்க வோட்டு போடுவேன். எம். ஜி. ஆர். ஆண்டிப்பட்டிக்குச் செய்த பல நல்ல காரியங்கள் தொடர்ந்து நடக்கணும்னு ஜானகியம்மாதாங்க வரணும்.

வி. நாகராஜன்:

எம். ஜி. ஆரின் மனைவியாக இருப்பதால், அரசியல் நிலைமைகளைச் சமாளிக்கும் பக்குவமும், ஆட்சியை நடத்தும் திறமையும் ஜானகி அம்மாவுக்கு இருக்கும். எனவே, எங்க ஊருக்குத் தொடர்ந்து நல்ல காரியங்கள் நடக்க, ஜானகிதாங்க ஜெயிக்கணும்.

ஏ. வி. ரத்னம்:

ஜெயலலிதா அம்மாவுக்குத்தாங்க வாய்ஸ் இருக்கு. அந்தம்மாவுக்குத்தாங்க கூட்டம் வரும்; இங்க ஜெயலலிதாதாங்க ஜெயிப்பாங்க.

எம். பரமசிவம் (ஆண்டிப்பட்டி நகர எம். ஜி. ஆர். மன்றச் செயலாளர்):

அ. தி. மு. க. கட்சியே எம். ஜி. ஆரின் சொத்துதாங்க. அதனாலே தலைவருக்கு அப்புறம் அவர் மனைவிதாங்க வரணும். ஜெயலலிதா போனால் கூட்டம் வரும்; வோட்டுப் போடுவாங்க என்பதெல்லாம் சரியில்லீங்க. செய்யாறு தொகுதியில் இடைத் தேர்தல் நடந்த போது தலைவர் ஜெயலலிதாவைப் பிரசாரத்திற்கு அனுப்பவில்லை. அங்கே எங்க கட்சி ஜெயிக்கலையா?

அழகர்சாமி:

பதவியேற்றவுடன் தலைவர் எப்படி செயல்படுவாரோ, அது போலவே செயல்படுவேன்னு ஜானகி அம்மா சொல்லியிருக்காங்க! அந்தம்மாவுக்கு ஆறு பாஷை தெரியும். வந்தவுடன் அதிரடி நடவடிக்கை போல, செயலாளர்களை மாற்றிவிட்டார். எங்க ஆதரவு ஜானகி அம்மாவுக்குத்தாங்க.

சேட் அருணாசலம் (ஆண்டிப்பட்டி பேரூராட்சித் தலைவர்):

ஜானகி அம்மா சொத்துக்கு வாரிசாக இருக்கலாம். நேரு, இந்திராவை அடையாளம் காட்டியது போல், இந்திரா, சஞ்சய், ராஜீவை அடையாளம் காட்டியது போல் தலைவர் ஜெயலலிதாவைத்தான் அடையாளம் காட்டினார். அவரின் கடைசிக் காலத்தில், எம். எல். ஏக்கள் ஜெயலலிதாவுடன் தொடர்பு கொள்ளக் கூடாது என்று சொன்னது உண்மை. ஆனால் அ. தி. மு. க. அடிமட்டத் தொண்டர்கள் அந்தம்மாவைச் சந்திக்கக் கூடாது என்று சொல்லவில்லையே! நாங்கள் கட்சி சம்பந்தமாகப் பேச அந்தம்மாவைத்தான் தொடர்பு கொள்வோம்.

த. பஞ்சவர்ணம் (ஒன்றிய மகளிர் அணிச் செயலாளர்):

ஒன்றியம் முழுவதும் சுற்றி வந்தேன். எல்லாக் கிளைக்கழகச் செயலாளர்களும், ஜானகி அம்மாவைத்தான் ஆதரிக்கிறாங்க. தலைவரின் ஒரே வாரிசு ஜானகி அம்மாதான். அவுங்க ஒருத்தர்தான் கட்சியைக் கட்டிக் காக்க முடியும்.

வி. சரஸ்வதி:

எம். ஜி. ஆர். கட்சியை, உடைக்காமல் நடத்திச் செல்ல இப்போதுள்ள தலைவர்கள் முயல வேண்டும். இவர்கள் ஒற்றுமையுடன் இல்லாவிட்டால், என்னைப் போன்றவர்கள் வேறு கட்சிக்குத்தான் வோட்டுப் போடுவோம்!

இ. விஜயா:

எம். ஜி. ஆர். சொத்துக்கு மட்டுமல்ல, அரசியலுக்கும் ஜானகி அம்மாதாங்க வாரிசு. எங்க தொகுதியிலே பல நல்ல வேலைகள் நடந்துக்கிட்டு இருக்கு. தொடர்ந்து நல்லது நடக்கணும்னு ஜானகிதாங்க ஆட்சி செய்யணும்.

து. அய்யம்மாள் (நகர மகளிர் அணிச் செயலாளர்):

லோன் வாங்கின பொம்பளைங்க, அரசாங்கச் சலுகையை அனுபவிச்சவங்க இவங்கதாங்க ஜானகி அம்மாவை ஆதரிப்பாங்க! 1972 — லிருந்து தலைவர் கட்சியில் இருக்கேன். எந்தச் சலுகையும் கேட்டதில்லே. பிளாட்பாரத்தில்தான் குடியிருக்கேன். தலைவர் செத்த போது மெட்ராஸ் வந்தேன். 'வீரப்பா! கட்சியை உடைச்சிடாதே; ஜெயலலிதா அம்மாவை ஆதரிச்சு அரசியல் நடத்து'ன்னு அந்தக் கூட்டத்திலே கத்தினேன். ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் இந்த அய்யம்மாள் கிராமம், கிராமமாச் சுத்தினவ! ஜெயலலிதா அம்மாவுக்கு வோட்டுப் போடச் சொல்லி எல்லோரிடமும் கற்பூரம் கொளுத்திச் சத்தியம் வாங்குவேன்.

— கௌசல்யா

அட்டை வண்ணப்படங்கள்: மனோ, சுபா

படங்கள்: கே. வி. ஆனந்த்



"தமிழகம் முன்னேறலைன்னு எப்படி முன்னேறும்? நிதிப் பற்றாக்குறை தான் காரணம்! நிதிப் பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசு ஒத்துழைக்க மறுக்கிறது! ஏன், எங்க சிவகாசியில் ஒரு நோட்டு அச்சடிக்கும் அச்சகம் அமைய அனுமதி தரக்கூடாதா? நாசிக்கில் மட்டும்தான் இருக்க வேண்டுமா? மத்திய அரசின் ஓர வஞ்சனையை இதுவே உணர்த்தவில்லையா...?"

— ஏ. சாந்தி, நெல்லை — 11.




திடமதி: என்னய்யா வேட்டி நெசவு பண்றீங்க, ஒண்ணும் சுகமில்லே...

நெசவாளி: என்ன, அப்படி சொல்லிப்புட்டீங்க...?

திடமதி: பின்னே என்னய்யா, வேட்டியின் கீழ்ப்பக்கம் ஆளும் கட்சிக் கரையும் மேல்பக்கம் எதிர்க் கட்சிக் கரையும் வைத்து நெசவு செய்தால் எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்கு வசதியா இருக்குமில்லே...!

— டி. சாலமன் சத்தியராஜ்,
ராணிப்பேட்டை.

இன்றும் ஒரு சங்க காலம்



"எங்கள் ஆட்சி நடக்கிற இந்தக் காலத்திலே ஒன்றல்ல, இரண்டல்ல... நாடார் சங்கம், வன்னியர் சங்கம், பிராமணர் சங்கம், முக்குலத்தோர் சங்கம் என்று ஏராளமான சங்கங்கள் இருப்பதாலே எங்களுடைய ஆட்சிக் காலத்தையும் 'சங்க காலம்' என்றும், 'சங்கம் வளர்ந்த பொற்காலம்' என்றும் வரலாற்று ஆசிரியர்கள் வர்ணிக்க வேண்டும் என்று அடக்கத்துடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்!"

— ப. இராஜகோபாலன், மன்னார்குடி.



திடமதி: தலைவரே! நாம் போடும் எந்தத் திட்டத்திலும் 'தொலை நோக்கு இல்லை'ன்னு எதிர்க்கட்சியினர் குறை சொல்றாங்களே...

அமைச்சர்: அதுக்கு என்ன பண்ணலாம்?

திடமதி: பேசாம, டெலஸ்கோப்பு தயாரிப்புக்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பிச்சுடுங்க, அப்ப என்ன சொல்ல முடியும், பார்த்துடலாம்!

— வெ. சீதாராமன், சென்னை — 5.

ராணிப்பேட்டை சாலமன் சத்தியராஜுக்கு வாழ்த்துக்கள். இந்த இதழில் பிரசுரமாகும் அவருடைய துணுக்குக்குச் சன்மானம் இரட்டிப்பாகிறது. ரூ. 50 பரிசு பெறுகிறார்!



கண்ணே! கலைமானே!



மலையாளத்திலிருந்து தெலுங்கிற்கும், தெலுங்கிலிருந்து தமிழுக்கும் பாதயாத்திரை செய்திருக்கும் பாலுமகேந்திரா படம்.

பாலு மகேந்திரா என்றால் கவிதை பாடும் காமிரா. இதிலும் அப்படியே.

பத்துப் பைசா ஸ்டாம்பின் பின்பக்கத்தில் எழுதி விடலாம் போல ஒரு கதை.

புதிதாக ஒரு மலை கிராமத்திற்குக் காட்டிலாகா அதிகாரியாக வரும் ஓர் இளைஞன், ஒரு மலைஜாதி பெண்ணிடம் மையல் கொள்கிறான். அவளைக் கல்யாணம் செய்து கொள்ளும் தருவாயில் கொலைக் குற்றத்திற்கு ஆளாகி ஜெயிலுக்குப் போய்த் திரும்பி வந்து காதலியுடன் இணைகிறான். இந்த எல்லைக்குள் பாலுமகேந்திரா ஜெயில் கொடுமைகள், பிரிவு வேதனை, இயலாமை, கோபம் என்று விளாசப் பார்க்கிறார்.

நெஞ்சில் இன்னும் நீந்திக் கொண்டிருக்கும் பாட்டு, அந்தக் கைதி பாடும் 'என் கண்ணில்...' இளையராஜா நெஞ்சை நிமிர்த்திக் கொள்ளலாம்.

வசந்த், ஃபீமேல் வார்டில் இருக்கும் கர்ப்பிணிப் பெண்ணைப் பார்க்கப் போய் மாட்டிக் கொண்டு 'பூசை' ஏற்பதும், அம்மாவுடன் பேச முடியாத கைதி, வாட்டர் டாங்கிலிருந்து கீழே விழுந்து, உதட்டோரம் வழியும் ரத்தமும், திறந்த கண்களுமாய் இறப்பதும் பரிதாபத்தை வேண்டுமானால் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனால் மூலக் கதையில் தண்ணீரில் கலந்த விளக்கெண்ணெய். கொஞ்சம் கூட ஒட்டவே இல்லை.

அர்ச்சனாவுக்கு அபாரமான கண்கள். மான் போல் மருளுவதும், கலங்குவதும், சிரிப்பதும், கோபிப்பதும், நாணுவதும், ஏங்குவதும் — பார்த்துக் கொண்டே இருக்கலாம். ஆனால் அந்த ஒட்டிப் போன கன்னமும் முருங்கைக்காய்த் தேகமும்தான் முகத்தைத் திருப்பிக் கொள்ளச் செய்கின்றன.

பானுசந்தர் ஓ. கே.

பஸ்ஸில் இருக்கும் அத்தனை பேரும், இருட்டிப் போன சமயத்தில் காதலி ஏற்றி வைத்த ஒற்றை தீபம் தெரிகிறதா என தடக் தடக் நெஞ்சங்களோடு பார்க்கும் போது, நம் இதயங்களிலும் திக்திக்தான். அந்த திக் திக்கிற்காகப் பாலுவைப் பாராட்டலாம்.

ஜெயிலை, ஜெயில் மக்களை, ஜெயில் சம்பவங்களைத் திகட்டுகிற அளவிற்குக் காட்டாமல், இதே படத்தைச் செதுக்கிச் செதுக்கி ஒரு மணி நேரத்தில் காட்டியிருந்தால் இன்னும் நன்றாக ரசித்திருக்கலாமோ என்னவோ?

— ஜெயமன்மதன்

வட்டமேஜை

செய்திப் படமாக்கிக் காட்ட வேண்டும்...

° "குடுமிபிடிச் சண்டை" என்ற தலையங்கம் படித்தேன். இன்றைய தமிழக அரசியலில் அ.தி.மு.க. நிலையை நன்கு உணர்த்தக் கூடியதாக இருந்தது. மக்கள் இப்போதிருப்பவர்களுக்கு வோட்டு போடவில்லை! எம்.ஜி.ஆருக்காக மட்டுமே போட்டார்கள் என்பது நிதர்சன உண்மையாகும். முன்பு ஒரு முறை முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு கூறிய, 'எம். ஜி. ஆர். என்பவர்தான் ஒன்று; மற்றவர்கள் அதன் அருகிலுள்ள ஜீரோக்கள்தான்' என்பதை இப்போது நினைவு கூர்ந்தால் நன்கு பொருள் விளங்கும்.

குருவிலாம்பட்டு. பி. சண்முகம்.

° "குடுமிப்பிடிச் சண்டை" என்ற தலைப்பில் அ.இ. அ.தி.மு.க.வினரின் அப்பட்டமான நிலையை எக்ஸ்—ரே போலப் பிட்டுப் பிட்டு வைத்துள்ளீர்கள்!

காரைக்கால். ராபர்ட் சாமுவேல்.

° கிரிக்கெட்டில் அவ்வளவாக ஆர்வமில்லாத என் போன்றவர்கள் கூட சுறுசுறுப்பாகப் படிக்கும் விதத்தில் இருந்தது வெங்சர்க்காரின் பேட்டி. அவரது பதில்களில் தெளிவு, பொறுப்பு உணர்வு, அடக்கம் ஆகிய மூன்றும் சிறப்பாகப் பரிமளித்தது மறுக்க முடியாத உண்மை.

கும்பகோணம். கே. பட்டு.

° வெங்சர்க்காரின் சாதனைகளுக்கு உரிய பாராட்டும், அங்கீகாரமும் தரப்பட்டதில்லை என்ற வரிகளைப் படித்த போதுதான் மிகவும் வருத்தமாக இருந்தது. திறமையானவர்களை உற்சாகப்படுத்தத் தெரியாத இந்தியா, பின்பு எப்படி போட்டிகளில் வெற்றி பெறும்?

விருதுநகர் — 1. கே. டி. ஆர். சேகர்.

° '88 — எப்படி இருக்க வேண்டும் என்று நீங்கள் ஆசைப்படுகிறீர்கள்?' என்ற வாசகரின் கேள்விக்கு, மிக அருமையாகத் தராசு கூறிய பதில் சிந்திக்கும்படியாக இருந்தது. இக் கேள்விக்கே பரிசும் கொடுத்த ஆசிரியருக்கு எனது பாராட்டுக்கள்.

தஞ்சை — 9. ஜெயா சண்முகம்.

° 'கதார்த்தத் திரைகள்' சிறுகதை, நடைமுறை வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளைத் துல்லியமாய்க் காட்டியது! ஆண்கள் புத்திசாலி எனத் தங்களை நினைத்துக் கொள்கிறார்கள்; பெண்களோ, அதைச் செயலில் காட்டுகிறார்கள் என்பது, இக்கதையின் நாயகி மல்லிகாவிற்குக் கச்சிதமாய்ப் பொருந்துகிறது!

சென்னை — 15. இரா. கி. இரஞ்சன்.

° 'இதயம்' எவ்வாறு இயங்குகிறது? அது பழுதுபட்டால் எப்படி சிகிச்சை தரப்படுகிறது? — போன்ற பல பயனுள்ள செய்திகளைத் தந்த அறிவியல் கட்டுரைத் தொகுப்பு அருமை.

கோவை. உமார்த்தி.

° 'ஆர். சி. சக்தியா இப்படி ஒரு படத்தை தந்திருக்கிறார்?' என்று ஆச்சரியத்தோடு வருத்தப்படும் ரசிகர்களின் எண்ணங்களை அப்படியே அசலாகத் 'தாலி தானம்' படவிமர்சனத்தில் வடித்திருக்கிறீர்கள். பாராட்டுதல்கள்!

பெங்களூர் — 25. கே. ஜி. எஸ்ப். பழனிச்சாமி.

° இக் கடிதத்தை உண்மையிலேயே நான் எழுதவில்லை; 'மனம்தான் எழுதுகிறது'; ஆனால் 'தமயந்தி'க்கல்ல! வெளியிட்ட ஆசிரியருக்கு! கதையின் கரு சிறியதென்றாலும் அதற்கு வரிவடிவம் கொடுத்திருந்த நேர்த்தி பாராட்டுக்குரியது.

மேல்பட்டி. வைரம்.

° 'மருந்தோடு மந்திரம்!' நகைச்சுவைக் கதையைப் படித்துத் திண்டாடுகிறேன். நீங்கள் தான் என் வயிற்று வலிக்கு மருந்து வாங்கித் தர வேண்டும்!

போடிநாயக்கனூர். ப்ரிய பாரதி.

° இன்றைய சமூக அமைப்பின் மிகப் பெரும் சாபக்கேடான வரதட்சணைக் கொடுமைக்குப் பலியான சசிகலாவின் சோகக் கதை நெஞ்சை உருக்கி விட்டது. அந்த அபலைப் பெண்ணின் மரணம், இப்டூர் நகர மக்களிடையே ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது என்றாலும் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விலை மிக அதிகம்!

சென்னை — 15. சைதை வி. முரளி.

° சசிகலாவின் மரணம், இப்டூர் மக்களிடையே மட்டும் சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பது போதாது. நாடெங்கிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் இந் நிகழ்ச்சியைச் செய்திப்படமாக்கிக் காட்ட வேண்டும். அப்போதுதான் பெண்கள் வரதட்சணைச் சிறையிலிருந்து மீள முடியும்.

கோவிந்தபுத்தூர். குரு. வைத்தியநாதன்.


° தொழிலாளர்களின் சிறந்த ஆலோசனைகளை நடைமுறைப் படுத்தியதால் பிரிட்டிஷ் கம்பெனிகள் பல கோடி ரூபாய் மிச்சப் படுத்தியுள்ளதாகத் தெரிவித்திருந்தீர்கள்.

நான் பணிபுரிந்து வரும் சென்னை அசோக் லேலண்டு நிறுவனத்தில் கடந்த பத்தாண்டுகளாகத் தொழிலாளர்களின் சிறந்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துதலும், ஆலோசனையின் தன்மைக்கேற்ப வெகுமதி அளித்தலும் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இதன் மூலம் தொழிலாளர்கள் வெகுமதியாகவும் சில லட்ச ரூபாய்களைப் பெற்றுள்ளனர்!

சென்னை — 39. கொ. முருகையன்.


(இதேபோல BHEL, BEL போன்ற தொழில் நிறுவனங்களிலும் தொழிலாளர்களின் யோசனைகளுக்கு மதிப்பளித்துப் பரிசுகள் வழங்கப்படுவதாகப் பல வாசகர்கள் எழுதியுள்ளார்கள்.


— ஆசிரியர்.)



வளரும் வயதில் குழந்தைகளுக்குத்
தேவை காம்ப்ளான்
ஏனெனில், காம்ப்ளான், குழந்தைகளுக்கு
அன்றுடம் தேவைப்படும் அத்யாவசிய
ஊட்டச்சத்தை வழங்குகிறது.
சாதாரணமாக 15 அல்லது 16 வயது
வரை, குழந்தைகளின் வளர்ச்சிக்கு புரதம்,
அடிப்படையான ஊட்டச்சத்தாகும்.
ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு
இப்போது காம்ப்ளான் மிகமிக அவசியம்.
புரதச் சத்துக்களிலேயே தலைசிறந்த பால்
புரதம் (20%) கொண்டது, காம்ப்ளான்.
மேலும் 22 ஆதார உணவுச் சத்துக்களும்
காம்ப்ளானில் உள்ளன.
காம்ப்ளான் இனிய சுவைகளில்
கிடைக்கிறது.
Complan
23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்க்கத் தேவையில்லை
காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு

GX/38/203TML





எதிர்க்கட்சி முதல்வர்கள் தங்களுக்குள் 'ஒற்றுமை'யைக் காட்டியுள்ளார்கள்!





கல்கி

1988 ஜனவரி 24
மலர்: 46 இதழ் 26
பிரபவ தை 10



நெருப்பை அணைக்கப் பெட்ரோல் ஊற்றுகிறார்!

ஜானகியா, ஜெயலலிதாவா என்பதைவிட முக்கியமான பிரச்னைகள் பல உள்ளன. அவற்றுள் ஒன்று, அரசு பெட்ரோல் விலையை லிட்டருக்கு ஒரு ரூபாய் உயர்த்திவிருப்பதாகும். மத்தியதர வகுப்பினருக்கு உபயோகமாக இருக்கும், நாட்டின் தொழில் வளப் பெருக்கத்துக்கும் உதவும் என்று திட்டமிட்டுத்தான் ஏராளமான இரு சக்கர பெட்ரோல் வாகனங்களின் உற்பத்திக்கு அரசு அனுமதி அளித்தது. இதை நம்பி ஸ்கூட்டரும், மொபெட்டும், மோட்டார் சைக்கிளும் வாங்கிய லட்சக்கணக்கான மக்கள் இன்று அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கின்றனர். ஆனால் பாதிக்கப்படப் போகிறவர்கள் இந்த ஒரு சாரார் மட்டுமல்ல. மக்கள் அனைவரையுமே மறைமுகமாக இந்த விலை உயர்வு தாக்கும்; தவிக்கச் செய்யும். எப்படி என்று பார்ப்போம்.

சாலையில் ஓடுகிற வாகனங்களில் மிகப் பெரும்பாலானவை அரசுக்குச் சொந்தமானவையே. பெட்ரோல் விலை உயர்வினால் நாட்டிலுள்ள எந்த அதிகாரியாவது, 'இனி சைக்கிளில் ஆபீஸுக்குப் போகிறேன்' என்று கூறப் போகிறாரா? எந்த மந்திரியாவது, 'கார் வேண்டாம்; எனக்கு ஸ்கூட்டர் போதும்' என்று கூறிவிடுவாரா? ஆளுனர்கள் சொகுசு கார் பயன்படுத்துவதைத் தவிர்ப்பார்களா? பிரதமர், தம்மிடமுள்ள ஏழெட்டு அயல்நாட்டுக் கார்களில் ஐந்தாறு கார்களை விற்றுவிடப் போகிறாரா? இவை ஏதும் நடக்கப் போவதில்லை. மாறாக, அரசாங்கம், வாகனங்களுக்காகச் செலவிடும் தொகை எக்கச்சக்கமாக அதிகரிக்கும். அரசின் இந்த அதிகப்படி செலவை, வரி என்ற வடிவத்தில் சுமக்கப் போகிறவர்கள் சராசரி மக்களே.

அரசாங்க வாகனங்களை விட்டு விட்டால் சொந்தத்தில் கார், ஸ்கூட்டர் வைத்துள்ளவர்கள் மிக மிகக் குறைவே. பெரும்பாலும் கம்பெனி வாகனங்களாக இருக்கும். அல்லது கம்பெனி அலவன்ஸ் பெற்ற வாகனங்களாக இருக்கும். இவர்கள் வாகன அலவன்ஸை அதிகரிக்குமாறு கேட்பார்கள். கம்பெனியோ, அலவன்ஸை அதிகரித்து விட்டுக் கூடவே அந்தச் செலவை ஈடுகட்ட, தான் உற்பத்தி செய்யும் பண்டத்தின் விலையை உயர்த்திவிடும். ஆக, அந்தப் பண்டத்தை வாங்கும் மக்கள்தான் அவதிப்படுவார்கள். எனவே, எந்தவிதமாகப் பார்த்தாலும் பெட்ரோல் விலை உயர்வினால் 260 கோடி ரூபாய் அதிகப்படி வருமானத்தை ஒவ்வோர் ஆண்டும் அரசுக்குக் கொடுத்து அழப்போவது நாட்டிலுள்ள சாமானிய மக்கள்தான். இது ஒரு மறைமுகமான வரி விதிப்பே.

பெட்ரோலை உபயோகிப்பது அதிகமாகி விட்டதாம்; குறைக்க வேண்டுமாம்; அதற்காக விலை உயர்வாம்! — காரணம் கூறப்படுகிறது. அவ்வாறானால் இத்தனை கார்கள், இரு சக்கர பெட்ரோல் வாகனங்கள் உற்பத்திக்கு அரசு அனுமதி அளித்தது ஏன்? தொட்டிலை ஆட்டிவிட்டுக் குழந்தையையும் கிள்ளுகிற கதைதான். இத்தனைக்கும் பெட்ரோலியப் பொருள்களின் இறக்குமதி குறைந்து, உள்நாட்டில் உற்பத்தி நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக வேறு அரசு பெருமையோடு மார் தட்டிக் கொள்கிறது! உலகெங்கும் பெட்ரோல் விலை சரிய, இங்கு மட்டும் ஏறுகிறது!

பட்ஜெட்டுக்கு முன்னால் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொருள்களின் விலைகளை உயர்த்தி, அதன் மூலம் அரசுக்கு வருவாய் தேடிக் கொள்வதும், பட்ஜெட்டில் வரிகளைக் கடுமையாக விதிக்காமல் தவிர்த்து நல்ல பெயர் சம்பாதித்துக் கொள்ள முயல்வதும் வாடிக்கையாகி விட்டது. இது ஒரு ஏமாற்று வேலையே. 'பெட்ரோல் விலை உயர்ந்தால் நமக்கென்ன?' என்று சாமானிய மக்கள் எண்ணி ஏமாந்து போகிறார்கள்.

இன்றுள்ள மிகப் பெரிய பிரச்னை உற்பத்திக்கு உதவாத இனங்களில் கோடி கோடியாக அரசு செலவழிப்பதாகும். பணவீக்கமும் விலைவாசி உயர்வும் இதன் உடன் விளைவுகளே. அதனைக் கட்டுப்படுத்துவதற்குப் பதில் — சிக்கனத்தைக் கையாள்வதற்குப் பதில் — ஊதாரிச் செலவினங்களுக்கு ஏற்ப வருவாயை அதிகரித்துக் கொள்வதையே குறியாகக் கொண்டிருக்கிறது மத்திய அரசு. ஆனால் லட்ச லட்சமாக வரிப்பணத்தைச் செலவிட்டு, லட்சத்தீவுகளில் விடுமுறை கொண்டாடும் பிரதமரிடம் நாம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

பெட்ரோல் விலை உயர்வு, ஆர். கே. லக்ஷ்மண் தமது கார்ட்டூனில் கூறுவது போல, பணவீக்கம் என்ற நெருப்பை அணைக்கப் பெட்ரோலை ஊற்றுகிற காரியமே!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



* பலமா? பலவீனமா?

நீங்கள் கேட்டவை — தராசு



* தனிக்கட்சி

ஜெயலலிதா தனிக்கட்சி தொடங்குவாரா?

* அர. மணிவண்ணன், சென்னை — 16.

? ஜெயலலிதா தனிக் கட்சி (எம். ஜி. ஆர். அ. இ. அ. தி. மு. க.) தொடங்குவாரா?

! ஊஹும். அப்படிச் செய்தால் கட்சியை உடைத்ததாக முத்திரை குத்தி விடுவார்களே! கட்சிக்குள்ளிருந்தபடியே போராடி அதனைத் தனதாக்கிக் கொள்ள முயல்வது தான் 'கரண்ட் ஃபாஷன்.' வழிகாட்டியவர்: வி. பி. சிங்.

* எஸ். ராஜேஷ், ஸ்ரீரங்கம்.

? அரசியலில் பல ஆண்டுகள் அனுபவம் இருந்தும் சுயபலம் அறியாமல் ஜானகி அம்மாள் அணியை எதிர்க்கத் துணிந்த நெடுஞ்செழியன் பற்றி ...?

! ஒரு கட்சியைச் சேர்ந்த இருவர் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுவதில் தவறேதுமில்லை. பார்க்கப் போனால் அது உட்கட்சி ஜனநாயகத்தில் வரவேற்கப்பட வேண்டிய விஷயம். ஆனால் அதனைக் கௌரவமான முறையில் செய்யவில்லை என்பதுதான் வருத்தமளிக்கும் விஷயம். எம். எல். ஏக்களைச் சுதந்திரமாக இயங்க விட்டுத் தலைவரை முறைப்படி தேர்ந்தெடுக்க அனுமதித்து அவர்களின் தீர்ப்புக்கு இருவரும் தலை வணங்கியிருந்தால் தமிழகம் தலைநிமிர்ந்திருக்கும்; கட்சிக்கும் தலைகுனிவு தவிர்க்கப்பட்டிருக்கும்.

* எஸ். ஆர். லதா, அய்யம்பேட்டை.*

? மறைந்த முதல்வரின் இறுதி ஊர்வலத்தின் போது சகோதரி ஜெயலலிதாவுக்கு இழைக்கப்பட்ட அவமானம் தாய்க்குலத்துக்கே இழைக்கப்பட்ட அவமானமில்லையா? மாதர் சங்கங்களும் இதர மகளிர் அமைப்புக்களும் கண்டனம் தெரிவிக்காதது ஏன்?

! உங்கள் ஆதங்கத்தை நானும் பகிர்ந்து கொள்கிறேன். உட்கட்சி விவகாரத்தில் கருத்து மாறுபாடுகள் எப்படியானாலும் ஜெயலலிதா அன்று நடத்தப்பட்ட விதம் அநாகரிகமானது; துச்சாதனத்தனமானது. மாதர் சங்கங்கள் குறைந்தபட்சம் ஒரு கண்டனத் தீர்மானமாவது நிறைவேற்றலாம்.

* சபா இராஜேஸ்வரன், குளத்தூர்.

? கல்கிக்கு அனுப்பப்படும் படைப்புக்கள் ஏற்கப்படாத போது எந்தவொரு தகவலும் இன்றித் திருப்பி அனுப்பப்படுகிறது. ஆறுதலுக்காவது, "தேர்வு பெறாததால் திருப்பி அனுப்பப்படுகிறது" என்று ஒரு வரி எழுதி அனுப்பக் கூடாதா?

! அத்தகைய கடித இணைப்பைத் தபால் துறையின் விதிமுறைகள் அனுமதிக்கவில்லை.

* ஆர். வேலுமணி, கடலூர் — 2.

? 'நமக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளைக் கெட்ட கனவாக மறந்து ஒன்று சேருவோம்' என்று ஜானகி அம்மாள் அறிக்கை விடுத்துள்ளது எதைக் காட்டுகிறது? பலமா? பலவீனமா?

! சட்டசபைக் கட்சித் தலைமையைப் பிடித்து விட்ட பலம்; சட்டசபைப் பெரும்பான்மையைப் பிடிக்க முடியாமல் போய் பலவீனமடைந்து விடுவோமோ என்ற பயம் — இரண்டும்தான்!

* ப. சுகுமார் ராஜ், தூத்துக்குடி.

? 'எம். ஜி. ஆர். இறந்தால் நானும் இறந்து விடுவேன்' என்றாரே கோவி மணிசேகரன்? மன்னிக்கவும், விகாரமான எண்ணத்தோடு கேட்கவில்லை...

! மன்னிக்கவும். விவகாரமாக்க விரும்பவில்லை.

* ஆர். ராஜா, சீர்காழி.


? 'தமிழகத்தில் இ. காங்கிரஸ் பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படும்' என்று மூப்பனார் கூறியிருப்பது பற்றி?



* சுயபலம் அறியாமல்...

* நாற்றுக்கு நூறு!





* சந்தோஷ வேதனை!



* செய்யத் தவறிய பணி...

! சந்தோஷம்: ஆனால் அதிலேயே அவர் திருப்தி அடைந்து விடுவது வேதனை!

*** போத்தனூர்புலிச் சோழன், கோவை—45.**

? வாங்கும் சக்தி ரூபாய்க்குக் குறைந்து போய்விட்ட இன்றைய நிலையில் வருமான வரி விலக்கு வரம்பை ரூ. 18,000—லிருந்து உயர்த்தினாலென்ன?

! நிச்சயமாக உயர்த்தப்பட வேண்டும்; பட்ஜெட் என்ன சொல்கிறதோ, பார்ப்போம்!

*** கே. வேங்கடசுப்பிரமணியம், குடியாத்தம்.**

? சட்டசபையில் தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு முன் அமைச்சரவைப் பட்டியலை அளிப்பது நியாயமான செயலா?

! நியாயமே. சட்டசபை ஆளும் கட்சியின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று தலைவராகவும் முதலமைச்சராகவும் ஆன ஒருவர், அமைச்சரவை அமைக்கும் தகுதி பெற்று விடுகிறார். சட்டசபைப் பெரும்பான்மை என்பது தமது கட்சியை மட்டுமின்றி இதர சட்டசபைக் கட்சிகளையும் அரவணைத்துச் செல்கிற அவரது ஆற்றலை உள்ளடக்கிய விஷயம்.

*** கு. கணேசன், சென்னை — 15.**

? தமிழகத்தில் முதன் முதலாக ஒரு பெண் முதலமைச்சர் ஆவது குறித்து உங்கள் கருத்து?

! அவர் தலைமைப் பதவியை அடைந்த விதம் வேதனை தருவதாக இருக்கும் போது, முதல் பெண் முதலமைச்சர் என்பது மட்டுமே சாதனையாகி விடாது.

*** கே. கணேஷ், சென்னை — 6.**

? எம். ஜி. ஆரின் பெருமையையும் புகழையும் குழிதோண்டிப் புதைப்பதில் எந்தக் கோஷ்டி வெற்றி பெறும் என்று நினைக்கிறீர்கள்?

! ஒரு தலைவரின் பெருமையும் புகழும் அவர் வாழ்நாளில் அவர் செய்தவை, செய்யத் தவறியவை ஆகியவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றனவேயன்றி வாரிசுகள் அல்லது வாரிசுப்போட்டி நடத்துகிறவர்களால்பாதிக்கப்படுவதல்ல. உட்கட்சி ஜனநாயகத்தை வளர்த்து ஒரு நல்ல வாரிசு உருவாக வழி வகுக்காத அளவில் எம். ஜி. ஆர். ஒரு முக்கியமான ஜனநாயகப் பணியைச் செய்யத் தவறியவராகிறார்.

*** கே. ஜி. எப். பழனிச்சாமி, பெங்களூர் —25.**

? 'இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இருப்பது அதன் பலத்தினால் அல்ல; எதிர்க்கட்சிகளின் பலவீனத்தினால்' என்ற ஹெக்டேயின் கூற்று எத்தனை சதவீதம் உண்மை?

! நூற்றுக்கு நூறு!

*** சி. மணி, புத்தனாம்பட்டி.**

? 'ஆட்சி போனாலும் கவலையில்லை; அ.தி.மு.க. கட்சிதான் முக்கியம்' என்று ஜெயலலிதா பேசியிருப்பது குறித்து...?

! அனுதாப அலை பொங்கும் இந்நேரத்தில் கட்சியைத் தனதாக்கிக் கொண்டால் ஆட்சி தன்னால் தன் மடியில் வந்து விழும் என்று எதிர்பார்க்கிறார்.

*** கா. ஜயாறன், கடலூர்.**

? புனைபெயரில் எழுதுகிறேன். கெஜட்டில் பெயரை மாற்றிக் கொள்ளவில்லை. புனைபெயரில் கையொப்பமிட்டுச் சன்மானம் பெறலாமா?

! புனைபெயரில் எழுதலாம். ஆனால் சன்மானத்தைச் சொந்தப் பெயரில் பெறுவதே நல்லது. இதில் வேறு இடைஞ்சல்கள் இருக்கும்போதுதான் பலர் தங்கள் மனைவி பெயரில் எழுதிச் சன்மானத்தையும் மனைவி பேரிலேயே பெறுகிறார்கள்!

*** ஆர். பி. திருஞானம், கொரட்டி.**

? ஊழலின் பிறப்பிடம் எது?

! அரசிடம் அதிகாரக் குவிப்பு; மக்களிடம் அதிகாரக் குறைப்பு.

*** ரூ. 15 பரிசு பெறுபவர்:**

எஸ். ஆர். லதா,
கனரா வங்கி,
அய்யம்பேட்டை
— 614 201.

சரியாக ஓராண்டுக்கு முன்பு, புதுக்கோட்டை மாவட்டப் பிரச்னைகள் பற்றி நாம் வெளியிட்ட முதல் கல்கி இதழில் (18.1.87) 'ஐயா, புகையை நிறுத்துங்க... இல்லேன்னு துளி விஷத்தைக் குடுத்திடுங்க...' என்ற தலைப்பில், திருச்சிக்கு அருகிலும் புதுக்கோட்டை மாவட்ட எல்லை ஆரம்பத்திலுமுள்ள இச்சிக்காமலைப்பட்டி என்னும் கிராமத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சாயப் பட்டறைகளிலிருந்து வெளியாகும் புகையின் பாதிப்பைப் பற்றிக் கவர் ஸ்டோரியே வெளியிட்டிருந்தோம். கூடவே அக்கிராமத்திலிருக்கும் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியின் மேற்கூரையில் பாதி இல்லாமல், இருந்ததையும், உட்கார்ந்து படிக்கும் தரையும் குண்டும் குழியுமாகக் கிடந்தது பற்றியும் வெளியிட்டிருந்தோம். இப்போது எப்படி?


பள்ளிக்கூடத்தின் தரை சமதளமாகச் சரி செய்யப்பட்டு, மேற்கூரையிலும் புதிய ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளைப் போட்டு ஜமாய்த்து விட்டார்கள். ஆனால் சாயப்பட்டறைகளிலிருந்து வெளிவரும் புகை மட்டும் இன்னும் நிறுத்தப்பட்ட பாடில்லை. காரணம், அது குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டு விட்டதால், நீதிமன்றம்தான் தீர்ப்பு வழங்க வேண்டும் என்ற நிலை.

அடுத்ததாக நாம், காவேரி நகரிலுள்ள காவேரி மில்லும், நமண சமுத்திரத்திலுள்ள லட்சுமி சண்முகா நூற்பாலையும் மூடிக் கிடப்பதால், அந்த மில்களில் வேலை பார்த்த தொழிலாளர்கள், வேலையின்றிப் பட்டினி கிடப்பது பற்றிக் கவர் ஸ்டோரி வெளியிட்டிருந்தோம். இப்போதும் நிலைமை மாறவில்லை.

காவேரி நகர் சென்று பல தொழிலாளர்களையும் சந்தித்தபோது, "நீங்கள் முன்பு வந்து சென்றதை விடவும் இப்போது பட்டினிச் சாவுகள் அதிகரித்திருக்கின்றன. பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் டூ படிக்கும் எங்கள் குழந்தைகள் தேர்வுக் கட்டணம் கூடச் செலுத்த முடியாத அவலம். மறுபடியும் மில்லைத் திறக்கும் உத்தேசம் இல்லாத அரசு, குறைந்தபட்சம் எங்களுக்குச் சேர வேண்டிய ஃப்ராவிடண்ட் நிதி போன்றவற்றையாவது விரைவில் கொடுத்துச் செட்டில் செய்யலாம். அதற்கும் காலம் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை தொழிலாளர் குடும்பங்கள் அனைத்தும் ஒரேயடியாகப் பட்டினியால் செத்துப் போய் விட்டால் பிறகு ஏதும் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது; அதனால் பணம் மிச்சமாகும் என்று அரசு நினைக்கிறதோ என்னவோ..." என்று விரக்தியின் விளிம்பில் நின்று முறையிட்டார்கள்.

இதே அவலம்தான் நமண சமுத்திரம் லட்சுமி சண்முகா நூற்பாலைத் தொழிலாளர்களுக்கும். இதுதொடர்பாக அரசுதான் முடிவெடுக்க வேண்டும் என்பதால், மாவட்ட அதிகாரிகள் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கும் நிலையில்தான் இருக்கிறார்கள்.

கலெக்டர் மாறினாலும் கவனம் மாறவில்லை!



* ஒன்றியத் துவக்கப்பள்ளி: மேற்கூரை புதிது.




சரி, மாவட்டக் கலெக்டரும் மற்ற அதிகாரிகளும் செய்து முடித்த காரியங்கள்தான் என்ன?

•• நாம் குறிப்பிட்டிருந்தபடி அம்புலி ஆற்றில் ஓர் அணை கட்ட 15.28 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

•• கே. புதுப்பட்டியில் பணியாற்றும்

* அம்புலி ஆறு: அணை கட்ட நிதி தயார்.

டாக்டர்களான மகாராணி மற்றும் கணேஷ் ஆகியோர் வரும் நோயாளிகளைச் சரிவரக் கவனிப்பதில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் விசாரித்தபோது, டாக்டர் மகாராணியின் மேலுள்ள குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டு அவர் மாற்றப்பட்டு விட்டார். டாக்டர் கணேஷ் இப்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார். புதுக்கோட்டையிலுள்ள தலைமை மருத்துவமனையிலும் கலெக்டர் அடிக்கடி திடீர் 'செக்—அப்' செய்து டாக்டர்களின் நடவடிக்கைகளைக் கவனிக்கிறாராம்.




* இச்சிக்காமலைப்பட்டி: புகை நிற்கவில்லை.


•• வேள்வரை கிராமத்திற்கு இப்போது திரீஃபேஸ்மின் இணைப்புக்கொடுக்கப்பட்டு ஐந்து குதிரைச் சக்தியுள்ள மோட்டாரைக் குடிநீர்க் கிணற்றில் பொருத்தியுள்ளார்கள்.

•• கீரமங்கலத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் கட்டப்பட்ட 'கைமுறைக் காகித அலகு பணிக்கூட'த்திற்குத் தேவையான இயந்திரங்கள் இன்னும் வந்து சேராததால், அவை வரும் வரை இயங்கட்டுமே என்று, ஒரு சிறு நூற்பாலையை அக்கட்டடத்தில் ஏற்படுத்திச் சுமார் முப்பது பெண்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டுள்ளது.

•• ஆலங்குடி தாலுகாவிலிருக்கும்பூவரசக்குடி மக்கள் தொன்றுதொட்டுப்பயன்படுத்தி வந்த பாதையை ஆக்கிரமித்திருந்தவர்களிடமிருந்து கைப்பற்றி, மறுபடியும் மக்கள் உபயோகத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள்.



* ராஜகோபாலபுரம்: இன்னும் மாறவில்லை




* வேள்வரை கிராமம்: மோட்டார் பொருத்தப்பட்டு விட்டது!

•• செப்பனிடப்படாமலிருந்த மேற்பனைக்காடு — ஆவிங்குடி ஊர்களுக்கிடையிலான சுமார் நான்கு கி. மீ. சாலை தற்போது செப்பனிடப்பட்டுவிட்டது. அலங்கம்பட்டி கிராமத்திற்கும் சாலை வசதி செய்யப்பட்டுள்ளது.

•• பல்லவராயன்பட்டியில் இயங்காமலிருந்த சித்த மருத்துவமனை தற்போது இயங்க ஆரம்பித்துள்ளது.

•• பல்வேறு இடங்களில் உடைப்பெடுத்திருந்த கண்மாய்கள் ஆர். எல். ஜி. பி. திட்டத்தின் மூலம் சரி செய்யப்பட்டதோடு, பலருக்கும் அத்திட்டத்தில் வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.



* காவேரி மில்: பட்டினி தொடர்கிறது...

இப்படி நாம் சுட்டிக் காட்டிய பல பிரச்னைகளுக்குப்புதுக்கோட்டை மாவட்டத்தில் தீர்வு காணப்பட்டிருந்தாலும் இன்னும் தீர்வு காணப்படாத பிரச்னைகளும் இல்லாமல் இல்லை. அதற்கு என்ன காரணம்? தற்போதைய மாவட்டக்கலெக்டரான க. இளங்கோவனைச் சந்தித்துக் கேட்டோம்.

"புதுக்கோட்டையிலுள்ள இராஜகோபாலபுரத்தில் இன்னும் சாலைகள் சீர் செய்யப்படவில்லை. இந்த விசிட்டில் நாங்கள் சென்ற போதும் அதே நிலையைத்தான் கண்டோம். "கல்கியில் வெளிவந்த பிறகும் நாங்கள் மனுக் கொடுத்துப் பார்த்து

* ஞான ஆரோக்கியம்: அதிகாரிகள் உதவ வேண்டும்.



* முத்துராஜ்: மனுமேல் மனு...



விட்டோம். ஒன்றும் நடக்கவில்லை'' என்கிறார் இராஜகோபாலபுரம் வீட்டு வசதி வாரியக்குடியிருப்புச்சங்கத்தின்செயலாளர் முத்துராஜு.

''வீட்டு வசதி வாரியம் நல்லபடியாகச் சாலைகள் அமைத்து ஒப்படைத்தால்தான் நகராட்சி அதைத்தன் பொறுப்பில்எடுத்துக் கொள்ளும். மேற்கொண்டு பராமரிக்கும். அதற்கான முயற்சிகளை நாங்கள் எடுத்துக் கொண்டுதான் வருகிறோம்.''

''புதுக்கோட்டையிலுள்ள இளைஞர்கள் கால் பந்தாட்டச் சங்கத்தினருக்கு விளையாட்டு மைதானத்தில் இரும்பாலான கோல் கம்பங்கள் தேவை என்னும் அவர்களின் முறையீட்டைத் தெரிவித்திருந்தோம். அதன்படி அதிகாரிகள் ஏதும் செய்யவில்லையாம். புதுக்கோட்டை இந்தியன் வங்கிதான் ஆயிரத்து முந்நூறு ரூபாய் செலவழித்து இரும்பு கோல் கம்பங்களை வாங்கித் தந்திருக்கிறது. எப்படியோ அப்பிரச்னை தீர்ந்தது. மேலும் அவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் தற்போதைய மைதானம் நத்தம் புறம்போக்குத்தான் என்று அதிகாரிகள் உறுதி செய்து சான்றிதழ் கொடுத்தால், மத்திய அரசு மூன்று லட்ச ரூபாய் நிதி தருவதற்குத் தயாராய் இருக்கிறதாம். அதிகாரிகள் உதவ வேண்டும் என்கிறார் அந்த அமைப்பைச் சேர்ந்த ஞான ஆரோக்கியம்.''

''அவர்கள் இதுவரை என்னிடம் வந்து முறையிடவில்லை. வந்து சந்தித்தால் விஷயங்களை ஆராய்ந்து உடனடியாக ஆவன செய்கிறேன்.''

''புதுக்கோட்டை பஸ் நிலையத்திலுள்ள சைக்கிள் ஸ்டேண்டில் அச்சடிக்கப்பட்ட முப்பது பைசாக் கட்டணச் சீட்டைக் கொடுத்துவிட்டு, நாற்பது பைசா வசூலிக்கும் அநியாயம்தான் இன்னமும் நடந்து கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள்!''

''கவனிக்கிறேன்.''

''நன்றி!''

''நான் இந்த மாவட்டத்தின் கலெக்டராகப் பொறுப்பேற்று ஐந்தாறு மாதங்கள்தான் ஆகின்றன. இடையில் எனக்குச் சிறிது உடல் நலனும் குன்றியிருந்தது. எனினும் நீங்கள் முன்பு சுட்டிக் காட்டியிருந்த பிரச்னைகள் தொடர்பான நடவடிக்கைகள் ஏதும் பாதிக்கப்படவில்லை. ஒவ்வொரு குறையையும் களையச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டேதான் இருந்தார்கள் — இருக்கிறார்கள்.

''நீங்கள் முன்பு சுட்டிக் காட்டியிருந்த கொப்பனாப்பட்டியில் இயங்கி வந்த 'சதர்ன் டிரேடிங் ஏஜென்ஸீஸ்' பற்றிக் காவல் துறையினர் ஆராய்ந்தபோது, அதன் உரிமையாளரைக் காண முடியவில்லை. அவர் ஏதேனும் ஒரு வெளி மாநிலத்தில் இருக்கிறாரா என்பதைக் கண்டறிய — பிற மாநிலக் காவல் துறையினரின் ஒத்துழைப்பைக் கோர வேண்டும். ஆனால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து காவல் துறைக்கு நேரடியாகப் புகார் ஏதும் வராததால் சட்டப்படி செயல்பட முடியவில்லை. அப்படி யாராவது புகார் கொடுத்தால் சம்பந்தப்பட்டவர்கள் எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வர நமது மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் தயாராய் இருக்கிறார். இதே போல் இதர அதிகாரிகளின் ஒத்துழைப்பும் இருப்பதால்தான், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்பட வேண்டிய 1,320 குடியிருப்புகள் சென்ற ஆண்டு அக்டோபர் மாதத்திலேயே கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நீங்கள் சுட்டிக் காட்டி, இன்னும் முடியாத பிரச்னைகளுக்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வரும் என்பதைக் கல்கி வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்!'' என்று உறுதி கூறி முடித்தார் கலெக்டர் இளங்கோவன்.



* க. இளங்கோவன் : புது கலெக்டர்.

— பிரின்ஸ்

படங்கள்: கே. வி. ஆனந்த்

அடுத்த இதழில்...

* மீட்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு மீண்டும் துயரம்!


— கவர் ஸ்டோரி

மற்றும்

* நெல்லை, சேலம் மாவட்டரீ — விசிட் கட்டுரைகள்...



உங்கள் குழந்தைக்கு ஊட்டுங்கள் காய்கறிகளின் சிறந்த சத்தூட்டத்தை!



முன்பே-பக்குவப்படுத்தப்பட்டது

ஃபாரெக்ஸ்®-வெஜ்




6 மாதம் முதல்

புதிய ஃபாரெக்ஸ்-வெஜ். இது, வைட்டமின் வளம் செறிந்த காய்கறிகளான காரட், தக்காளி மற்றும் பச்சைப் பயற்றின் இயற்கையான ஊட்டச்சத்துக்களைக் கொண்டதாகும்.

இது, நன்றாக, முன்பே - பக்குவப்படுத்தப்பட்டது. ஆகவே இது, குழந்தையின் மென்மையான வயிற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றதாகும்.

ஃபாரெக்ஸ்—சுவையுடன் வளரும் வழி



இதோ ஃபாரெக்ஸ் வளர்ச்சி வழி: 1. பால் சேர்த்த ஃபாரெக்ஸ் சீரியல் 2. ஃபாரெக்ஸ்-வெஜ் 3. ஃபாரெக்ஸ்-ஸ்

GX/31/203 TML

மாட்டு வண்டி இல்லாமல் நாட்டின் நிலை உயராது!

சாதாரணமாக, இந்த விஞ்ஞான யுகத்தில் மாட்டு வண்டி என்றாலே பலருக்கும் கொஞ்சம் இளப்பமாகத்தான் தோன்றும். ஆனால், இந்தியாவிலேயே அதிக அளவு முதலீட்டைக் கொண்டிருக்கும் இந்தியன் ரயில்வேஸுக்கு அடுத்தபடியான முதலீட்டை உள்ளடக்கிக் கொண்டிருப்பது, இந்த மாட்டு வண்டிகள்தான் என்பது அவர்களுக்குத் தெரியாது!

ஆம்; ஆண்டொன்றுக்குச் சுமார் நாற்பத்தோராயிரம் கோடி டன் பொருள்கள் மாட்டு வண்டிகள் மூலமாகத்தான் இந்தியாவில் இடம் பெயருகின்றன. இவை மட்டும் இல்லையென்றால் ஒரு நாளுக்கு ஒரு லாரி ஐம்பது டன் எடையுள்ள பொருள்களை எடுத்துச் சென்றால்கூட இன்னும் பத்து லட்சம் லாரிகள் அதிகம் தேவைப்படும்.

இப்படி மாட்டு வண்டிகளின் தேவை எத்துணை அவசியமோ அப்படி அதன் சரித்திரமும் அத்துணை தொன்மையானது. கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மெசபடோமியாவில் இந்த மாட்டு வண்டிகள் உபயோகத்திலிருந்திருக்கின்றன. சுமேரிய நாகரிகத்திலும் சிந்து சமவெளி நாகரிகத்திலும் மாட்டு வண்டிகளின் பங்கு முக்கியமானதாக இருந்திருக்கிறது. பிரிவுத் துயரால் வாடும் தலைவியின் துன்பநிலையை விளக்கக் கரைந்துகொண்டிருக்கும் உப்பைக் கொண்ட உப்பு வண்டியை உதாரணம்காட்டுகிறார் குறுந்தொகைப் புலவர் ஒருவர். அந்த அளவுக்கு இலக்கியச் சிறப்பும் வாய்ந்தவை இந்த மாட்டு வண்டிகள்.

இருப்பினும் இந்த மாட்டு வண்டிகளால் பிரச்னைகளும் இல்லாமல் இல்லை. இரும்பு வளையங்களைக் கொண்ட மரச் சக்கரங்களால் ஆன மாட்டு வண்டி ஒன்று ஓராண்டு காலம் ஒரு சாலையில் சென்றால், அந்த வண்டியால் அச்சாலை, அதே கால அளவில் நூறு ரூபாய் செலவழித்து ரிப்பேர் செய்யுமளவுக்குச் சேதமடைகிறது என்று கணக்கிட்டார் மாட்டுவண்டிகளைப்பற்றிக்கடந்த 54—களில் ஆராய்ச்சி செய்த டாக்டர் என். எஸ். ராமசாமி.

ஒரு வண்டியால் இத்தனை சேதம் என்றால் ஒன்றரைக் கோடி மாட்டு வண்டிகளால் எவ்வளவு சேதம் என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் மலைப்பாக இருக்கும்.


இந்தச் சேதத்தைத் தடுக்கும் வகையில்தான் டன்லப் இந்தியா, ரூர்கேலா பொறியியல் கல்லூரி, உணவு மற்றும் விவசாயக் கழகம் ஆகியவை ஒன்று சேர்ந்து மரச் சக்கர வண்டிகளுக்குப் பதிலாக டயர் சக்கர வண்டிகளைக் கண்டுபிடித்தன.

டயர் சக்கர வண்டிகளால் சாலைகளுக்குச் சிறிதும் சேதம் இல்லையென்றாலும் இந்தியா முழுமையுமுள்ள சுமார் ஒன்றரைக் கோடி மாட்டு வண்டிகளில் கணிசமான பகுதி டயர் சக்கர வண்டிகளாக உருமாற்றம் பெற்ற போது, மரச் சக்கர வண்டிகளை நம்பித்தொழில்செய்துகொண்டிருந்ததச்சர்களில் சுமார் மூன்று லட்சம் பேர் தங்கள் வேலை வாய்ப்பை இழக்க நேரிட்டு விட்டது. டயர் வண்டி என்பது முழுக்க முழுக்கத் தொழிற்பட்டறைகளின் தயாரிப்பாகி விட்டதால் கிராமத் தச்சர்களோடு சேர்ந்து, மர வண்டிகளுக்கு அச்சாணி போன்றவற்றைச் செய்து கொடுத்துக் கொண்டிருந்த கொல்லர்களும் தங்கள் வேலை வாய்ப்பை இழக்க நேரிட்டது.

அந்தச் சமயத்தில் அரசு கொஞ்சம் புத்திசாலித்தனமாக நடந்திருக்குமானால் இந்த அவல நிலையைத் தவிர்த்திருக்கலாம். எப்படியெனில், இந்த டயர் வண்டித் தயாரிப்புக்குப் பெரிய தொழில் நுட்ப அறிவு ஏதும் தேவையில்லை என்பதால் இத்தொழிலுக்குப் பழைய கிராமத் தொழிலாளர்களையே பயிற்சி கொடுத்துத் தயார் செய்திருக்கலாம். ஆனால் செய்யவில்லை.

சரி, போனதுதான் போகட்டும். இப்போதுள்ள சுமார் ஒன்றரைக் கோடி

• அடிக்கடி நடக்கும்......





* ஜாஸ்லின் தம்பி



* வண்டி ஓட்டும் சங்க உறுப்பினர்கள்.

மாட்டு வண்டிகளையும் நம்பியிருக்கும் — வண்டி ஓட்டுனர்கள் உள்படச் சுமார் மூன்று கோடிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நலனிலாவது அரசு அக்கறை கொண்டுள்ளதா என்றால், அதுவும் ''சுத்தமாக இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்'' என்கிறார் விழுப்புரத்தைத் தலைமை இடமாகக் கொண்டு இயங்கும் மாட்டு வண்டித் தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்கத்தின் செயலாளரும் இயக்குனருமான ஜாஸ்லின் தம்பி.

''என் அப்பா மாட்டு வண்டி ஓட்டியவர். நானும் ஓட்டியிருக்கிறேன். அப்படி ஓட்டும் போது எந்த நேரத்திலும் விபத்து நடக்கும் அபாயமே அதிகம். பல வண்டியோட்டிகளும் மாடுகளும் விபத்தில் இறப்பதென்பது சகஜமாகி விட்டது. இந்நிலையில் இத்தொழிலை நம்பியுள்ள சுமார் மூன்று கோடித் தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? இவர்களுக்கு இன்ஷூரன்ஸ் போன்ற எந்த உதவியும் கிடையாது. மேலும் மாட்டு வண்டித் தொழிலாளர்கள் அனைவரும்பெரும்பாலும்பாமரர்களாகவே இருப்பதால் விபத்துக்களுக்கு வழக்குப் போட்டு, சம்பந்தப்பட்ட பஸ் அல்லது லாரி உரிமையாளர்களிடமிருந்து நஷ்டஈடு பெறும் அளவுக்குப் புத்திசாலித்தனமும் போதாது; வசதியும் போதாது. எனவேதான் நான் எம். ஏ., எம். ஃபில். படித்த நிலையிலும் இத்தொழிலாளர்களை ஒருங்கிணைத்துச் சங்கம் அமைக்க முன்வந்தேன்...'' என்று மாட்டு வண்டித் தொழிலாளர்களுக்குள்ள பிரச்னைகளைப் பற்றி விளக்க ஆரம்பித்தார் ஜாஸ்லின் தம்பி.

''உதாரணமாக விழுப்புரத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். இங்கே மாட்டு வண்டிகளை நிறுத்துவதற்கென்று தனியானதோர் இடம் கிடையாது. அதனால் வீதிகளிலேயே நிறுத்திப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் நிலை. பஸ்களுக்கும் ஆட்டோக்களுக்கும், ரிக்ஷாக்களுக்கும் ஸ்டாண்ட் இருக்கிற மாதிரி மாட்டு வண்டிகளுக்கும் ஒரு ஸ்டாண்ட் இருக்க வேண்டாமா? இப்படி எங்கள் அடிப்படைத்தேவைக்கானபோராட்டம் துவங்குகிறது.

''மாட்டு வண்டிகள் என்றால் அதை ஓட்டுபவர்கள்தான் அதைச் சார்ந்த தொழிலாளர்கள் என்பதில்லை. வண்டி மாடுகளுக்கான லாடம் அடிப்போர், லாடம் தயாரிப்போர், லாடங்களுக்கான ஆணிகள் தயாரிப்போர், அவ்வப்போது வண்டிகளில் ஏற்படும் சிறு சிறு ரிப்பேர்களைச் சரி செய்வோர் என்று தொழிலாளர் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இந்நிலையில் அத்தொழிலாளர்களுக்காக அரசு ஒரு சிறு துரும்பைக் கூட எடுத்துப் போடத் தயாராயில்லை என்பது தான் வேதனை.

''இந்தியா முழுவதிலும் உள்ள வண்டி மாடுகளுக்கான லாடம் அடிப்போரின் எண்ணிக்கை சுமார் ஏழரை லட்சம். லாடம்செய்வோரின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சம். ஆனால் இவர்கள் இரு சாராருக்கும் இடையில் நேரடித் தொடர்பு கிடையாது. லாடம் செய்வோர் லாடங்களைச் செய்து கடைகளில் வந்து விற்றுவிட்டுச் சென்று விடுகிறார்கள். லாடம் அடிப்போர் கடைகளில் வந்து வாங்கிச் செல்கிறார்கள். இடையிலுள்ள கடைக்காரர்களுக்குத்தான் லாபம்! இந்த லாபத்தை இந்தியா முழுமையும் கணக்குப் போட்டுப் பார்த்தால் ஆண்டொன்றுக்கு இந்த லாடம், ஆணி போன்றவற்றிலேயே இருபது கோடியிலிருந்து முப்பது கோடி ரூபாய் வரை இடைத்தரகர்களுக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறது சம்மட்டி ஏந்தி இரும்பை அடிக்கும் தொழி




* ......விபத்துக்கள்......



அரசியல்வாதி: எங்களுக்கு மட்டும் லஞ்சத்தை ஒழிக்க வேண்டும் என்ற ஆசை இல்லையா என்ன? நாங்களும் எதிர்க்கட்சியாக வரும்போது, நிச்சயம் லஞ்சத்தை எதிர்த்துப் போராடத்தான் போகிறோம் என்பதை அறிவிப்பதில் பெருமை அடைகிறேன்!

— ஆர். லதா.



மனைவி: நான் செய்த இட்லியைத் தின்னுட்டு நம்ம டாமி என்னைப் பார்த்தே குரைப்பது உங்களுக்கு ஆச்சரியமாக இல்லையா?''

கணவன்: ஆச்சரியமாத்தான் இருக்கு... எப்படி 'வள்'னு விழுந்து பிடுங்காம விட்டதுன்னு!

— உ. ராஜாஜி.



மானேஜர்: எங்க பாங்க் விளம்பரத்துக்குப் புதுமையா ஒரு 'ஸ்லோகன்' சொல்லுங்க, பார்க்கலாம்?

நண்பர்: உங்கள் மனைவியிடமிருந்து உங்கள் சம்பளத்தைப் பாதுகாக்க எங்கள் வங்கியிலே டெபாசிட் செய்யுங்கள்!

— ஆர். ஆர். பூபதி.

லாளி ஏழைமையால் உழல்கிறான்.

''இதேபோல்தான் டயர் வண்டிகளுக்கான டயர்களை விற்கும் வியாபாரிகளும் கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். பஸ் — லாரிகளின் பழைய, உபயோகமற்ற டயர்களை, நாற்பது ஐம்பது ரூபாய்களுக்கு வாங்கி வந்து, மேலும் நாற்பது அல்லது ஐம்பது ரூபாய் செலவு செய்து சரிசெய்து, முந்நூறு ரூபாய்க்கு மேல் வண்டிக்காரர்களிடம் விற்று ஏமாற்றுகிறார்கள்.

''இவற்றையெல்லாம் தடுப்பதற்காக இப்போது எங்கள் சங்கமே லாடம், ஆணி, டயர்கள், டியூப்கள் போன்றவற்றை வாங்கி லாப நோக்கில்லாமல் வண்டிக்காரர்களுக்கு விற்க ஆரம்பித்திருக்கிறது. இதுபோலவே மற்ற உதிரிப் பாகங்களையும் விற்க ஆரம்பித்திருக்கிறோம்.

''மேலும் செங்கல்பட்டு, அண்ணா, நெல்லை, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களிலும் எங்கள் சங்கத்தின் கிளைகளை ஆரம்பித்து, அங்குள்ளோரின் பிரச்னைகளுக்கும் தீர்வு கண்டு வருகிறோம். மாட்டு வண்டிகளுக்கு விபத்து ஏற்படும்போது, அந்த விபத்து பற்றிய வழக்குகளை எடுத்து நடத்த, ஆங்காங்கேயுள்ள வழக்குரைஞர்களின் இலவச உதவிகளையும் பெற்றுத் தருகிறோம்.

''மாட்டு வண்டித் தொழிலாளர்களோடு நின்று விடாமல், அவர்கள் குடும்பத்துப் பெண்களுக்கும் கைத்தொழில்களைக் கற்றுத் தந்து, குடும்பவருமானத்தை உயர்த்தும் முயற்சியின் முதல் கட்டமாக, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள எடையாலம் என்னும் கிராமத்தில், ஒரு பயிற்சி நிலையத்தை ஆரம்பித்துத் தற்போது அங்கே இருபது பெண்களுக்குக் கோரைப்பாய் முடையும் பயிற்சியளித்து வருகிறோம். மேலும் விபத்தில் இறக்க நேரிடும் தொழிலாளர் குடும்பங்களுக்கு எங்கள் சங்கத்தின் மூலமாக ஏதாவதொரு உதவித் தொகை கொடுக்க முடியுமா என்பது பற்றியும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்...'' என்று பிரச்னைகளையும் சங்கத்தின் செயல்பாடுகளையும் விளக்கிக் கொண்டே வந்தார் ஜாஸ்லின் தம்பி.

கடைசியில், மாட்டு வண்டித் தொழிலாளர் சங்கத்தின் பெயரில் வங்கியில் ஒரு கணக்கு ஆரம்பிக்க விழுப்புரத்திலுள்ள வங்கிகளை அணுகியபோது, 'மாட்டுவண்டித் தொழிலாளர் சங்கப் பெயரிலெல்லாம் கணக்கு ஆரம்பிக்க முடியாது' என்று வங்கியினர் மறுத்துவிட்டதை மிகவும் வேதனையோடு சொன்னார் அவர்.

ஆக, அடிமட்ட மக்களை முன்னேற்றுவதற்காகத்தான் அரசும், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் போன்ற அரசு சார்ந்த நிறுவனங்களும் என்பதெல்லாம் சுத்தப் பம்மாத்து வேலைதான் போலிருக்கிறது!

— இளங்கோவன்

படங்கள்: கே. வி. ஆனந்த்

ஆகவே,
செக்ஷன் 302 படி...

முதல் வாரத்தைத் தவற விட்டுவிட்ட சார்களுக்கும், மேடம்களுக்கும் மட்டும்:

பனி நாளின் அதிகாலை. நிலையான வேலை தேடும் வித்யா சாகர் மாம்பலம் ஸ்டேஷனில் திருச்சியிலிருந்து ரயிலில் வரும் தன் அக்கா நிவிதாவை வரவேற்கிறான். சென்னைக்கு டிரான்ஸ்ஃபர் வாங்கி வந்திருக்கும் அவளைப் பாரதி வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டலில் தங்க வைக்கிறான். வேலை விரக்தியில் பேசும் அவனுக்கு ஆறுதல் சொல்லும் நிவிதா கடிகாரம் பரிசளிக்கிறாள். நிவிதா வேலை செய்யவிருக்கும் கம்பெனியின் ரீஜனல் மானேஜர் ஷியாம் — பெண் என்றால் உடனே சகல பாகங்களிலும் சிலிர்த்துக் கொள்வான் என்பது தெரிகிறது. அனுமதி பெற்று அவனைச் சந்திக்க அறைக்குள் வரும் நிவிதாவைப் பார்த்து... அந்த முதல் விநாடியே தடுமாறுகிறான்.

'தொடரும்' என்கிற வார்த்தைக்கு முன்னால் இடம் பெற்ற கடைசி வாக்கியமாவது:

அந்தத் தடுமாற்றமே இந்தக் கதையின் ஆணிவேர்.

2

நிவிதா க்ரீம் நிறத்தில் சின்னச் சின்னக் கறுப்புப் பூக்கள் சிதறின ரூபிக்யூன் சேலை கட்டியிருந்தாள். ஸ்டைலான சிக்னக் கொண்டை. சிவப்பு நிறத்தை ஃபோகஸ் செய்து காட்டும் கறுப்பு ஸ்ட்ராப் கொண்ட ஹெச். எம். டி. கட்டியிருந்தாள். கறுப்பு ஸ்டிக்கர் பொட்டு. உறுத்தாத, இதமான, அளவான லிப்ஸ்டிக். மேலுதட்டிற்கு மேல் மிகப் பொடிசாய்ப் பூனை ரோமம். காதுகளில் மேட்சாய் சிம்பிள் ட்ராப்ஸ். கழுத்தில் மெல்லிய தங்கச் செயின்.

நிவிதாவைச் சுருக்கி வர்ணிக்கச் சொன்னால்... நிவிதா ஸ்டார் ஹோட்டல் ரிஸப்ஷனிஸ்ட் போல இருந்தாள். திருப்தியில்லையெனில்... நிவிதா புதிதாய் வேலைக்குச் சேர்ந்த ஏர் ஹோஸ்டஸ் போல இருந்தாள். பார்த்ததில்லையெனில்.... நிவிதா உங்கள் அபிமான நட்சத்திரத்தைப் போல இருந்தாள்.

தற்சமயம் ஷியாமின் அறையில் புன்னகையுடன் உள்ளே வந்து, ''குட் மார்னிங் சார்'' என்றாள்.

''மார்னிங். நீங்கதான் திருச்சி சேல்ஸ் ஆஃபீஸ்லேர்ந்து வந்திருக்கிறதா?''

''யெஸ் சார்.''

''சிட் டவுன் ப்ளீஸ்'' என்றான் ஷியாம்.

''தாங்க் யு சார்.''

நாற்காலியில் மரியாதையாக அமர்ந்தாள்.

''மிஸ். நித்யா?''

''இல்லை சார், நிவிதா.''

''யெஸ், யெஸ். நிவிதா. கேள்விப்படாத பேரு. எங்கே தங்கியிருக்கீங்க?''

''சைதாப்பேட்டையில பாரதி வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல்ல ரூம் எடுத்திருக்கேன்.''

''ஹாஸ்டல் வசதியா இருக்கா?''

''பரவாயில்லை. ரொம்ப ஓகோன்னும் இல்லை. மோசமும் இல்லை.''

''அக்கவுண்ட்ஸ்ல உங்களைப் போட்டிருக்காங்க. உங்க செக்ஷன் ஹெட் மிஸ்டர் அந்தோணி. அவரைப் பார்த்துட்டீங்களா?''

''இன்னும் இல்லை சார்.''

ஷியாம் இண்டர்காம் எடுத்து, எண் அழுத்தி, ''அந்தோணி சார், உங்க செக்ஷன்ல மிஸ். நிவிதான்னு... ஆமாம் திருச்சிலேர்ந்துதான். இன்னிக்கு ஜாய்ன் பண்ணிட்டாங்க. டேபிள் கொடுங்க. ஸ்டாஃப் எல்லாரையும் இண்ட்ரட்யூஸ் பண்ணிவிடுங்க!''

வைத்துவிட்டு, காலடியில் இருந்த காலிங் பெல்லின் ஸ்விட்சை அழுத்த... கதவைத் திறந்து கொண்டு பியூன் உள்ளே வந்தான்.

''இவங்களை அக்கவுண்ட்ஸ் செக்ஷனுக்கு அழைச்சுக்கிட்டுப் போ. போங்க மிஸ் நித்யா..., ஸாரி... நிவிதா...''

எழுந்து நின்று கைகூப்பினாள்.

''உங்களுக்கு இந்த ஆபீஸ்ல எந்த ப்ராப்ளம்னாலும் என்கிட்டே நேரா வந்து சொல்லலாம்.''

''தேங்க் யு சார்.''

''ஒன் மினிட்'' என்று மேஜை டிராயரைத் திறந்து ஒரு சின்னப் புத்தகம் எடுத்துத் தந்தான், ''மீராஜ் எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

பட்டுக்கோட்டை பிரபாகர்

டோட முழு சரித்திரமும் இதில இருக்கு. படிக்கிறதுக்கு வேறே எந்தப் புத்தகமுமே கிடைக்காத சமயத்திலே படிச்சிப் பாருங்க."

பியூனைத் தொடர்ந்து நிவிதா நடக்க... அறையை விட்டு அவள் வெளியேறும் வரை பார்த்துக் கொண்டே இருந்தான் ஷியாம். நாக்கால் கீழுதட்டைத் துடைத்துக் கொண்டான் ஈரமாக.

இன்டெர்காமில் பர்சனல் மானேஜரைத் தொடர்பு கொண்டு: "இன்னிக்கு வேலைல சேர்ந்திருக்கிற மிஸ். நிவிதாவோட பர்சனல் ஃபைல் திருச்சிலேர்ந்து வந்துடுச்சா?"

"யெஸ் சார்."

"என் ரூமுக்கு அனுப்பி வைங்க, பார்க்கணும்."

"சரி சார்."

"ஸ்க்ரிப்ளிங் பேடில் அவன் வலது கை அனிச்சையாக 'நிவிதா' என்று எழுதியது. அதன் அடுத்த வரியில் 'நிதம் தா' என்று எழுதியது. ரிசீவரை வைத்து விட்டு எழுதினதைப் பார்த்துப் புன்னகை செய்து கொண்ட ஷியாம் அந்தக் காகிதத்தைக் கிழித்துக் குப்பைக் கூடையில் எறிந்தான்.

குப்பைக் கூடையின் வயிற்றில் **'Use Me'** என்றிருந்தது.

அந்தோணி சற்று உயரம் குறைவாக இருந்தார். மேஜை மேல் ஆஷ்ட்ரே நிறையச் சாம்பலும், சிகரெட் மிச்சங்களும் வைத்திருந்தார். காரணமாகக் கறுத்த, தடித்த உதடு சிரித்தபோது பல்லெல்லாம் இடுக்குகள். பச்சையாக ஷேவ் செய்திருந்தார். நிவிதாவை, "வெல்கம் பேபி" என்றார். அவர் வயதிற்கு அது தப்பாய்ப் படவில்லை.

ஒவ்வொரு மேஜையாய் அழைத்துப் போய் அறிமுகப்படுத்தி வைத்தார்.

"சீதாராமன், பேர்தான் அப்படி. அம்பது வயசு கிழவியைக் கூட கண்ணாடியைத் துடைச்சுப் போட்டுக்கிட்டுப் பார்ப்பாரு. ஜாக்கிரதையா இருக்கணும். பயந்துடாதே பேபி, சும்மா கிண்டல். பசு மாதிரி சாது. பென்சில் சீவக்கூட பயம்."

"பெஞ்சமின். ரீஜனல் மானேஜருக்கே கம்பெனி லா சம்பந்தப்பட்ட சந்தேகம் எல்லாத்தையும் இவர் கிட்டத்தான் கேட்டுத் தெரிஞ்சுக்குவார். பார்க்கத்தான் கோமாளி மாதிரி இருக்காரேயொழிய... சச் எ ஜீனியஸ்."

"நாராயணன். முகத்தைப் பார்த்ததுமே தெரிஞ்சிருக்குமே, கமிங் ஃப்ரம் கேரளா. ஆனா தமிழ்ல கவிதை எல்லாம் வெளுத்துக் கட்டுவாரு. கிரிக்கெட் சீசன்ல பாக்கெட் ரேடியோவைக் கோத்து போட்டுக் காதில ஒட்டிக்குவாரு. தப்பே இல்லாம வேலை பாட்டுக்கு நடந்துக்கிட்டிருக்கும்."

"மேகலா. முகத்தைப் பார்த்து சந்தோஷமா, கோபமான்னு தெரிஞ்சிக்கறது கஷ்டம். போன வருஷம்தான் கல்யாணமாச்சு. இன்னும் எங்களுக்கு ட்ரீட் கொடுக்காம ஏமாத்திக்கிட்டே வருது பேபி."

"விமல் பேபி. ஸாரி. அப்படியே கூப்பிட்டுப் பழக்கமாய்டுச்சி... விமலா. மிஸ் விமலா. ஒரு நாள் லீவு போட்டாச்சுன்னு ஆபீசே ஞாயித்துக்கிழமை கடைத் தெரு மாதிரி ஆயிடும். நூத்துக் கணக்கில ஜோக்ஸ்டாக் இருக்கு பேபிகிட்டே. எல்லாம் ஏ சர்ட்டிஃபிகேட் ஜோக்ஸ்."

சின்னச் சின்ன கமெண்ட்டுகளுடன் செக்ஷன் ஸ்டாஃப்கள் அனைவரையும் அறிமுகப்படுத்திய பிறகு, நிவிதாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த மேஜைக்கு அழைத்து வந்தார்.

"உக்காரும்மா. உன்னால கம்பெனிக்கும், கம்பெனியால் உனக்கும் பெருமைகள் சேரணும்னு நான் ஜீசஸை வேண்டிக்கிறேன். மனசுல எதையும் வச்சுக்காம கொட்டிடறது என் பழக்கம் பேபி. எக்ஸ்க்யூஸ் மீ, உன்னை அப்படிக் கூப்பிடறது பிடிக்கலைன்னு தாராளமாச் சொல்லிடலாம்."

"நோ ஹார்ம். அப்படியே கூப்பிடுங்க. நீங்க என் அப்பா மாதிரி."

"அப்படியா? சந்தோஷம். அப்பா மாதிரி ஒரு அட்வைஸ் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க சார்."

"மெட்ராஸ் உனக்குப் புதுசுதானே?"

"ஆமாம்."

"ஆனா எனக்கு ரொம்பப் பழசு. அதனால சொல்றேன். இவ்வளவு மேக்கப் வேணாம். கொஞ்சம் குறைச்சிக்கோ. உன் நன்மைக்காகத்தான் சொல்றேன்."

"புரியுது சார்."

"தேங்க்ஸ். மைண்ட் யுவர் பிஸினஸ்ன்னு சொல்லிடுவியோன்னு பயந்தேன். முதல் வேலையை ஆரம்பிக்கலாமா? கடலூர் மோகன்தாஸ் ஏஜன்சீஸ் ஃபைலை எடுத்துக்கோ. இந்த ஃபைனான்சியல் வருஷ ஆரம்பத்திலேர்ந்து இன்னைய தேதி வரைக்கும் இன்வாய்ஸ் ஆகியிருக்கிற எலக்ட்ரிகல் சாமான்கள் ஐட்டம் வாரியா எண்ணிக்கை தேவைப்படுது. எடு, பார்க்கலாம்."

நிவிதா தன் அப்பாவை வணங்கிவிட்டு பேனாவைத் திறந்தாள்.

மதியம் உணவு இடைவேளையின்போது, விமலா தன் சீட்டிலிருந்து வந்து, "வாங்க, எனக்கு கேரியர் வந்துடுச்சு. ரெண்டு பேரும் ஷேர் பண்ணிக்கலாம். என். வி. சாப்பிடுவீங்கதானே?" என்றாள்.

"சாப்பிடுவேன். ஆனா... நீங்க சாப்பிடுங்களேன். காண்டீன் எதுவும் இருக்கா இங்கே?"

"இல்லே. பக்கத்திலே ஒரு மெஸ் இருக்கு. ஏற்பாடு செஞ்சிக்கிட்டா கேரியர்லேயே கொண்டாந்து தருவாங்க... நான் ஏற்பாடு செய்றேன். இன்னிக்கு என்னோட சாப்பிடுங்க. பரவாயில்லே. கேரியர் சாப்பாட்டுல ரெண்டு பேர் தாராளமாச் சாப்பிடலாம்."

அதற்கு மேல் நிவிதாவால் மறுக்க முடியவில்லை.

விமலா தன் மேஜையின் பொருள்களை நகர்த்தி வைத்துவிட்டு, இன்னொரு நாற்காலி எடுத்துப் போட்டு, கேரியரைப் பிரித்தாள்.

"உங்களுக்கு வீடு எங்கே?"

''குரோம்பேட்டை. மொஃபெட் வெச்சிருக்கேன். ஹெல்மெட்தான் பெரிய பிரச்னே. முந்தியெல்லாம் டிசைன் டிசைனு ஹேர் ஸ்டைல் செஞ்சிக்குவேன். ஹெல்மெட் வந்ததிலேர்ந்து எல்லாம் போச்சி. நிவிதாங்கிற பேர் ரொம்ப ஸ்வீட்டா இருக்குங்க.''

''நான் பொறந்தப்போ அப்பா நித்யான்னு வைக்கணும்னுங்களாம். அம்மா கவிதான்னு வைக்கணும்னுங்களாம். கடைசிலரெண்டையும்சேர்த்துநிவிதான்னு வெச்சிட்டாங்க. ஜோக் சொல்லுங்க கேக்கலாம்.''

''அய்யய்யோ, வேணுங்க. அப்புறம் என் கூட பேச மாட்டீங்க. மூஞ்சைத் திருப்பிக்கிட்டுப் போய்டுவீங்க. ரெண்டுநாள் போகட்டும். உங்க குடும்பத்தைப் பத்திச் சொல்லுங்க.''

''திருச்சிதான் சொந்த ஊர். அப்பா போஸ்டல் டிபார்ட்மெண்ட்லே வேலே பார்த்து, ரிடையராகி இறந்துட்டார். அம்மா இருக்காங்க. ரெண்டு தம்பிங்க. ஒருத்தன் பி. காம். படிச்சிட்டு மெட்ராஸ்ல ஃப்ரெண்டோட தங்கிக்கிட்டு வேலே தேடறுன். தற்காலிகமா பதிப்பகங்கள்ல புரூஃப் திருத்தறுன். இன்னொரு தம்பி திருச்சில நைன்த் படிக்கிறுன். நீங்க?''

''சொல்லிக்கிறமாதிரி இல்லேங்க. அப்பா வீடு புரோக்கர். தினம் தண்ணி. ஒரு ஃபுல் பாட்டில் வாங்கித் தந்தால் என்னேயே வித்துடத் தயார். அம்மா தமிழ் சினிமா அம்மா மாதிரி தினம் ரெண்டு தடவையாவது அழுவாங்க. ஒரு அக்கா இருக்கா, தன் மாப்பிள்ளேயைத் தேடிக்கிட்டு. ஒரு தம்பி அசோக் லேலண்ட்ல வேலே பார்க்கிறுன்...''

பிறகு பெண்கள் இருவரும் தங்களுக்குப் பிடித்த நிறம், புடைவை, நடிகர், எழுத்தாளர், பொன்மொழி என்று பேச நிறைய விஷயமிருந்தது.

மாலேயில் கட்டட வாசலில் தயாராய்க் காத்திருந்தான் வித்யா சாகர்.

''இப்ப உன் ரூமுக்குப் போறமா?''

''ஆமாம்'' என்றுன்.

''பஸ்ஸா, ஆட்டோவா?''

''என் ரூம்மேட்டோட ஸ்கூட்டர் எடுத்துட்டு வந்திருக்கேன்.''

''சரி, ஏன் தூரமா நின்னு பேசறே?''

''ஒண்ணுமில்லேயே... வா, போலாம்.''

ஸ்கூட்டர் ஓடிக் கொண்டிருக்கும் போது கேட்டான்.





பூக்களினால் நாம் அடையும் நன்மைகள்

பூக்கள் மனிதனுக்கு நல்ல மனத்தெளிவும், அழகும் நறுமணமும், ஒளியும், ஒளி நிறங்களும், உள்ளத்திற்கு உற்சாகமும், அன்பு இரக்கம் போன்ற உணர்ச்சிகளும், உடலுக்கு உறுதியும், தைரியமும், இன்னும் தியானசக்தியும், ஆன்மீக உணர்வும், மலர்ச்சியும், தீய குணங்களை மாற்றும் சக்தியும் இவற்றையெல்லாம் நமக்கு அளித்து உதவும்.

பூக்களின் பெயர்கள்	பலன்
1. மல்லிகையும், முல்லையும்	புனிதத்தன்மை தந்து சம நிலையும் அளிக்கும் நறுமணத்தை முகர்வது அவசியம். இதனால் பூமியில் மறைந்து உள்ள அதன் சாரம் இரகசிய உண்மை நாம் கிரகித்துக்கொள்ள முடிகிறது.
2. நாட்டு ரோஜாப்பூ	சரணாகதி பாவனை தந்து ஆண்டவர்பால் இனிய எண்ணமும் தந்து தியானம் வளர்க்கும்.
3. ரோஸ்கலந்த சிவப்பு ரோஜா	ஆண்டவரின் பேரன்பையே வெளிப்படுத்தும்.
4. துளசி-பூவும் இலையும்	பக்தி தரும்.
5. அரளிப்பூ	மன அமைதியும் சரணாகதியும் ஆண்டவர்பால் இனிய எண்ணமும் தந்து தியானம் வளர்க்கும்.
6. கருஞ்சிவப்பு (கிரிம்சன்)அரளிப்பூ	தவறான போக்கினைத் தடுத்து நல்வழிக்கு மாற்றிச் செலுத்தும்.
7. அல்லிப்பூ	இலட்சுமியின் பொருள்வளம் தரும்.
8. வெள்ளைத் தாமரைப்பூ	தெய்வீகப் பேருணர்வை சைத்திய சக்தியைத் தரும்.
9. மணமுள்ள கதிர் பச்சை அல்லது திருநீற்றுப்பச்சை என்னும் பூவும் காம்பும்	ஆண்டவருடன் இணைந்து இன்பம் தரும்.
10 சண்பகப்பூ	மனோ உள்ளப்பாடுகளை சீர்ப்படுத்தி அமைக்கும்.
11. மணமுள்ள மருவு இலை	ஆண்டவரின் சாக்கித்யத்தையும் உணர்வையும் தரும். வைகறை ஸ்ரீ அரவிந்த ஆசிரமம் 1986-4
12. நாகலிங்கப்பூ	அன்றாடம் கடவுளுக்கு அர்பணித்தால் பொருள் பற்றாக்குறையை நீக்கிச் செல்வத்தை கொடுக்கக்கூடிய ஒரு ஆற்றல் உண்டு.
13.மருக்கொழுந்து	வேண்டாதவற்றை விட்டுவிட்டு வேண்டியவற்றை பெற்றுக் கொள்ளலாம். இது புதிய வாழ்வை அளிக்கவல்லது.
14.விருட்சிப்பூ	வெண்மை நிறமுள்ள பூ குளுமை நிறைந்த அமைதியை உடலில் உள்ள அணுக்களில் பாய்ச்சுகின்றச் சக்திப் படைத்தது. அந்த அமைதி சேல்களை குணப்படுத்துகின்ற வல்லமை வாய்ந்தது.
15.எருக்கம்பூ	பயத்தை ஒழித்து தைரியத்தை வளர்த்துக் கொள்ளலாம்.

அடுத்த பக்கம் பார்க்க –

"எத்தனை நாளாடா சிகரெட் பழக்கம்?"

"சிகரெட்டா?"

"நான் லிஃப்டை விட்டு இறங்கினதுமே நீ அவசரமா எறிஞ்சதைப் பார்த்துட்டேன். ஏண்டா வித்யா இதெல்லாம் உனக்கு?"

"பத்து நாள் டயம் கொடுக்கா. சுத்தமா விட்டுடறேன்."

மாம்பலத்தில் இருந்த மாத வாடகை லாட்ஜிற்கு வந்து, தன் அறைக்கு அழைத்து வந்து கதவைத் திறந்தான் வித்யா சாகர்.

"என் ரூம்மேட் பெருதுரை. வயலினிஸ்ட். இளையராஜா ட்ரூப்ல இருக்கான். தங்கமான ஆளு. இப்ப வெளில போயிருக்கான்."

அறை இவள் வரவை முன்னிட்டுச் சுத்தம் செய்யப்பட்டிருப்பது தெரிந்தது. சுவர்களில் மேற்கத்தியப் பாடகர்கள் கத்திரிக்கப் பட்டு ஒட்டப்பட்டிருந்தார்கள். உறை மாட்டிய வயலின் ஆணியில் தொங்கியது. வெங்கடாசலபதி படமும் இருந்தது.

"இது நான் ஒட்டினது" என்றான் வித்யா.

ஸ்டவ்வும், கொஞ்சம் எவர்சில்வர் டப்பாக்களும் இருந்தன. கொடியில் ஹேங்கர்களில் நிறைய சட்டை, பேண்ட்டுகள் தொங்கின.

"எல்லாம் அவனோடதுதான். என் சட்டையை எல்லாம் மடிச்சி வெச்சிடுவேன். இதோட சேர்ந்து தொங்கின அவன் சட்டைக்கு மரியாதையா இருக்காது பாரு..."

நிவிதா கைப்பையைத் திறந்து இருநூறு ரூபாய் எடுத்துத் தந்தாள். "இந்தா, சட்டை வாங்கிக்க வித்யா."

"மூணு இருக்குக்கா. நான் ஒரு பேச்சுக்குச் சொன்னேன்."

"பரவாயில்லே, வாங்கிக்க."

வித்யா சாகர் டீ போட்டுக் கொடுத்தான். அரை மணி நேரம் குடும்ப விஷயங்கள் பேசினார்கள். பிறகு நிவிதா புறப்பட்டாள்.

அறையைப் பூட்டிவிட்டு, ஸ்கூட்டரில் அவளை ஹாஸ்டல் வாசலில் இறக்கி விட்டு விட்டு, அவளின் அலுவலக போன் நம்பரைக் குறித்து வாங்கிக் கொண்டு சென்றான் வித்யா சாகர்.

நிவிதா உள்ளே வந்ததும், எதிர்ப்பட்ட வார்டன், "உனக்கு ஒரு லோக்கல் போன் வந்திச்சும்மா. நம்பர் கொடுத்திருக்காங்க. நீ வந்ததும் அந்த நம்பரைக் கூப்புடச் சொன்னாங்க" என்றாள்.

"பேரென்ன சொன்னாங்க மேடம்?" என்றாள் புரியாமல்.

"விஜேத்குமார்னு சொன்னார்."

நிவிதா முகம் மாறினாள். வேகமாக போன் இருக்கும் அலுவலக அறை நோக்கி நடந்தாள் — கொஞ்சம் கோபமாக.

(தொடரும்)

இந்தத் தொடர்கதையை விடாமல் படித்து வருபவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசு பெற வாய்ப்பிருக்கிறது.

பெருமாள்புரத்தில் ஒரு பெண்

பெருமாள்புரத்திற்குள் நுழையும் போதே ரகுராமனுக்கு மெல்லிசான சங்கோஜம் எழுந்தது. பசுபதி இயல்பாய், மாப்பிள்ளைக்கே உரிய மிடுக்குடன் வந்தான்.

"ஏண்டா ரகு நடுங்கறே? எனக்குத் தான் பெண் பார்க்கப் போறோம்... உனக்கில்லை."

பசுபதியின் குரலில் கர்வம் இருந்தது. ஆண் என்கிற சுடர் விடும் கர்வம்!

வீட்டைக் கண்டுபிடித்து உள்ளே நுழைந்ததும் பெண்ணைப் பெற்றவர் வியர்த்துப் போய் வரவேற்றார். கேசரியையும் பஜ்ஜியையும் பசுபதி ரசித்துச் சாப்பிட்டான். ரகுராமனுக்குத் தொண்டைக் குழியில் சிக்கிற்று.

இந்தப் பெண்ணையாவது பசுபதிக்குப் பிடிக்குமா? வெள்ளைத் தோலையும் கடைந்தெடுத்த உடலையும் தேடுகிறவன் ஏன் மனசைப் பார்க்க மறுக்கிறான்? 'பிடிக்கவில்லை' என்று சொல்லப்படும் போது அந்தப் பெண்ணின் மனம் என்ன பாடுபடும்?

'எது பிடிக்கவில்லை — என் மூக்கா, கண்ணா நிறமா' என்று கண்ணாடி முன் மனம் ஒடியப் பார்க்க மாட்டாளா? அந்த மனசை ஏன் பசுபதி பார்க்க மறுக்கிறான்?

"நீ சுந்தரி... நீ சங்கரி..."

ரகுராமன் நினைவு கலைந்து சட்டென்று குரல் வந்த திசையை நிமிர்ந்து பார்த்தான். அவள் — அந்தப் பெண் — 'கீதாஞ்சலி'க்குள் ஆன்மாவை நுழைத்துப் பாடிக் கொண்டிருந்தாள். பசுபதி அவளையோ, அவள் குரலில் இழைந்த ஆன்ம சுகத்தையோ கவனிக்காமல் உத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"கல்பனா நல்லாப் பாடுவா."

தகப்பன், தம் மகளைக் கரையேற்றும் அலையாய்ப் பசுபதி இருக்க மாட்டானா என்ற தவிப்பில் சொன்னார்.

பசுபதி "ம்... ம்..." என்றவன், ரகுராமனைப் பார்த்து, "கிளம்புவோமா ரகு?" என்றான்.

"அப்ப... பொண்ணைப் பிடிச்சிருக்கா தம்பி?"

"ஒரு வாரத்திலே சொல்றோம்."

அக்னி நட்சத்திரம் முகத்தில் விழுந்த மாதிரி பசுபதி சொன்னான்.

"வர்றோம் ஸார்..." என்று வெளியே நடந்த போது, ரகுராமனுக்குள் மனப் பறவை குற்றச் சிறகை விரித்தது.

"ஏண்டா — உனக்குப் பிடிக்கலையா?"

ரவுண்டானா மேல் பசுபதி ஏறிக் கொண்டான்.

"அவள் முகத்தைப் பார்த்தாலே உனக்குத் தெரியலையா ரகு? சரியான திமிர்னு எழுதி ஒட்டியிருக்குது. அ...ப்...பா... என்னால அவளைக் கல்யாணம் கட்டிட்டுக் குடும்பம் நடத்த முடியாது. முடியாது. முடியாது."

"நீ வேணாம்னு சொல்றப்ப அந்தப் பொண்ணு மனசு என்ன பாடுபடும்?"

"போடா பெரிய்ய மனசு. நான் இல்லேன்னா இன்னொருத்தன். எனக்கு அவளைப் பிடிக்கலை. உடம்பைப் பாரேன். இப்பவே குண்டாகி விடுவேன்னு பயமுறுத்தற நிலைல இருக்கா. இதுல மாநிறம் வேற."

"முடிவா நீ என்ன சொல்லப் போறே?"

"என்னைக்காவது ஒரு நாள், நேரம் இருக்கிறப்ப அவள் அப்பாவுக்கு போன் பண்ணி, 'சில சொல்ல முடியாத காரணங்களால் பிடிக்கலை ஸார். ஐ யாம் ஸோ ஸாரி'ன்னு சொல்லப் போறேன்."

ரகுராமன் அவன் தோள்களைப் பிடித்து நிறுத்தினான்.

"வேணாம். நான் சொல்றேன். பக்குவமாச் சொல்றேன்."

"பசுபதி சிரித்தான்.

"எப்படி?"

"அந்தப் பொண்ணு கல்பனாவையே நேர்ல பார்த்துப் பக்குவமா, அவங்க மனசு கஷ்டப் படாம சொல்லப் போறேன்."

பசுபதி தலையில் அடித்துக் கொண்டான்.

ரகுராமன் தனக்குள் பொங்கும் சிரிப்பை அடக்கினான். துக்கமான சந்தோஷச் சிரிப்பு!

இவனுக்கு நிச்சயமாய் 'நீ சுந்தரி'யை ரசித்திருக்க முடியாது. அது ஆன்மா. இவன் தேடுவது உடல்.

இரண்டு நாட்கள் கழித்து ரகுராமன் கல்பனா வேலை செய்யும் ஆபீஸுக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவளை

தமயந்தி

நேரில் சந்திக்க விரும்புவதாய்ச் சொன்னான்.

தயங்கினாள். முடிவில் திக்கித் திக்கிச் சம்மதித்தாள்—சாயங்காலம் கடற்கரையில் பார்க்கலாம் என்று.

ரகுராமனுக்கு இயல்பாய் இருக்க முடியவில்லை. கடற்கரையில் மணலை எடுத்துக் கைகளில் குத்தும் வரை அழுத்தினான். அலையை வெறித்தான். ஈர மணலில் காலை அழுத்தமாய்ப் பதித்தான்.

கல்பனா கொஞ்ச நேரம் கழித்து வந்தாள். தொலைபேசியில் தயங்கியவள் இப்போது தயக்கம் இல்லாமல் யதார்த்தமாய்ச் சிரித்துப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

"ஏதோ பேசணும்னு சொன்னீங்களே?''

கல்பனா கேட்டாள். அந்தக் குரலில் இளக்கமோ, மிருதுத்தன்மையோ இல்லை. கடமை மட்டும் ஜொலிப்பதாய்ப் பட்டது.

பசுபதி கல்பனாவுக்குத் திமிர் என்று சொன்னது நிஜமோ? இவள் நான் கூறப் போகும் செய்தியில் அதிர்ந்து போய்விட மாட்டாளோ?

ரகுராமன் கல்பனாவை நேருக்கு நேர் பார்த்தான். சுமாரான அழகுதான். மாநிறம். அழகு என்று சொல்லவும் முடியாமல் அசிங்கம் என்று தீர்மானிக்கவும் முடியாத ஒரு ஜாடை.

"சொல்லுங்க மிஸ்டர் ரகுராமன்.''

உணர்வில்லாத கண்கள் வெறித்தன.

"கவிதை எழுதுவீங்கன்னு கேள்விப்பட்டேன் கல்பனா.

"நேரா விஷயத்துக்கு வரத் தத்தளிக்கிறீங்க போலிருக்குது.'' —நேராய் அம்பு எய்கிறாள்.

"பசுபதியோட ரெண்டு நாட்கள் முன்னாடி உங்க வீட்டுக்கு வந்திருந்தேன்.''

"பார்த்தேன்.''

"வந்து... பசுபதிக்கு இந்த 'அலையன்ஸ்'ல அவ்வளோ இஷ்டமில்லை.''

கல்பனா தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

"இவ்வளோதானா? நான் கிளம்பலாமா மிஸ்டர் ரகுராமன்?''

இவளிடம் ஏதோ ஓர் அசாதாரணம் மறைந்திருக்கிறது. எங்கே? உள்மனத்திலா? ஒருவிதமான உணர்வும் ஏற்படாமல்... எப்படி... எப்படி...? சாத்தியப்படுகிறது?


"கொஞ்சம் உங்க கூட பேசலாமா கல்பனா? — உங்களுக்கு ஆட்சேபணை யில்லைன்னா?''

எழுந்து நின்று புறப்படும் நிலையில் இருந்த கல்பனா மறுபடி உட்கார்ந்தாள்.

"சொல்லுங்க.''

"வெளிப்படையாப் பேசப் போனா... நான் சொன்னதைக் கேட்டு உங்களுக்கு எந்த உணர்ச்சியுமே ஏற்படலையா கல்பனா?''

"ம்ஹூம். இதுல ஏற்பட என்ன இருக்கு? அவருக்கு என்னைப் பிடிச்சிருக்காது. வேணாம்னு சொல்ல அவருக்கு உரிமை இருக்குது. அவ்ளோதான்.''



"அவ்ளோதான்னா நினைக்கிறீங்க? நீங்க எப்படியும் கனவுகளை வளர்த்திட்டு இருந்திருப்பீங்க. அது கலையும் போது... கஷ்டமாயில்லே?''

"கனவே இல்லையே. என்னைப் பொறுத்த வரைக்கும் பொண்ணு பார்க்கிற சம்பவங்கிறது காலைல எழுந்து ஆபீஸுக்குப் போகிற மாதிரி ஆயிட்டுது.

"ஆச்சரியமா இருக்குது.''

"எது?''

"இப்படி உணர்வோ, கனவோ இல்லாத நீங்க கவிதை எழுதறது: பாட்டுப் பாடறது. நான் இதுவரைக்கும் பார்த்திருக்கிற கவிஞர்கள் எல்லாருமே சாதாரண மனுஷங்களை விடக் கொஞ்சம் அதிகமா உணர்ச்சி உடை

யவங்களா இருப்பாங்க...''

கல்பனு புன்னகை செய்தாள். தூரத்தில் ஓடும் சிறுவர்களையும், வானமும் கடலும் சேரும் இலக்கையும் வெறித்துப்பார்த்தாள்.

''எல்லா உணர்ச்சியையும் சேர்த்து வெச்சுக் கவிதையில கொட்டிடறேன் மிஸ்டர் ரகுராமன்.''

''கால் மீ ரகு — உங்களுக்கு ஆட்சேபனை யில்லேன்னு. பேர் சுருங்கச் சுருங்க மனுஷங்க நெருங்குகிற மாதிரி பிரமை ஏற்படும்.''

''ஓ. கே. ரகு. நீங்க வெளிப்படையாப் பேசறதுனுல நானும் மனசைத் திறந்து சொல்றேன். நான் அழகில்லேதான். ஒத்துக்கிறேன். கனவு கண்டுட்டு அது கலேஞ்சு போற வேதனை இருக்குதே... அது பயங்கரம்னு தெரியும். அதனுல கனவே இல்லாம வாழ்ந்தா, முடிவு நமக்குச் சாதகமாயிருந்தா ரொம்பச் சந்தோஷமா இருக்கும். 'நினைக்கவே இல்லேயே இப்படி நடக்கும்' னுங்கிற சந்தோஷம் அலேஅலேயா மனசுல புரளும். சாதகமாயில்லேன்னு... 'இது இப்படித்தான் நடக்கும்னு விதிபோலிருக்குது' ன்னு உதறிட்டுப்போயிடலாம்...''

''அதுக்குன்னு உணர்வே இல்லாம இருக்க முடியுமா?''

''கனவு இருந்தாத்தான் மனுஷனுக்கு உணர்வு வரும். 'நம்ம வாழ்க்கை இப்படி இப்படி இருக்கணும்' னு ஒரு எண்ணம் இருந்தாக் கூட போதும். அதுவே அரைக் கனவா ஆயிடுது. என்னை முதல் முதலாப் பெண் பார்க்கும் போது, எனக்கும் கனவு இருந்துச்சு. இப்ப... சுத்தமா இல்லே. இல்லவே இல்லேன்னு கூடச் சொல்லலாம்.''

இத்தனை காயங்களால்தான் மரத்துப் போயிருக்கிருளா?

ரகுராமனின் நெஞ்சுக்குள் பாரம் அடைத்தது. மௌனமாய் உட்கார்ந்திருந்தான்.

''என்னைப் பிடிக்கலேன்னு பசுபதி சொன்னுர்னு நீங்க சொன்ன போது, சிரிப்பு வந்துச்சு. ஆனு... அதே சமயம் என் கவிதை பிரசுரமாகலேன்னு வைங்க — அழுவேன். ஏன்னு, என் கனவையெல்லாம் அதுல செலுத்த ஆரம்பிச்சிட்டேன். இதையெல்லாம் நான் யார்கிட்டேயும் சொல்றதில்லே, ரகு. நீங்க வெளிப்படையா நாடகமாடாம 'ஏன் இப்படி கல்லா இருக்கிறே' ன்னு உங்க மனசுலே இருந்ததைக் கேட்டது பிடிச்சிது...''

''புரியுது கல்பனு. உங்க வேதனை எல்லாம் புரியுது...''

''தாங்க்ஸ் ரகு. இனிமே முடிஞ்சாப் பார்ப்போம். வரட்டுமா?''

ரகுராமன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

''ஒரு நிமிஷம் கல்பனு.''

''என்ன?''

''உங்களுக்குக் 'கீதாஞ்சலி' பிடிக்குமா? அன்னிக்கி ரசிச்சுப் பாடினீங்களே?''

கல்பனு சிநேகமாய்ப் புன்னகை செய்து கண்களை மூடிக் கொண்டாள்.

''என் ஆன்மாவோட அந்தப்புரத்திலே புல்லாங்குழல் ஊதுகிற சொர்க்க சந்தோஷம் அது ரகு. கிளம்பறேன்.''

கல்பனு நடந்து போனுள். மறையும் வரை அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் ரகுராமன்.

அரை மணி நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்து விட்டு எழுந்தான்.

மனத்தில் ஒரு தாமரை பூத்தது.


வீட்டிற்குப் போய் அம்மாவிடம், 'பெருமாள்புரத்தில் கல்பனு என்கிற பெண் கல்யாணத்திற்கு இருக்கிருள்' என்று சொல்ல வேண்டும்.

அவன்: எனது விரசாகசம் என்கிற தலைப்பில் என் கட்டுரை இந்தப் பத்திரிகையில் வெளியாகியிருக்கு!''

இவன்: அப்படியா! கட்டுரை எதைப் பற்றி?

அவன்: பஞ்சாப்பில் பத்துக் கிலோமீட்டர் தூரம் நான் பஸ்ஸில் பயணம் செய்ததைப் பற்றி!''

— உ. ராஜாஜி.





''ஹலோ... பகலவன் பத்திரிகை ஆசிரியர் பரமசிவமா? நான் அமைச்சர் பேசறேன்... விரைவில் நான் அமைச்சரவையிலிருந்து நீக்கப்படுவேன்னு எழுதியிருக்கீங்களே, அது உண்மையா...?''

— கடுவை கோபால்சாமி.



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் 44

யானை மிரண்டது!

மேற்கண்டவாறு முடிவு ஏற்பட்டதும் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி பார்த்திபேந்திரனைத் தனியாக அழைத்துச் சென்று சிறிது நேரம் அந்தரங்கமாகப் பேசினார். பின்னர், தம்முடன் வந்த படை வீரர்களுக்குத் தனித்தனியே சில கட்டளைகளைப் பிறப்பித்தார்.

பார்த்திபேந்திரன் இளவரசரிடம் விடைபெற்றுக் கொண்டான். ''ஐயா! நான் வந்த காரியம் நிறைவேறாமல் வெறுங்கையோடு திரும்புகிறேன். இதற்காகக் கரிகாலர் என்னை மிகவும் கோபித்துக் கொள்ளப் போகிறார். ஆயினும் என்ன செய்வது? தாங்கள் பிடிவாதமாக இருக்கிறீர்கள். என் பேரில் குற்றமில்லை. இதற்கு இங்குள்ளவர்கள் எல்லாரும் சாட்சி!'' என்றான்.

இளவரசர் ''அவ்வளவு அவசரமாகப் போக வேண்டுமா? தாங்களும் சேநாதிபதியோடு தொண்டைமானாறு வரை வந்துவிட்டுப் போகக் கூடாதா?'' என்று கேட்டார்.

''அந்தப் பாதகத்துக்கு நான் உடந்தையாயிருக்க மாட்டேன். நான் வந்த கப்பல் திரிகோணமலையில் நிற்கிறது. அங்கே போய்க் கப்பல் ஏறிக் கூடிய சீக்கிரம் நான் காஞ்சிக்குப் போக வேண்டும். கரிகாலரிடம் நடந்ததைச் சொல்ல வேண்டும்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

பின்னர் வந்தியத்தேவனைப் பார்த்து, ''வல்லத்தரையரே! என்னுடன் நீ காஞ்சிக்கு வரவில்லையா?'' என்று கேட்டான்.

வந்தியத்தேவன் சிறிது திடுக்கிட்டு நின்றுவிட்டு, ''இல்லை; இளவரசருடன் போக விரும்புகிறேன்'' என்றான்.

''நல்லது; என்னுடன் வராததற்காகப் பிறகு வருத்தப்படுவாய்!'' என்று சொல்லிவிட்டுப் பார்த்திபேந்திரன் புறப்பட்டான். சேநாதிபதியின் கட்டளையின்படி அவருடன் இன்னும் சில வீரர்களும் கிளம்பிச் சென்றார்கள்.

வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடி

யானிடம், "அந்தப் பல்லவன் கூறியதன் பொருள் என்ன? தன்னுடன் வராததற்காக நான் வருத்தப்படுவேன் என்று ஏன் கூறினான்? உமக்கு ஏதாவது தெரிகிறதா?" என்று கேட்டான்.

"சேநாதிபதியும் அவனும் கலந்து பேசி ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறார்கள்! அதன் விவரம் இன்னதென்று தானே சீக்கிரத்தில் தெரியும். உண்மையில், இப்போது ஏற்பட்டிருக்கும் சங்கடத்துக்கு மூல காரணம் இந்தக் கொடும்பாளூர்க் கிழவர்தான்!" என்றான்.

"அது எப்படி? சேநாதிபதி என்ன செய்திருக்க முடியும்?"

"எல்லாம் அவருடைய வேலைதான். அவருடைய குடும்பப் பெண் ஒருத்தி பழையாறையில் வளர்கிறாள் என்பது உனக்குத் தெரியும் அல்லவா?"

"நன்றாய்த் தெரியும். வானதி தேவியைத்தானே சொல்கிறீர்?"

"ஆமாம்; அந்தப் பெண்ணை இளவரசருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து இலங்கை அரசராக இவருக்கு முடிசூட்டி விட வேண்டும் என்று சேநாதிபதிக்கு ஆசை. புத்த குருக்களைக்கொண்டு இலங்கைக்கிரீடத்தை அளிக்கும்படி ஏவியவர் இவர்தான். இவருடைய முயற்சியை இரகசியமாக வைத்திருக்கவாவது தெரிந்ததா? அதுவும் இல்லை. செய்தி தஞ்சைக்கு எட்டி விட்டது. அதனால்தான் முதன் மந்திரி அநிருத்தர் இலங்கைக்கு வந்தார்; என்னையும் இளவரசரிடம் அனுப்பி வைத்தார். வந்தியத்தேவா! எது எப்படியானாலும் நம்முடைய உயிரை நாம் பத்திரமாகக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இளவரசர் இலங்கைச் சிம்மாசனத்தை ஏற்க மறுத்தது பற்றி நீயும் நானும் தஞ்சையில் சாட்சி சொல்லும்படி நேரிடலாம்!"

இதற்குள் சேநாதிபதியின் காரியங்கள் முடிந்து விட்டன. அவருடன் வந்திருந்த படை வீரர்களில் நாலு பேரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் வெவ்வேறு திசையில் புறப்பட்டுச் சென்றார்கள்.

கடைசியாக இளவரசரின் கோஷ்டியும் புறப்பட்டது. இளவரசர், சேநாதிபதி, வந்தியத்தேவன், ஆழ்வார்க்கடியான் இவர்களுடனே மேற்கூறிய நாலு வீரர்களும் உயர்ந்த சாதிக் குதிரைகள் மீதேறி வடதிசை நோக்கிப் புறப்பட்டார்கள்.

இவர்களைப் பின்தொடர்ந்து பூங்குழலி ஏறியிருந்த யானை, ஜாம் ஜாம் என்று கம்பீரமாக நடந்து வந்தது. பூங்குழலியைத் தவிர அதன் மீது யானைப் பாகன் ஒருவன் மட்டுமே ஏறிக் கொண்டிருந்தான்.

கொஞ்ச தூரம் இராஜபாட்டை வழியாக அவர்கள் சென்றார்கள். ஆனால் இராஜபாட்டையில் பிரயாணம் செய்வது சுலபமாக இல்லை. வழியெங்கும் ஜனக்கூட்டமாயிருந்தது. இளவரசர் அவ்வழியில் வருகிறார் என்பதும் எப்படியோ ஜனங்களுக்குத் தெரிந்து போயிருந்தது. இலங்கைத் தீவின் வடபகுதியில் அப்போதெல்லாம் தமிழர்களே அதிகமாக வசித்து வந்தார்கள். அங்கங்கே ஜனங்கள் கும்பல் கும்பலாக நின்று "இளவரசர் அருள்மொழிவர்மர் வாழ்க!" "சேநாதிபதி கொடும்பாளூர் வேளார் வாழ்க!" என்று கோஷித்தார்கள். சில இடங்களில் ஜனங்கள் குதிரைகளைச் சூழ்ந்து கொண்டு பின் தொடர்ந்து வந்தார்கள். வரவரப் பின்தொடர்ந்து வரும் கூட்டம் அதிகமாகிக்கொண்டுவந்தது. குதிரைகள் வேகமாகப் போக முடியவில்லை.

இளவரசர் சேநாதிபதியுடன் இதைப் பற்றி விவாதித்ததன் பேரில் இராஜபாட்டையிலிருந்து விலகிக் காட்டு வழியில் போவதென்று தீர்மானமாயிற்று. ஜனங்களை மெதுவாகக் கழித்துக் கட்டிவிட்டு அவர்கள் காட்டு வழியில் பிரவேசித்தார்கள். காட்டு வழியில் இயற்கை இடையூறுகள் காரணமாக வேகமாகப் போக முடியவில்லை. கொஞ்ச தூரம் போனதும் தாமரைத் தடாகம் ஒன்று தென்பட்டது. அதன்

கரைக்கு வந்ததும் எதிர்க் கரையில் ஒரு பெரிய ஜனக்கும்பல் நிற்பது தெரிந்தது. இவர்களைப் பார்த்தவுடனே அந்த ஜனக்கும்பலின் மத்தியிலிருந்து தாரை, தப்பட்டை, கொம்பு, பேரிகை முதலிய வாத்தியங்களின் பெருமுழக்கம் கிளம்பிற்று.

"கொஞ்சம் இருங்கள்; நான் போய் அவர்கள் யார் என்று பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று கூறிவிட்டுச் சேநாதிபதி குதிரையைத் தட்டிவிட்டுக் கொண்டு முன்னதாகச் சென்றார். சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து, "இளவரசர் இந்த வழி வருவது எப்படியோ பக்கத்துக் கிராமவாசிகளுக்குத் தெரிந்து போயிருக்கிறது. இளவரசருக்கு மரியாதை செய்யத்தான் அவர்கள் வந்திருக்கிறார்கள்!" என்றார்.

ஜனங்கள் நெருங்கி வந்தார்கள். இளவரசரைச் சுற்றிச் சுற்றி வந்து அடங்காத ஆர்வத்துடன் பார்த்தார்கள். பலவகை ஜயகோஷங்களையும் வாழ்த்தொலிகளையும் கிளப்பினார்கள். அவற்றில் "ஈழத்தரசர் அருள்மொழி வர்மர் வாழ்க!" என்ற கோஷம் மட்டும் பிரதானமாயிருந்தது.

இளவரசர் முகத்தில் புன்னகை மலர்ந்தது. அந்த ஜனக்கூட்டத்திற்குத் தலைவன் என்று தோன்றிய ஒருவனை அருகில் அழைத்தார். "இவர்கள் எதற்காக எனக்கு ஈழத்து அரசுப் பட்டம் கட்டுகிறார்கள்?" என்று கேட்டார். அவன் மிகப் பணிவுடன், "அரசே! பன்னெடுங்காலமாக இந்த ஈழ நாடு நிலையான அரசு இல்லாமல் அவதிப்பட்டு வருகிறது. பொன்னியின் செல்வர் ஈழ நாட்டின் மன்னர் ஆக வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. இந்நாட்டில் வாழும் எல்லா ஜனங்களுடைய விருப்பமும் அதுதான். தமிழர்கள், சிங்களவர்கள், சைவர்கள், பௌத்தர்கள், துறவிகள், இல்லறத்தார் எல்லோரும் அதையே விரும்புகிறார்கள்" என்று கூறினான்.

இளவரசருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் விருந்து அளிக்க அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். விருந்தை ஏற்றுக் கொள்ளாமல் போக முடியவில்லை. விருந்துண்ட பிறகு விடைபெற்றுப் புறப்படுவதற்கு வெகு நேரமாகிவிட்டது.

இளவரசருக்கு உபசாரங்கள் நடந்து கொண்டிருந்த சமயத்தில் வந்தியத் தேவனும் ஆழ்வார்க்கடியானும் தனித்துப் பேசிக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது.

"தம்பி! பார்த்தாயா? இதெல்லாம் சேநாதிபதியின் சூழ்ச்சி என்று தெரியவில்லையா? முன்னாலேயே அவசரமாகச் செய்தி அனுப்பி இந்த உபசாரங்களையெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறார்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"சேநாதிபதியின் ஏற்பாடுதான் என்று ஒருவாறு தெரிகிறது. ஆனால் இந்தச் சூழ்ச்சியின் நோக்கம் என்னவென்று தெரியவில்லையே? இப்படியெல்லாம் இந்தத் தீவில் வாழும் ஜனங்கள் சொல்வதைக் கேட்டு இளவரசர் நேற்று வேண்டாம் என்று மறுத்த சிம்மாசனத்தின் பேரில் இன்றைக்கு ஆசை கொண்டு விடுவார் என்ற எண்ணமா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"அது ஒரு நோக்கமாயிருக்கலாம். அதைக் காட்டிலும் முக்கியமானது நம் பிரயாணத்தைத் தாமதப்படுத்துவதுதான்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"பிரயாணத்தைத் தாமதப்படுத்துவதினால் சேநாதிபதி என்ன பலனை எதிர்பார்க்கிறார்?"

"அது எனக்கும் தெரியவில்லை; ஆனால் சீக்கிரத்தில் தெரிந்துதானே ஆக வேண்டும்? இளவரசருடைய முகத்தைப் பார்! அவருக்கு இவையெல்லாம் பிடிக்கவில்லையென்று தெரிகிறதல்லவா?"

வந்தியத்தேவன் இளவரசரின் முகத்தைப் பார்த்தான். ஆத்திரமான வார்த்தைகளைப் பேசும்போதுகூட மலர்ந்து விளங்கிய அவருடைய முகத்தில் இப்போது எள்ளும் கொள்ளும் வெடித்தன. புருவங்கள் நெரிந்திருந்தன. கண்கள் ஆழ்ந்த சிந்தனையைக் காட்டின.

அதே சமயத்தில் பூங்குழலி அத்தாமரைக் குளத்தின் இன்னொரு கரையில் தன்னந்தனியாக உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். எதிர்பாராதபடி அவளுக்கு இந்தப் பிரயாணம் உற்சாகம் தருவதாக இல்லை.

பிரயாணத்தின் போது இளவரசருடன் தனித்திருக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமென்று நினைத்தாள். அவர் தன்னுடனே அளவளாவிப் பேசுவார் என்று எண்ணினாள். தன் மனத்தில் பொங்கும் உணர்ச்சியில் ஒரு சிறிதேனும் வெளியிடலாம் என்று ஆசைப்பட்டாள். அதற்கெல்லாம் சமயமே கிட்டாது போலிருக்கிறது. இளவரசரைச் சுற்றி ஒரே கூட்டமாகவே இருக்கிறது.

அவரை எதிரிகளிடம் கொண்டுபோய் ஒப்புவித்த பழி ஒன்றுதான் மிஞ்சும் போலும். அந்தப் பழி தனக்கு எதற்காக ஏற்பட வேண்டும்? ஏன் இங்கிருந்தபடி ஒருவருக்கும் தெரியாமல் ஓடிவிடக் கூடாது? சேநாதிபதியின் கோபத்திலிருந்தாவது தப்பியபடி ஆகும்!

சே! சேநாதிபதியின் கோபம் என்னை என்ன செய்து விடும்? யாருடைய கோபந்தான் என்ன செய்து விடும்? அதற்கெல்லாம் நான் பயப்படவில்லை. ஆனால் என்னுடைய எண்ணமெல்லாம் ஏன் மண்ணோடு மண்ணாக வேண்டும்? இந்த நெஞ்சில் உள்ள தீ எத்தனை நாள் இப்படி என்னைத் தகித்துக் கொண்டிருக்கும்? — இந்த உடம்பில் உயிர் எதற்காக இருக்கிறது? திடீரென்று ஒரு இடி விழுந்து என்னைக் கொன்றுவிடக் கூடாதா? — இப்படி எத்தனையோ ஆயிரம் தடவை ஆசைப்பட்டாகி விட்டது. பயன் ஒன்றுமில்லை. இந்த உயிர் தானாகப் போகப் போவதில்லை. நானாக ஏதேனும் செய்து கொண்டால்தான் இந்த உயிர் போகும்!......

ஆ! இது என்ன? கனவு காண்கிறேனா? இல்லை, கனவு இல்லை! அங்கே அந்தப் பாழும் மண்டபத்துக்குப் பக்கத்தில் இளவரசருடைய சிநேகிதர்



என்னிடமிருந்து பிடுங்கி எறிந்த கத்தி இதோ வந்து என்னருகில் விழுந் திருக்கிறதே? இதை யார் எறிந்திருப் பார்கள்? யாரோ அவருடைய பகை வர்கள்தான் எறிந்திருப்பார்கள்! என்னைக் கொல்லுவதற்குத்தான் எறிந்திருப்பார்கள்! என்ன துரதிர்ஷ் டம்! என் மேலே விழாமல் சற்று நகர்ந்து விழுந்து விட்டதே! — இது வும் நல்லதற்குத்தான். கையில் இந்தக் கத்தி இருக்கட்டும். அவருக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்றிய பிறகு, அவரை, அந்தப் பாதகர்க



ரிடம் கொண்டு போய் ஒப்புவித்த பிறகு. அவர் எதிரிலேயே இந்தக் கத்தியினால் குத்திக் கொண்டு இறந்து விடுகிறேன். சீச்சீ! எதற்காக அவர் மனத்தை அப்படிப் புண்படுத்த வேண்டும்? அவர் கப்பலில் ஏறிப் போன பிறகு, படகில் ஏறி நடுக்கடலில் சென்று அங்கே குத்திக் கொண்டு சாகலாம். என் அருமைக் கத்தியே! நீ திரும்பி வந்தாயல்லவா? உன்னை அனுப்பியவர்களுக்கு வந்தனம்.

ஒருவேளை இளவரசர் மேலே எறிய எண்ணி இதை எறிந்திருப்பார்களோ? ஆம்; அவருக்கு வழியில் எத்தனையோ அபாயங்கள் நேரலாம் என்று சேநாதிபதி கூடச் சொன்னாரே?...... அப்படி ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கக் கூடாதா? அவர் பேரில் குறி பார்த்து எறிந்த கத்தி என் நெஞ்சில் விழக் கூடாதா? அப்படி விழுந்து அவருக்காக நான் உயிர் துறக்கும்படி நேரக் கூடாதா? அவ்விதம் நேர்ந்தால், நான் இரத்தம் பெருக்கி உயிர் துறக்கும் சமயத்தில்!......

பூங்குழலியின் மனத்தில் ஒரு விசித்திரமான தோற்றம் ஏற்பட்டது. அவளுடைய மார்பில் கத்தி பாய்ந்திருந்தது. அதிலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. இளவரசர் ஓடி வந்தார். ''ஐயோ! எனக்காக உயிர் துறக்கிறாயா?'' என்று கேட்டார். பூங்குழலியின் உள்ளம் பூரித்து நெஞ்சிலிருந்து இரத்தம் அதிகமாகப் பீறிட்டு வந்தது. இளவரசர் அவளை வாரி எடுத்துத் தம் மடியில் போட்டுக் கொண்டார். அவளுடைய நெஞ்சிலிருந்து பெருகிய இரத்தம் அவர் உடம்பையும் உடைகளையும் நனைத்தது. பூங்குழலி கலகலவென்று சிரித்தாள். ''இளவரசே! இப்போதாவது என் நெஞ்சில் உள்ளது என்னவென்று தெரிந்து கொண்டீர்களா?'' என்று கேட்டாள். ''அடி பாவி! அது எனக்கு முன்னமே தெரியுமே? இதற்காகவா உயிரை விடுகிறாய்?'' என்று இளவரசர் அலறினார். பூங்குழலிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. உரத்த சப்தம் போட்டுச் சிரித்தாள்!......

''ஏ, பைத்தியமே!'' என்ற குரலைக் கேட்டுப் பூங்குழலி நிமிர்ந்து பார்த்தாள். எதிரில் வந்தியத்தேவன் நின்று கொண்டிருந்தான்.

''இளவரசர் ஏற்கெனவே கோபமாயிருக்கிறார்; பிரயாணம் தாமதப்படுகிறது என்று. உன்னால் வேறு தாமதம் வேண்டாம். சீக்கிரம் எழுந்து வா!'' என்றான் வந்தியத்தேவன்.

பூங்குழலி சிரித்துக் கொண்டு எழுந்து ஓடிப் போய் யானையின் மீது ஏறிக் கொண்டாள். கத்தியை நெஞ்சுடன் அணைத்துக் கொண்டு கொஞ்சினாள்.

காட்டு வழியில் மேலும் கொஞ்சதூரம் சென்ற பிறகு எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பிரயாணிகளின் வலது பக்கமிருந்த அடர்ந்த காட்டிலிருந்து 'விர்' என்ற சத்தத்துடன் ஓர் அம்பு பாய்ந்து வந்தது. இளவரசரைக் குறி பார்த்து அது எய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்த அம்பை விட வேகமாக இளவரசர் குதிரையின் தலைக் கயிற்றை இழுத்துத் திருப்பினார். அம்பு அவருக்கு வெகு சமீபமாகச் சென்று அவருக்கு அப்பால் வந்து கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானுடைய தலைப்பாகையில் பாய்ந்து அதைக் கொத்திக் கொண்டு சென்றது.

ஆழ்வார்க்கடியான் தலையைத் தடவிக் கொண்டு வியப்புடன் பார்த்தான்.

சேநாதிபதி பூதிவிக்கிரமகேசரி திடுக்கிட்டுப் போய்விட்டார்.

எல்லாருமே திகைத்து நின்றார்கள்.

பூங்குழலியோ அந்த அம்பு தன் பேரில் விழுந்து தன்னைக் கொன்றுவிடவில்லையே என்று வருத்தப்பட்டாள்.

சிறிது திகைப்பு நீங்கிய பிறகு சேநாதிபதி ''இளவரசே! பார்த்தீர்களா? தங்களைப் பாதுகாப்பின்றித் தனியே அனுப்பியிருந்தால் எவ்வளவு பிசகான காரியமாயிருக்கும்?'' என்று சொல்லிவிட்டுக் காவலுக்குவந்தவீரர்களைக் காட்டுக்குள் புகுந்து தேடச் சொன்னார். அவர்கள் சிறிது நேரம் தேடிவிட்டுத் திரும்பி வந்து, ''யாரும் அகப்படவில்லை'' என்றார்கள்.

சேநாதிபதி மேலே பிரயாணத்தைப் பற்றி ஏற்பாடு செய்யத் தொடங்கினார். "இளவரசரை நடுவில் நிறுத்தி நாம் நாலு புறமும் சூழ்ந்து வரவேண்டும்" என்று கூறி, வியூகம் வகுக்க ஆரம்பித்தார்.

அப்போது இளவரசர், "சேநாதிபதி! ஒரு வேண்டுகோள்!" என்றார்.

"இது என்ன வார்த்தை? கட்டளையிடுங்கள்!" என்றார் சேநாதிபதி.

"நான் உயிரோடு தஞ்சை செல்ல விரும்புகிறேன். நான் குற்றமற்றவன் என்பதை என் தந்தையிடம் மெய்ப்பிக்க விரும்புகிறேன்......"

"தங்கள் தந்தை தங்களை ஒரு நாளும் சந்தேகிக்க மாட்டார், இளவரசே!"

"தந்தை மட்டுமல்ல; மக்கள் எல்லாரும் ஒப்புக் கொள்ளும்படி நிரூபிக்க விரும்புகிறேன். அந்தக் காரியத்தை நிறைவேற்றிய பிறகு என் உயிரைப் பற்றிச் சிறிதும் கவலைப்பட மாட்டேன். அதற்கு முன்னால் வழியிலேயே உயிர் துறக்க விரும்பவில்லை."

"ஐயா! தங்கள் உயிருக்கு ஆபத்து வருவதாயிருந்தால் அந்த க்ஷணமே இந்தக் கொடும்பாளூர் வாளை என் நெஞ்சிலே செலுத்திக் கொள்வேன்."

"அதில் ஒன்றும் பயனில்லை. சோழ நாடு மகத்தான நஷ்டம் அடையும்."

"தங்களை இழப்பதைக் காட்டிலும் பெரிய நஷ்டம் சோழ நாட்டுக்கு வேறு என்ன இருக்க முடியும்? தங்களுக்கு ஆபத்து வருவதற்குக் காரணமாயிருந்து விட்டு அப்புறம் இந்தக் கொடும்பாளூர்க் கொடும்பாவி ஒரு கணமும் உயிரை வைத்துக் கொண்டிருப்பேனா?"

"அப்படியானால் என் உயிரை நான் காப்பாற்றிக் கொள்ளுவது இன்னும் முக்கியமாகிறது."

"அதைக் காட்டிலும் முக்கியமானது இந்த உலகத்தில் வேறு எதுவும் இல்லை."

"அதற்கு எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது."

"சொல்லுங்கள், ஐயா!"

"குதிரை மேல் பிரயாணம் செய்யும் வரையில் சற்று முன் வந்த அம்பைப் போல் வேறு அபாயங்கள் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கும்."

"நடந்து போகலாம் என்று சொல்லுகிறீர்களா? அல்லது......"

"எனக்கு யானைகளின் பாஷை நன்றாய்த் தெரியும்; யானைகள் நான் சொன்னபடி கேட்கும் என்று தாங்கள் அறிவீர்கள் அல்லவா?"

"ஆம், ஐயா! யானைப் பாகன் வேஷம் பூண்டு இந்த இலங்கைத் தீவில் பெரும் பகுதியைத் தாங்கள் சுற்றிப் பார்த்திருப்பதும் எனக்குத் தெரியும்."

"ஆகவே நான் சொல்கிறது என்னவென்றால், மறுபடியும் சிறிது நேரம் நான் யானைப் பாகன் ஆகிறேன். இப்போது யானையை நடத்துகிறவன் கொஞ்ச தூரம் என் குதிரை மேல் ஏறிக் கொண்டு வரட்டும்."

இதைக் கேட்ட சேநாதிபதி சிறிது மனத் தடுமாற்றமடைந்ததாகத் தோன்றியது. இளவரசருடைய யோசனைக்கு யாராவது ஆட்சேபம் சொல்ல மாட்டார்களா என்று ஆவலுடன் சுற்று முற்றும் பார்த்தார். ஆனால் எல்லாரும் கம்மென்று இருந்தார்கள்.

"ஐயா! யானைப் பாகனுக்குக் குதிரை ஏறத் தெரியுமோ, என்னமோ?"

"தெரியாவிட்டால், நடந்து திரும்பிப் போகட்டும்."

"அந்தப் பெண் பெரிய சங்கோசியாயிருக்கிறாளே? அவள் தங்களுக்குச் சரிசமமாக யானை மீது உட்கார மாட்டேன் என்று சொன்னால்....."

"கீழே குதித்து நடந்து வரட்டும்."

"தங்கள் சித்தம், இளவரசே!"

இளவரசர் உடனே குதிரை மீதிருந்து குதித்தார். யானையின் அருகில் சென்றார். பூங்குழலியின் கரிய கண்கள் ஆர்வத்தினால் நீண்டு வியப்பினால் அகன்று அவரை நோக்கின. யானைப் பாகனை இறக்கிவிட்டுத் தான் யானை மீது பாய்ந்து அதன் கழுத்தில் உட்கார்ந்து கொண்டார்.

தடைப்பட்ட பிரயாணம் மறுபடியும் ஆரம்பமாகியது.

பூங்குழலி புளகாங்கிதம் அடைந்

தாள். யானையின் முதுகின் மேலிருந்து மேகங்களின் மீது பாய்ந்தாள். வான வெளியில் உலவினாள். சொர்க்கத்தை எட்டிப் பார்த்து அதன் விவரிக்க முடியாத இன்ப சுகத்தின் இயல்பு இது வென்பதை ஒருவாறு உணர்ந்து அறிந்தாள்.

ஆகா! இதுவென்ன தேவகானமா? இவ்வளவு இன்பமாயிருக்கிறதே? இல்லை, இல்லை, தேவகானத்துக்கு இவ்வளவு இனிமை ஏது? இளவரசர் அல்லவா பேசுகிறார்?

"சமுத்திரகுமாரி! என்னுடன் இந்த யானை மீது தனியாக இருப்பது உனக்கு அருவருப்பாயிருக்கிறதா?"

"ஏழு ஜன்மங்களில் நான் செய்த தவத்தினால் இந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்கிறது, பிரபு!"

"திடீரென்று இந்த யானைக்கு மதம் பிடித்து இது ஓட ஆரம்பித்தால் நீ பயப்படுவாயா?"

"தாங்கள் பக்கத்தில் இருக்கும் போது வானம் இடிந்து விழுந்தாலும் பயப்பட மாட்டேன், ஐயா!"

"உன் படகை எங்கே விட்டு விட்டு வந்திருக்கிறாய், பூங்குழலி?"

"யானை இறவுத் துறைக்குச் சமீபத்தில், ஐயா!"

"இக்கரையிலா, அக்கரையிலா?"

"அக்கரையிலேதான் படகை நிறுத்தத் தனி இடம் கிடைத்தது. அங்கேயே படகை நிறுத்தி விட்டு வந்தேன்."

"யானை இறவுத் துறையை எப்படிக் கடந்து வந்தாய்?"

"நான் வரும் போது கடல் நீர் மிகவும் குறைவாயிருந்தது. ஆகையால் பெரும்பாலும் நடந்து வந்தேன். கொஞ்சம் நீந்தியும் வந்தேன்."

"இப்போது இந்த யானை கடலில் இறங்கிச் சென்றால் பயப்படுவாயா?"

"கடலிலே என்னைத் தள்ளிவிட்டாலும் கவலையில்லை; நான்தான் சமுத்திரகுமாரி ஆயிற்றே? தாங்கள் தானே பெயர் கொடுத்தீர்கள்?"

"உன் படகு இருக்குமிடம் சென்றதும் அதில் நாம் ஏறிக் கொள்வோம். நீதான் படகு தள்ளிக் கொண்டு வர வேண்டும். இரண்டு பேரையும் வைத்துத் தள்ள முடியும் அல்லவா?"

"பத்து வயது முதல் துடுப்புப் பிடித்த கரங்கள் இவை, பிரபு! அரண்மனைப் பெண்களைப்போல் மலரினும் மிருதுவான கரங்கள் அல்ல. தங்கள் சிநேகிதர் வந்தியத் தேவரை வைத்துத் தள்ளி வந்ததை அவர் சொல்லவில்லையா?"

"சொன்னார்! ஆனால் இன்று அதை விட வேகமாகத் தள்ள வேண்டும். தொண்டைமான் ஆற்றின் முகத்துவாரத்தில் கப்பல்கள் வந்து நிற்கும் இடத்துக்கு அதி சீக்கிரமாகப் போய்ச் சேர வேண்டும்."

"இளவரசே! அவ்வளவு கொடூரமான காரியத்தை என்னை ஏன் செய்யப் பணிக்கிறீர்கள்? தங்களைச் சிறையாகாமல் தப்புவிப்பதற்காக ஓடோடியும் வந்தேன். சிறைப்படுத்த வந்திருப்பவர்களிடம் தங்களைக் கொண்டு போய் ஒப்புவிக்கும்படி பணிக்கிறீர்கள்? இந்த ஏழையின் பேரில் ஏன் இவ்வளவு கொடூரம்?"

"பூங்குழலி! என் தந்தை—சக்கரவர்த்தி—நோய்ப்பட்டிருப்பது உனக்குத் தெரியும், அல்லவா?"

"தெரியும், ஐயா! வானத்தில் சில நாளாக வால்நட்சத்திரம் தோன்றுவது பற்றி ஜனங்கள் பேசிக் கொள்ளுவதும் எனக்குத் தெரியும்."

"எந்த நிமிஷத்திலும் என் தந்தையின் வாழ்நாள் முடிவுறக் கூடும் அல்லவா?"

பூங்குழலி மௌனமாயிருந்தாள்.

"அவர் ஒரு வேளை இவ்வுலகை நீத்துச் செல்ல நேரிட்டால், அவருக்கு எதிராக நான் சதி செய்து இராஜ்யத்தைக் கைப்பற்ற முயன்றேன் என்ற எண்ணத்துடன் அவர் போவது நல்லதா?"

"சக்கரவர்த்தி தங்களைப் பற்றி ஒரு நாளும் அப்படி நம்ப மாட்டார். இது பழுவேட்டரையர்களின் சூழ்ச்சி!"


"அப்படிப்பட்ட பழுவேட்டரையர்களுக்கும் கூட நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க விரும்புகிறேன்..."

"எதற்காக, ஐயா?"

"உண்மையிலேயே எனக்கு இராஜ்யம் ஆளுவதில் ஆசையில்லை, பூங்குழலி!"

"வேறு எதில் தங்களுக்கு ஆசை?"

"படகில் ஏறி முடிவில்லாத கடலில் என்றென்றும் போய்க் கொண்டிருக்க வேண்டும் என்று ஆசை! கடல்களுக்கு



''நீ எதிர் வீட்டுப் பெண்ணுக்கு 'ஃப்ளையிங் கிஸ்' கொடுத்தியே, என்ன ஆச்சு?''

''கொடுத்த நேரத்துல காத்து அடிச்சு 'கிஸ்' பக்கத்து வீட்டுப் பாட்டிக்குப் போயிடுச்சு...!''

— ஆர். என். கண்ணன்.

அப்பால் இந்த ஈழ நாட்டைப் போல் எத்தனையோ நாடுகள் இருப்பதாகக் கேள்வி. அந்த நாடுகளுக்கெல்லாம் போக வேண்டும் என்று ஆசை. அந்தந்த நாட்டு மக்களைப் பார்த்துப் பேச வேண்டும் என்று ஆசை!''

''விந்தை! விந்தை!''

''எது விந்தை?''

''என் மனத்தில் குடிகொண்டுள்ள ஆசையே தங்கள் மனத்திலும் இருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுகிறேன். தாங்கள் அப்படிக் கடல் பிரயாணம் தொடங்கும் போது என்னையும் அழைத்துப் போவீர்களா?''

''முதலிலே, இப்போது நான் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றுகிறேன். அதற்கு நீ உதவி செய்வாய் அல்லவா?''

''தங்கள் சித்தம்!''

''நீ உட்கார்ந்திருக்கும் பீடத்திலிருந்து இரண்டு பக்கமும் கயிறுகள் தொங்குகின்றன அல்லவா? அவற்றை எடுத்து உன்னைக் கெட்டியாகக் கட்டிக் கொள்.''

''எதற்காக, இளவரசே!''

''யானை இப்போது மதங்கொண்டு ஓடப் போகிறது. ஜாக்கிரதை, பூங்குழலி!''

இவ்விதம் கூறிவிட்டு இளவரசர் யானையின் மத்தகத்தைக் கையினால் தடவிக் கொடுத்த வண்ணம் அதன் காதண்டை ஏதோ சொன்னார்.

யானையின் நடைவேகம் திடீரென்று அதிகமாயிற்று.

இளவரசர் யானையின் செவியண்டையில் குனிந்து மேலும் ஏதோ சொன்னார்.

அவ்வளவுதான்! நடை, ஓட்டமாயிற்று. துதிக்கையைத் தூக்கிக் கொண்டு ஒரு தடவை பயங்கரமான பிளிறல் சப்தம் போட்டுவிட்டு ஓடத் தொடங்கியது. சூறாவளி சுழன்று அடிக்கும் போது காடுகளின் மரங்கள் படும்பாடு அந்த யானையின் வேகத்தினால் பட்டன. சடசடவென்று மரங்களும் மரக்கிளைகளும் சரிந்து விழுந்தன. பூமி அதிர்ந்தது. எட்டுத் திக்குகளும் நடுநடுங்கின. மரங்களின் மீதிருந்த பறவை இனங்கள் சிறகுகளைச் சடசடவென்று அடித்துக் கொண்டும் பீதி கொண்ட குரலில் கூவிக் கொண்டும் பறந்தன. காட்டில் மறைந்து வாழ்ந்த மிருகங்கள் வெளிப் புறப்பட்டு நாலாபுறமும் விழுந்தடித்து ஓடின.

''ஐயையோ! யானைக்கு மதம் பிடித்து விட்டது போலிருக்கிறதே! இது என்ன விபரீதம்!'' என்று சேநாதிபதி பூதி விக்கிரமகேசரி கூவினார்.

இவ்வளவு தூரம் இளவரசர் சொல்லியிருந்தும் பூங்குழலியின் உள்ளமும் திகில் அடைந்தது. அவள் முகத்தில் பயப்பிராந்தியின் அறிகுறி தோன்றியது.

பூங்குழலி ஒரு பெரிய பயங்கரமான பிரம்மாண்டமான கடல் சுழலில் அகப்பட்டுக் கொண்டாள். அதே சுழலில் அகப்பட்டுக் கொண்டு இளவரசரும் சுற்றிச் சுற்றி வந்தார். யானையும் அப்படியே சுழன்று சுழன்று வந்தது.

பூங்குழலி கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

புயற்காற்றினால் தள்ளப்பட்டு ஓடும் கரிய மேகத்தைப் போல் யானை போய்க் கொண்டேயிருந்தது.

கடைசியில் யானை இறவுத் துறையை அடைந்தது.

அங்கே இலங்கைத் தீவின் கீழ்ப்புறத்துக் கடலும் மேற்புறத்துக் கடலும் ஒன்றாய்ச் சேர்ந்தன. அந்த ஜலசந்தியின் மிகக் குறுகலான இடத்துக்குத்தான் யானை இறவு என்று பெயர். இலங்கைத் தீவின் வடபகுதியையும் மத்தியப் பகுதியையும் ஒன்று சேர்த்த அக்கடல்துறையில் யானை இறங்கியது. அனுமார் தூக்கி எறிந்த மலை கடலில் விழுந்தது போல விழுந்தது.

(தொடரும்)

பிசாசு

அபூர்வன்

எனக்கு இருட்டு என்றாலே அது ஒரு விதச் சாகசம் நிகழ்த்திய பின் கிடைக்கும் சந்தோஷம் என்றே தோன்றும். ஆனால் எனது சின்ன வயதில் நான் இருட்டு என்றாலே மிக மோசமாகப் பயந்திருக்கிறேன்.

நாங்களெல்லாம் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போது எங்கள் தெரு தாத்தாவிடம் இரவு ஏழு மணியிலிருந்து கதை கேட்க, ஊர் மடத்தில் கூடி விடுவோம். அவர் சொல்லும் கதைகள் எல்லாமே, பேய், பிசாசு, அரக்கன், மந்திரவாதி சம்பந்தப்பட்டவையாகவே இருக்கும். அவரின் தத்ரூபமான வர்ணிப்பில் நாங்கள் அவர் சொல்லும் இடத்தில் இருந்து கொண்டு, அங்கு உள்ள பயங்கரப் பிசாசுகளையும் எலும்புக் கூடுகளையும் கண்ணெதிரில் காண்பது மாதிரி பயந்து அலறி இருக்கிறோம். மேற்கொண்டு கதை சொல்லுவதையும் நிறுத்தி விடச் சொல்லி இருக்கிறோம்.

கதை முடிந்த பிறகு இரவு வேளையில், தெருவுக்குள் இறங்கி அவரவர் வீட்டை நோக்கி ஒருவித பயத்துடன்தான் செல்லுவோம்.

நான் தெருவில் நடந்து வரும் போதெல்லாம் அந்த பயம் வந்து என் முதுகில் ஏறிக் கொள்ளும். தெருவிலிருந்து ஒதுங்கிய சந்தின் கடைசியில் எனது வீடு இருந்தமையால், அவ்விருட்டில் நான் மட்டும் தனியே அவ்வளவு தூரம் கடந்து செல்வதென்பது நிச்சயம் செத்துப் போவதற்குத்தான் என்றிருக்கும். ஏனென்றால், தாத்தா சொல்லிய கதையில் வந்த பிசாசு, எலும்புக் கூடுகள் எல்லாமே அந்தச் சந்து நெடுகவும் இருட்டில் பதுங்கி இருப்பதாகத் தோன்றும். எனவே தெருவும், சந்தும் சந்திக்கும் இடத்தில் இருந்து கொண்டு ஓங்கிக் குரல் கொடுப்பேன்.

''யம்மா .... இங்க வா .....''

எனது அந்தக் குரல் தான், அந்த வயதில் என்னால் அதிகபட்ச சக்தி கொண்டு ஓங்கி எழுப்பும் குரலாகும். அம்மாவும் வீட்டிலிருந்து சந்துக்குள் எட்டிப் பார்த்து, ''ஏண்டா, அங்கேயே நிக்கற... வந்து தொலையறது தான'' என்று சத்தம் போட்டுக் கொண்டே என்னை நோக்கி வருவாள்.

பின்பு என் கையை இறுகப் பற்றிக் கொண்டு, ''கதை கேக்கப் போறேன்னு, ஏண்டா இப்படி பயந்து சாகற?'' என்று சொல்லி இழுத்துப் போவாள். இருந்தாலும் அம்மாவின் அந்தத் துணையிலும் கூட என்னுள் பயம் அப்படியே இருக்கும்.

''இனிமே நாளையிலிருந்து அங்க போ, கால்ல சூடு போடறேன்...'' என்றும் பயமுறுத்துவாள்.

எனினும், ஆர்வம், உற்சாகம், சந்தோஷம் காரணமாகப் பழைய ஞாபகங்களை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுத் தினசரியும் தாத்தாவிடம் கதை கேட்க மற்றவர்களுடன் போய் விடுவேன்.

அன்றொரு நாள் எங்கள் ஊர் டெண்ட் கொட்டகையில் ஒரு பேய்ப் படம் போட்டிருப்பதாகவும் தாத்தா முதல் நாளே அதைப் போய்ப் பார்த்து விட்டு வந்ததாகவும் கூறினார். வந்ததும் அதை எங்களிடம் அப்படியே மியூஸிக்குடன் படம் காட்டினாற் போல் விவரித்தார்.

அதனால் நான் அந்தப் படத்தைப் பார்க்கும் ஆசையை, அது காட்டிய பயத்தையும் மீறி என்னுள் வளர்த்துக் கொண்டேன். எப்படியும் அந்தப் படத்தைப் பார்த்தே விடுவது என்றும் முடிவு செய்தேன். துணைக்காக வலியப் போய் என் நண்பர்களை எல்லாம் திரட்டினேன். ஆனால் ஒருத்தன் கூட வருவதாய் இல்லை. ஆயினும் தாத்தா சொன்ன கதைகளில் வந்த பேய் பிசாசுகளை எல்லாம் நன்கு பார்த்துத் தெரிந்து கொள்ளக் கிடைத்த அந்தச் சந்தர்ப்பத்தை விட என் மனம் இசையவே இல்லை. தனியாகப் போய் வருவதற்கும் மனம் ஒப்பவில்லை. இறுதியில் ஆசையானது, மிரட்டலை அலட்சியப்படுத்தி வென்றது.

வீட்டில் அம்மா ''உன்கூட யார்ரா வர்றாக?'' என்று புறப்படும் நேரம் கேட்ட போது, என்னுடன் படிக்கும் அடுத்த தெருப் பையன் பெயரைச் சொன்னேன். நான் போவது சாமி படத்துக்குத்தான் என்று அழுத்தமாய்ச் சொன்னதால், அவளும் சம்மதித்து விட்டாள்.

அன்று என்னுடன் துணைக்கு வந்தது எனது துப்பாக்கிதான் என்று எனக்கு மட்டுமே தெரியும்! தீபாவளியின் போது அப்பாவை நச்சரித்து வாங்கிய அந்த எட்டணாத் துப்பாக்கிக்குள் வைத்து வெடிக்க 'கேப்' கூட இல்லாமல் தைரியமாகப் புறப்பட்டேன். 'எதிரில் வந்தால் ஒரே சூடு; செத்துப் போயிடுவே...' என்று திரும்பத் திரும்ப அதையே மனத்திற்குள் சொல்லிக் கொண்டே, டவுசர் பையில் மறைத்திருந்த அதை வெளியில் எடுத்து இருளில் குறி பார்த்துச் சுட்டுக் கொண்டே சினிமாக் கொட்டகை வரை வந்தேன்.

படம் பார்க்கும் போதெல்லாம், வெள்ளை ஆடை உடுத்திய பேய்களும், திடீரென வந்த எலும்புக் கூடுகளும் என்னை எனது துப்பாக்கியையும் மீறிப் பயமுறுத்தவே செய்தன.

ஒரு கட்டத்தில், இந்தத் துப்பாக்கி கூட என்னைக் காப்பாற்றாது என மிரண்டும் போனேன்.

நல்ல வேளையாக, இடைவேளையின் போது அங்கே எனது சித்தப்பாவைப் பார்த்துக் கொண்டேன். பின்பு அவர்தான் என்னை வீட்டில் கொண்டு வந்து விட்டார்.

பின்பு எனக்கு வயது ஏற ஏற — நான் இருபது வயது வாலிபனாய் வளர்ந்ததும், பேய், பிசாசுகளைத் தேடிச் செல்ல மனம் தானாகவே விழைந்தது. எனவே அப்பருவத்துக்கே உரிய துணிச்சலும், மனோதிடமும், பொய் என்று நினைத்ததைப் பொய் என்றே எனக்கு நானே நிரூபிக்கப் பல இடங்களுக்கும் சென்று வரலானேன்.

பல நாட்களில், நட்ட நடு ராத்திரியில், எங்கள் ஊரிலிருந்து இரண்டு மைல் மூன்று மைல் தள்ளியிருந்த மொட்டை மலை அடிவாரக் கோயிலுக்கும், சங்கிலியாண்டி கோவிலுக்கும் மிக உற்சாகத் துணிச்சலுடன் போனேன்.

அவையெல்லாம் சின்ன வயதில் நான் பகலிலேயே பார்க்கவும், நெருங்கவும் அஞ்சிய இடங்களாகும்.

மேலும் நான் நேரில் பார்க்காமல் பிறர் சொல்லிப் பயம் கொண்ட இடங்களும் உண்டு. ஊரிலிருந்து வெகு தொலைவில் இருந்த பெரிய ஆலமரமும் அதை ஒட்டினாற் போன்று இருந்த அய்யனார் கோவிலும்தான்



அவை.

வேண்டுமென்றே நடு ராத்திரியில் ஒருவரிடமும் சொல்லாமல் கிளம்பி, அங்கே போய், அந்த ஆலமரத்தைத் தொட்டும், அதனடியில் உட்கார்ந்தும் இருந்திருக்கிறேன். ஆலமரத்தில் அடைந்திருந்த வௌவால்கள் எழுப்பிய சப்தம் எனக்கு அந்நேரம் ரசிக்கக் கூடியதாக இருந்தது.

பெரிய குதிரையில் அமர்ந்து வாளை ஓங்கியபடியே இருந்த அய்யனார் சாமியின் முழு உருவத்தையும் தொட்டுத் தடவிப் பார்த்தேன். குதிரையில் ஏறி விடலாமா என்று அந்நேரத்தில் வெற்றி, வெறி கொண்டு என்னை ஏவியது. எனினும் அது முறையல்ல என்று திருப்பி விட்டேன்.

சின்ன வயதின் பய நினைவுகளையும், உணர்வுகளையும் எனது அந்த வாலிபம் பழி வாங்கியே விட்டது. அதன் சந்தோஷ ஆரவாரம் என் மனத்தில் நீண்ட காலம் தங்கி இருந்தது. ஆயினும், இது மாதிரி நான் போய் வந்ததையெல்லாம் என் பாட்டியிடம் சொல்லும் போது, அவள் அதை நம்பவே மாட்டாள். இருப்பினும் எனக்கு யோசனை சொல்கிற மாதிரி பேசுவாள்...

"வேலு, நீ அங்கெல்லாம் போவக் கூடாதுய்யா. சொன்னாக் கேளு. ஆலமரத்தில நெறையா முனி குடியிருக்கும். அய்யனாரு சாமி நடுராத்திரியில குதிரை மேல ஏறி ஊருக்குள்ள வருவாரு. அந்நேரம் தப்புச் செஞ்சவங்களுக்கெல்லாம் காலராவும், பேதியும், டைபாயுடும் குடுத்திட்டுத் திரும்பிப் போயிருவாரு. அவரு எடத்துக்கு நீயெல்லாம் போவாதய்யா...." என்பாள்.

ஆனால் நான் அதை அலட்சியப்படுத்தியவாறே மேலும் புதிய இடங்களுக்குச் சென்றேன். இரவில் ஒரு நாள் சுடுகாட்டுக்குப் போய், அங்கே நீண்ட நேரம் உட்கார்ந்து, பின்பு அப்பகுதி முழுவதையும் நடந்து பார்த்ததும் என் நினைவில் இன்னும் பசுமையாய் இருக்கிறது.

அந்தப் பொழுதில் என்னுள் உண்மையாகவே பயம் எட்டிப் பார்த்தது. நேற்று வரை அங்கு தீயில் சாம்பலாகிப் போன இறந்தவர்களின் உடல்கள் என் கண் முன்னே தோன்றி, நெடுகிலும் படுத்துக் கிடப்பதாகப் பயக் கற்பனை ஓடியது. ஒரு சிறு கல் காலில் தட்டுப்பட்டாலும், நான் உடனே அவர்களது முகத்தில் மிதித்து விட்டதாகவே உடம்பெல்லாம் நடுங்கி விறைத்து விட்டேன்.


ஆயினும் என் முன்னே என் தைரியமும், அறிவும், விளக்காய் வெளிச்சம் காட்டியது. அந்த இடத்தையும் ஜெயித்து விட்டேன் என்கிற மகிழ்ச்சியும், உண்மையும் அதன் பின்பு என்னை, 'இனிமேல் ஒன்றுமில்லை' என்று சும்மா இருக்க வைத்து விட்டது.

எனது இந்த வாலிப வயதுச் சாகசங்கள் — எல்லாமே எனக்கு மட்டும் தெரிந்தவை. இப்போது நின்று போய் இருபது வருடங்கள் ஓடி விட்டன. அந்த நினைவுகளின் சுகானுபவம் என்னை இப்போதும் இந்த அமாவாசை இரவின் ஒரு மணிக்குப் போதை கொள்ள வைக்கிறது. இறக்கி வைத்து விட்ட அவ்வீரத்தை மறுபடியும் அணிந்து கொள்ள முடியுமா எனச் சவால் விடுக்கிறது.

பயம் என்பதை எப்போது வெற்றி கொள்கிறேமோ, அப்போது அந்த அனுபவம் மிகவும் வித்தியாசமான சந்தோஷம் என்பது அதை அனுபவித்துப் பார்த்தவர்களுக்கே நன்கு புரியும். பயம் நமக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருப்பதாய் நடுங்கிக் கொண்டே, ஆனால் நம் தைரியமும், உறுதி

"யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ் மேன் தான் எவ்வளவு நல்லவர், என் வீட்டில், சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கு நவீன முறைகளை அறிமுகப்படுத்திய இனிய நண்பர் அவர்தான்"

திருமதி. அர்ச்சனா சம்பானி, பம்பாய்



வரும் நாட்கள் ஏதேனும் ஒன்றில் யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி, அடையாளச்சீட்டுடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வார்.

அவர் பேச்சில் தன்னம்பிக்கை தொனிக்கும் – இதில் வியப்பேதும் இல்லை. ஏனெனில், இவர் இந்தியாவிலே இது போன்ற நிறுவனங்களில் மிகப் பெரியதும் வெற்றி வாகை சூடியதுமாகிய விற்பனை நிறுவனத்தின் அங்கத்தினர் ஆவார். இந்நிறுவனம் விற்பனைக்குப் பின் நம்பகமான சேவை புரியும் பின்னணி கொண்டது.

தூசு, சூழ்நிலை அசுத்தம், அசுத்தமான நீர் மற்றும் வீட்டு வேலைகளில் உதவியின்மை போன்ற இன்றைய பிரச்சினைகளை சமாளிப்பதற்கென நவீன வீட்டுபயோக சாதனங்களை அவர் உங்களுக்கு அறிமுகப்படுத்துவார்.

செயல்முறை விளக்கத்திற்கு இவரிடம் இரண்டு இணையற்ற தயாரிப்புகள் உள்ளன: யூரோக்ளீன் – அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம். இது வேக்யும் க்ளீனரை விட சிறந்தது. மற்றும் அக்வாகார்ட் – நீர் பைப்பிலேயே பொருத்தக் கூடிய வாட்டர் ஃபில்டர் கம் ப்யூரிஃபயர்.

யூரோக்ளீன் – உங்கள் வீட்டில் உள்ள தூசு மற்றும் சிறு துரும்புகளையும்கூட சிரமமின்றி எளிதில் அகற்றுகிறது. கண்ணிற்கு புலப்படாத தூசுகள்கூட அகன்று விடும். அக்வாகார்ட் – ஒரு ஸ்விட்சை இயக்கி, குழாயைத் திறந்தால், கிருமிகள் அற்ற பாதுகாப்பான, சுத்தமான குடிநீரை உங்கள் குழாயிலேயே நீங்கள் பெறலாம்.

உங்கள் குடும்பத்திற்கு, சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கான நவீன முறைகளை இத்தயாரிப்புகள் எவ்விதம் வழங்குகின்றன என்பதை யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டிலேயே உபயோகித்து விளக்குவார். அதன் மூலம் உங்களைச் சுற்றிலும் சுத்தமும் சுகாதாரமும் நிறைந்த உலகம் உருவாகும்.

அவர் உங்கள் வீட்டிற்கு வரும் நாள் வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம். விரைவில் வருகை புரிய கீழ்க்காணும் யூரேகா ஃபோர்ப்ஸ் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றில் தொடர்பு கொள்ளுங்கள், அல்லது இம் முகவரிக்கு எழுதுங்கள்: யூரேகா ஃபோர்ப்ஸ், பி.ஓ. பாக்ஸ் 936 ஜி.பி.ஓ. பம்பாய்- 400 001.

யூரோக்ளீன்

அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம் – வேக்யும் க்ளீனரை விட சிறந்தது.

அக்வாகார்ட்

நீர் பைப்பில் பொருத்தக் கூடிய வாட்டர் ஃபில்டர் கம் ப்யூரிஃபயர்.

யூரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட்

நவீன முறை சுத்தம் சுகாதாரத்தின் முன்னோடிகள்.

87/EFL/552-tm

வாசகர் பங்கு:



தளபதி திடமதி

பரிசு ரூ. 400

முதல் தடவை உங்கள் துணுக்கு பிரசுரமானால் பரிசு ரூ. 25/—. ஒருவரே எழுதிய பல துணுக்குகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரமானால் ஒவ்வொரு முறையும் பரிசு இரட்டிப்பாகும். இதன் அடிப்படையில் இந்த இதழில் ராணிப்பேட்டையைச் சேர்ந்த வாசகர் சாலமன் சத்தியராஜ் எழுதிய துணுக்கு ரூ. 50/— பரிசு பெறுகிறது. அதிகபட்சப் பரிசு ரூ. 400/—. உறையின் மீது மறக்காமல் "தளபதி திடமதி" என்று குறிப்பிடவும். உள்ளூர் நிகழ்ச்சிகள் முதல் அகில உலகப் பிரச்னைகள் வரை நமது ஆஸ்தான ஜோக்கர் 'கமெண்ட்' அடிப்பார். அவற்றுள் ஒன்றைத்தான் நீங்கள் கீழுள்ள கூப்பனில் எழுதி அனுப்ப வேண்டும்.

கூப்பன்:

கல்கி இதழ் 24.1.88 — முடிவு தேதி: 2.2.88.

தளபதி திடமதி: "..
...."

என் பெயர்: ....

விலாசம்: ....

யும் நம்மை பிடித்து இழுத்துச் செல்ல முன்னேறுவதும், பின்பு கடைசியில் வெற்றியின் விளிம்பில் கால் வைப்பதும் மிகவும் சுவாரஸ்யமானது.

'அதை இப்போது உன்னால் திரும்பவும் செய்ய முடியுமா?' என்று என்னுள் யாரோ கேட்கிறார்கள்; சவால் விட்டுச் சிரிக்கிறார்கள்.

அதையும்தான் பார்த்து விடுவோமே!

'எங்கு போகணும் சொல்!' — எனக்குள் சத்தமாய்ச் சொல்கிறேன்.

'பேய்க் கிணறு என்று சொல்லிப் பகலில் கூட அந்தப் பக்கம் போகவே ஊர் ஜனங்கள் பயப்படுகிறார்களே அந்தக் கிணற்றில் விழுந்து எழுந்து வருவாயா?'

'ம், ரெடி! உங்களுக்கெல்லாம் என்றைக்கோ சமாதி வைத்த பிறகும் நீங்கள் வாலாட்டுகிறீர்களா? வாங்கடா, அதையும் தான் ஒரு கை பார்த்து விடுகிறேன்...' நான் விருட்டென எழுந்து நின்றேன்.

பேய்க் கிணறு!

ஊருக்குப் புறம்பாக உள்ள வயறகாட்டின் ஓர் ஓரமாகத் தனித்து விடப்பட்டதாய் இருக்கும் அக் கிணற்றில் விழுந்து, எத்தனை பெண்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் என எனக்கு நன்றாகவே தெரியும்.

அங்கு இறந்து போனவர்கள் எல்லாம் பிசாசுகளாய் அதனுள்ளேயே தங்கி விட்டார்கள் என்றும், பகலில் கூட அவர்கள் சிரிப்பதும், ஓலமிடுவதும் நன்கு கேட்கின்றனவென்றும் நிறையப் பேர் சொல்லி வருகிறார்கள்.

மூன்று நாட்களுக்கு முன்பு கூட வயிற்று வலி தாங்க முடியாமல் சீனியம்மா அதில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள். அவள் பேயாய் மாறி அந்தக் கிணற்றின் மேல் விளிம்பையே சுற்றிச் சுற்றி வருகிறாள் என்றும், யாராவது கிணற்றில் எட்டிப் பார்த்தால் அப்படியே பிடித்துத் தள்ளி விடுகிறாள் என்றும் நேற்றுக் காலையிலிருந்து ஊருக்குள் புதுக் கதை புகுந்து விட்டது.

அதை இன்று உடைத்தே தீருவது என்று அந்த அமாவாசை இரவின் கனத்த இருளில் அதை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்தேன்.

வரப்பு முடிந்து கிணற்றின் மேல் விளிம்பு என் கால்களுக்குத் தட்டுப்பட்டது. அதில் நன்றாக முழுவதும் கால் பதித்து நின்றேன். யாரும் என்னை உள்ளே தள்ளவில்லை.

உள்ளே கிணற்றின் நீர் தெரியவே இல்லை. எந்தச் சப்தமும் கேட்கவில்லை.

'அட, பயந்த பேய்களா, நீங்கள்தான் வராம உள்ளேயே கெடக்கறீங்க! இப்ப நானே உங்க இடத்துக்கு வர்றேன்... தைரியமிருந்தா என் கண்ணுக்கெதிரா வாங்கடா பார்ப்போம்...'

தொபீர்!

உள்ளே விழுந்தேன். ஆனால் அடுத்த வினாடியில்...

'அய்யய்யோ, என்னை யாரோ உள்ளேயே அமுக்கப் பாக்குறாங்களே! அப்பிடியே தலை

அருள்வாக்கு



மனோபாவம் அல்லது குணத்துக்கும், தற்காலத்தில் ஒருத்தன் விரும்பும் வேலைக்கும், எந்த அளவு சம்பந்தமிருக்கிறது என்று பார்த்தால் நூற்றுக்குத் தொண்ணூறு சம்பந்தமேயில்லை. ரொம்பக் கொஞ்சம் பேர் விஷயத்தில் தான் குணத்துக்கும் தொழிலுக்குமிடையே சம்பந்தமிருக்கும். ரொம்பவும் வைராக்கிய குணமுள்ளவன் எந்த வேலையிலும் ஒட்டாமலிருப்பான். துறுதுறு வென்று ப்ளான் போட்டு யோசனை பண்ணுகிற சுபாவமுள்ளவனுக்கு மெஷின் மாதிரி வேலை செய்வதான தொழில்கள் பிடிக்காமலிருக்கும். ஆர்மிக்கு (தரைப் படை)த்தான் போவது நேவிக்கு (கடற் படை)த்தான் போவது என்று சில பேருக்கு ஒரே ஆர்வம் இருக்கும். இன்னும் சில பேர் கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும் ஸைன்யத்தில் சேருவதில்லை என்று இருப்பார்கள். எழுதுவது, பாடுவது, சித்திரம் போடுவது என்பனவற்றில் ஆசை உள்ளவர்கள் வேறு எந்த வேலையிலும் பிடிமானம் வைக்க மாட்டார்கள்.

இப்போது நான் சொன்ன இத்தனை பேரும் அதாவது தாங்கள் இயற்கை மனோபாவப்படிதான் தொழில் பண்ணுவது என்று இருக்கிற அத்தனை பேரும் — மொத்தமுள்ள ஜனசமூகத்தில் கால் வாசி கூட இருக்க மாட்டார்கள்; பத்து சதவிகிதம் கூட இருக்க மாட்டார்கள்.

இங்கே என்னை ஒரு மடத்துக்குள் உட்கார்த்தி வைத்திருக்கிறது என்றாலும் இங்கே என்னிடம் எல்லா தினுசு ஜனங்களும் வந்து அவரவர் பிரார்த்தனையை, ஆசையைச் சொல்லிவிட்டுத்தானே போகிறார்கள்? இதிலிருந்து எனக்குத் தெரிவது, விசேஷமாக ஒருத்தனும் தொழிலைக் குணத்தோடு சம்பந்தப்படுத்தவில்லை என்பதுதான். பெரும்பாலும் ஜனங்கள் தங்கள் குணத்தைப் பார்த்து, அதற்கு அனுசரணையான தொழிலாக ஒன்றை எடுத்துக் கொள்ளவேயில்லை. தங்களுக்குப் பிடித்த அல்லது கிடைத்த தொழிலுக்கு எப்படியோ 'அட்ஜஸ்ட்' செய்து கொள்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

யப் பிடிக்குதுகளே! அய்யோ, மூச்சு முட்டுதே. கழுத்த நெரிக்கிறாங்களே. என்னை எங்கேயோ இழுத்துக்கிட்டுப் போவுதுகளே இந்தப் பிசாசுங்க... அய்யோ, இங்கே பேய்ங்க இருக்கிறது நெசந்தான்! என்னை விட்டுருங்க. நான் உங்க திசையையே இனி எட்டிப் பார்க்க மாட்டேன்... போச்சு! செத்தே போயிட்டேன்!...'

என்னது! நான் பொழைச்சுக்கிட்டேனா! எனக்கு உயிர் இருக்கா!

யாரு எனக்குப் பக்கத்திலே இருந்துக்கிட்டு, என்னைப் பிடிச்சுகிட்டே இருக்கிறது? பேய்தான் பேசுதா? கண்ணை முழிக்கிறதுக்கே பயமா இருக்கே!

"நீங்க யாருங்க? இருட்ல இப்பிடி கெணறு இருக்குறது கூடத் தெரியாம இப்பிடியா வுழுவாங்க? ஐயாவுக்கு எந்த ஊரு?"

அட! இது மாயன் வீட்டுப் புஞ்சைக்கார முத்தன்!

"யாரு, முத்தனா?"

"ஆமாய்யா... நீங்க.. எதுக்கு இங்க இந்த ராவுல வந்தீக?"

"எப்படியோ காலு இடறிப் போச்சு. ஆமா, நீ எங்கே இந்நேரத்திலே இங்கே?"

"மொதலாளி புஞ்சைக்கு இப்பத்தான் இந்தக் கெணத்திலிருந்து கவலை போட்டுத் தண்ணி இறச்சு முடிச்சேன். தண்ணி நல்லாப் பாஞ்சுருச்சானு புஞ்சைக்கு உள்ளே போய்ப் பார்த்து, மம்பட்டியால ஒதுக்கி விட்டேன். அப்போ உடம்புலயும், கை காலேயும் ஒரே சேறு அப்பிப் போச்சு. அதான், உள்ள எறங்கிக் குளிச்சுட்டுப் போகலாம்னு வந்தேன். திமார்னு பார்த்தா, யாரோ தொபீர்னு குதிச்ச சப்தம் கேட்டுச்சு. அய்யய்யோ, முந்தா நேத்து மாதிரி இன்னைக்கும் எவனோ கெணத்தில வுழுந்து செத்துப் போக வந்துட்டானே, இவனைக் காப்பாத்தாம விடக் கூடாதுன்னு நானும் தண்ணிக்குள்ள குதிச்சுப் படியில கொண்டு வந்து போட்டேன். அப்புறமாத்தான் தெரிஞ்சுது யாரோ ஆம்பளயாளுன்னு. நல்லவேளை!"

"ஏண்டா முத்தா, இந்தப் பேய்க் கெணத்தில வந்து இறங்குனியே, உனக்குப் பயமா இல்லயா?"

"இன்னைக்குள்ள மொத்தப் பாத்திக்கும் தண்ணி பாச்சி விடலைன்னா நாளைக்கி நீ கூலி வாங்கிக்கிட மாட்டே'ன்னு எங்க புஞ்ச மொதலாளி கண்டிஷனாச் சொல்லிட்டுப் போனாரு. அவரப் பத்தித்தான் உங்களுக்கும் தெரியுமே! புடிச்ச புடி விட மாட்டாருன்னு. பொதுவா இந்தக் கெணத்துக்கு வர மாட்டேன். இருந்தாலும் வேற வழி? என்ன நம்பி அங்க வீட்ல அஞ்சு உயிருங்க இருக்குதுங்களே. அதான் மாடுங்களைக் கொண்டு வந்து கவலையைப் போட்டு ஒரு வழியா முடிச்சேன். பேயாவது, பிசாசாவது மொதலாளி. எங்களை மாதிரி ஆளுங்க வயித்துக்கு முன்னால அதெல்லாம் வெறும் தூசிதான் மொதலாளி."

"சரி. நான் கௌம்புறேன்."

"பைய, பார்த்துப் போங்க..."

நான் அப்படியே ஈர வேட்டியைப் பிழிந்து தலையைத் துவட்டிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தேன்.



வேரில்லாத மரங்கள்

15

சிவசங்கரி

சொல்லவும் முடியவில்லை, சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை.

பிடித்ததோ, பிடிக்கவில்லையோ – இடத்தைக் கொடுத்தாகிவிட்டது.

இனிமேல் எந்த இடத்தில் எந்த நுனியைப் பிடித்து இழுப்பது?

எதைப் பிடித்தாலும் ஏதாவது ஓர் இடத்தில் இழை விட்டுப் போய் விடுமோ என்று பயமாக அல்லவா இருக்கிறது!

சரி, விட்டுக் கொடுத்ததுதான் கொடுத்தோம், பேசாமல் கண்ணை மூடிக் கொண்டு சும்மா இருந்து விடுவோம் என்றால், அதுவும் நடக்கிற காரியமாய்த் தோன்றவில்லையே!

கண்ணை மூடிக் கொண்டால் ஆயிற்றா? மனத்தையும், ஐம்புலன்களையும், சர்வாங்கத்தையும் ஒடுக்கிக் கொண்டு விட்டால்கூட நல்லதுதான்.

முக்கியமாய் இந்த மூக்கை!

இராப்பகலாய்ப் பயிற்சி கொடுத்து, யாரோ வேலை மெனக்கெட்டுப் போய் உருவேற்றின தினுசில், எங்கிருந்து வந்தது இந்த மோப்ப சக்தி?

சதாசர்வகாலமும் ஒரு துப்பறியும் நாய் மாதிரி துருத்திக் கொண்டு வாசம் பிடித்துத் தொலைக்கிறது!

கண்களுக்கு இமைகள் இருக்கிற மாதிரி, மூக்குக்கும் ஏதாவது ஒன்றைப் படைத்திருக்கலாம் இந்த ஆண்டவன்.

படைத்திருந்தால், இப்படி கர்சீப்பால் முக்கால் முகத்தை மூடிக் கொண்டு, வீட்டுக்கு வெளியே காம்பவுண்ட் சுவரில் சாய்ந்து நின்று, தெருவை வேடிக்கை பார்ப்பதையோ, சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்து அந்த மணத்தைச் சுற்றிலும் பரப்பியபடி உட்கார்ந்திருப்ப

தையோ செய்யாமல், மூக்கு மடலை இழுத்து விட்டுக் கொண்டு வீட்டினுள்ளேயே இருந்திருக்கலாம்.

மாதவனுக்குள் திடுமெனச் சின்ன வயதில் தூங்கப் போவதற்கு முன், ஆயாவின் இடுப்பில் ஒரு காலைப் போட்டுப் படுத்திருந்த நாழிகையில் செம்மின குரலில் அவர் சொன்ன கதை ஒன்று நினைவுக்கு வந்தது.

'சம்சாரி ஒத்தனுக்குப் பொசுக்குன்னு ஒருநாளு வாழ்க்கை வெறுத்துப்போச்சாம். 'நான் சாமியாராப் போப் போறேன்'னு கௌம்பினவனை அக்கம் பக்கத்துப் பெரியவங்க தடுத்து, 'அடேய் – அதுக்கெல்லாம் மனசு பக்குவம் வேணும்டா'ன்னு சொல்லியும், 'அதெல்லாம் முடியாது, நான் சாமியாராயிட்டேன் – தவம் பண்ணப் போறேன்'னு இவன் வீம்பாக் கிளம்பி, ஆத்தங்கரைப் பக்கமாப் போயி உக்காந்துக்கிட்டுத் தியானம் பண்ண வேண்டி 'சிவ, சிவ'ன்னு முணுமுணுக்க ஆரம்பிச்சானாம். பத்து நிமிஷத்துக்கெல்லாம் நாலஞ்சு சிறு வயசுப் பொண்ணுங்க தண்ணி மொள்ள வந்துச்சாம். இவன் புத்தி தியானத்த விட்டு அவங்ககிட்ட ஓடிடுச்சாம். சரி, 'கண்ணைத் தொறந்துக்கிட்டு இருந்தாத்தானே வம்பு, மூடிகிட்டா?'னு நெனைச்சு இறுக மூடிக்கிட்டானாம். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கம்முனு பூ வாசனையும், ஆத்தங்கரைல உட்கார்ந்துகிட்டுக் கட்டுச் சோறு திங்கறவங்களோட சோத்துமூட்டை மணமும் சேர்ந்து மூக்குல ஏற, மறுபடியும் தியானம் பண்றது விட்டுப் போச்சாம். அப்பால, மூக்கையும் பொத்திக்கிட்டு வாயால மூச்சு விட்டுக்கிட்டே 'சிவ, சிவ'னு சொல்லப் பாத்தானாம். இப்போ நடந்து போற பொம்பளைங்க கால் கொலுசுச் சப்தம் காது வழியாப் பூந்து, தியானத்தைக் கலைச்சுதாம். என்னடா இது ரோதனைன்னு நெனைச்சு காதுல பஞ்சு அடைச்சிக்கிட்டு மறுபடி உக்காந்தானாம். அரை நிமிஷம் ஆகலியாம்; அதுக்குள்ள, வீட்டுல மாடு கன்னு போடற நாளாச்சே, மூணாவது வீட்டு வால் பையன் நாம இல்லாட்டி மாங்காய் பறிச்சிடுவானே, வாங்கின கடன் இருபது ரூபாயைத் தண்டபாணி திருப்பித் தர வரேன்னு சொன்னானேனு வரிசைசையா மனசு அலைபாய, போதும்டா சாமி, சாமியாரா வாழறதுக்கும் தவம் பண்றதுக்கும் நம்மால மனசைக் கட்டுப்படுத்த முடியாது'ன்னு மணலைத் தட்டிக்கிட்டுக் கௌம்பிட்டானாம்...'

கதையைச் சொல்லிவிட்டு ஆயா, குலுங்கிச் சிரித்தது நினைவுக்கு வர, மாதவனுக்குத் தான் இப்போது கிட்டத்தட்ட அந்த சம்சாரியின் நிலையில் இருக்கிற மாதிரியே தோன்றியது.

ஞாயிற்றுக்கிழமையும், அதுவுமாய், நிதானமாய்த் தூங்கி எழுந்து, வேலைகளை கவனித்து, திருப்தியாய்ச் சாப்பிட்டு, மறுபடி ஒரு தூக்கம் போட்டு...

எங்கே...?

கிடக்கிற கிடப்பில், சாப்பாடாவது மண்ணாவது!

வெறுப்போடு முகத்தைச் சுளித்துக் கொண்டு விட்டினுள் பார்த்த போது, வசந்தா சமையலறை வாசலில் நின்றவாறு அத்தம்மாவுடன் பசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

காலை எழுந்தது முதல் இரண்டு பேருமே அங்கேயே இருக்கிறார்கள். என்னதான் சமைப்பார்களோ!

வாசனை மட்டும் ஆளை இருக்க விடாமல், இப்படித் தெருவுக்குத் துரத்தியிருக்கிறது!

இன்னின்னதுதான் செய்வார்கள் என்று விவரமாக முன்பே தெரிந்திருந்தால், 'சிலதை மட்டும் செய், மற்றதைச் செய்யாதே' என்று பட்டியல் போட்டுக் கொடுத்திருக்கலாமோ என்னவோ!

எதையும் கேட்டு வைத்துக் கொள்ளாமல், 'ஆஹா, உங்கள் இஷ்டம்' என்று அதிகப் பிரசங்கித் தனமாய்த் தலையாட்டித் தொலைத்ததற்கு இப்போது நல்ல பலன்!

'இத்தனை நாளுதான் புள்ளைத்தாய்ச்சிப் பொண்ணு தானே பொங்கித்தின்னு கஷ்டப்பட்டுது. இப்போதான் நாம வந்திட்டமேன்னு கொஞ்சம் திருப்திப்பட்டுக்கிட்டேன். ஆனா, எதைச் செஞ்சு போட்டாலும் சரியாவே சாப்பிட மாட்டேங்கிறாளே! நல்லா விரும்பிச் சாப்பிட்டால்ல உடம்புல ஒட்டும்!' என்று அத்தம்மா புலம்பியபோது,

'ஆ...மா, விரும்பிச் சாப்பிடறாங்க! இங்க ஒரு முட்டைக்கே வழியைக் காணோம்! நாம பெரிசா கோழியும் மீனுமாவா சாப்டுறப் போறோம், உடம்புல ஒட்டுறதுக்கு!' என்று வசந்தா என்னவோ ஜாடையாகப் பேச,

மாதவனுக்குச் சர்ரென்று எங்கிருந்தோ ஒரு ரோஷம் வந்தது.

'முட்டை கூடச் சாப்பிடக் கூடாதுன்னு நான் சொல்லலே வசு! வேணும்னா தனிப் பாத்திரத்தில வெச்சுக்கங்கன்னு நான் அன்னிக்கே சொல்லிட்டதை மறந்து பேசினா...?'

இவன் இப்படிச் சொல்வதற்கென்றே காத்திருந்த மாதிரி, 'தனி பாத்திரத்துல வெச்சிக்கலாம்னா, முட்டையோட கூட மத்தது எல்லாமேதான் ஆக்கலாம். வசுவுக்கு உடம்பாவது தேறும்' என்ற அத்தம்மாவின் வார்த்தைகளுக்குத் தலையாட்டுவதைத் தவிர மாதவனுக்கு வேறு வழியே இல்லாமல் போக,

உடனடியாகப் புதுச் சமையலுக்குத் தோதாய் டம்ளர், தட்டு, சட்டி என்று பாத்திரங்கள் வாங்கப்பட்டன...

ஒன்பது மாசம் ஆகிவிட்ட நிலையில், வசந்தா வேலைக்கு விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டில்தான் இருக்கிறாள். அதனால், தான் ஆபீஸ் போனபின் வீட்டில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வழியில்லை. வீட்டில் இருந்தால் மட்டும் உள்ளே நடப்பது தெரியவா செய்கிறது! அந்தப் பாத்திரங்களை அந்தச் சமையலுக்கு மட்டும் உபயோகிக்கிறார்களா இல்லை...?

நேற்றுக் கூட வெண்டைக்காய்ப் பொரி



"ஸ்கூட்டர் வைத்திருந்தீர்களே... இப்போது என்ன பழைய சைக்கிளில் வருகிறீர்கள்?"

"வித்துட்டு மேற்கொண்டு கொஞ்சம் கடனும் வாங்கிச் சேர்த்து இந்தச் சைக்கிளை வாங்கிட்டேன்!"

— இருத்துறைப்பூண்டி எஸ். கந்தசாமி.

யலே இந்தப் புதுச் சட்டியிலிருந்துதான் பரிமாறியதாக மாதவனுக்குத் தோன்றியது.

எல்லாமே ஒன்றுகவே ஆகிவிட்டதோ என்கிற சந்தேகம் நமநமவென்று பிறுண்டத் தொடங்கிய பிறகு, தான் சாப்பிடுவது கூட அசைவம்தானே என்றே தோன்ற ஆரம்பித்து விட்டது.

வசந்தாவிடம் சொல்லவும் முடியவில்லை, சொல்லாமல்...

மறுபடி மறுபடி இதே நினைவுகளே எழும்பி எரிச்சலை அதிகமாக்க, மாதவன் தன்னை உலுக்கிக் கொண்டான்.

மீசையை நீவி விட்டு முகவாயை வழித்து விட்டுக் கொண்டு, சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தான்.

நீளமாய்த் தம் பிடித்துப் புகையை நெஞ்சுக்குள் நிரப்பிக் கொண்டபோது, மற்ற வாசங்கள் குறைந்து சற்றே தெளிந்தாற் போல் இருந்தது.

இப்படியே சற்றுத் தூரம் நடந்து விட்டு வந்தால் என்ன?

ப்ச்... காலையிலிருந்து எத்தனை முறை வெளியே போய்விட்டு வந்தாயிற்று! சிகரெட் வாங்க, வாரம் முழுவதும் உபயோகித்த துணிமணிகளைச் சலவைக்குப் போட, முடி வெட்டிக் கொள்ள...

சலிப்பு சற்றும் மறையாமல் சிகரெட்டைக் கீழே போட்டு நசுக்கிவிட்டு, வீட்டுக்குள் நுழைந்தான் மாதவன்.

"ரொம்ப நேரமா வாசல்லியே நின்னுட்டு இருந்தீங்களே, போரடிக்குதா என்ன?"

வசந்தாவின் கேள்விக்குப் பதிலேதும் சொல்லாமல், படுக்கை அறைக்குள் நுழைந்து கட்டிலில் சாய்ந்து கொண்டான்.

"அட, ஏன் படுத்திட்டீங்க? மறுபடி தூங்கப் போ..."

அவள் முடிப்பதற்குள் மாதவன் கோபமாகக் கத்தினுன்.

"என்ன, பெரிய டீச்சர் மாதிரி கேள்வியாக் கேட்டுக்கிட்டு இருக்கே! போ, போய் வேலையைப் பாரு...!

வசந்தா ஆச்சர்யமாகப் பார்த்தாள். பின், தோளைக் குலுக்கிக் கொண்டு, "உங்களுக்கு என்னுயிருச்சுன்னே புரியலே மாது... எதைப் பேசினுலும் முகத்தைச் சுளிச்சுக்கறீங்க!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனுள்.

பின்னே, தன் வீட்டிலேயே சுதந்திரமாக நடமாட முடியாமல் சங்கடமாக இருந்தால், ஒரு மனிதன் எப்படி சிரித்த முகத்தோடு இருக்க முடியும்? நான் மட்டும் மந்திரியாக இருந்தால், நாட்டில் யாருமே உயிர்களைக் கொல்லக் கூடாது. அசைவம் சமைக்கக் கூடாது என்று முதல் காரியமாய் உத்தரவு போ...

மாதவனின் சிந்தனை ஒரு விநாடி நின்றது.

இந்த மாதிரி 'மந்திரி' கற்பனை செய்து எத்தனை நாளாயிற்று!

கடைசியாக எந்த விஷயத்தைப் பற்றி இந்த ரீதியில் சிந்தித்தோம் என்பதே மறந்து கூடப் போய்விட்டது. முன்பெல்லாம் அடிக்கொருதரம், உப்பு, புளி விவகாரத்திலிருந்து நிஜமான அரசியல் வரை 'நான் மட்டும் மந்திரியாக...' என்று ஆரம்பித்து விட்டு வசந்தாவிடம் வாங்கிக் கட்டிக் கொள்வது வழக்கம்.

'மறுபடியும் ஆரம்பிச்சுட்டீங்களா?' என்று ஒவ்வொரு தரமும் சிரித்தவாறே சலித்துக் கொள்வாள்.

அவள் சலித்துக் கொண்ட பிறகும் விடாமல் மறுபடி மறுபடி சொல்லி, 'இதுக்கு மேலே சொன்னீங்கன்னு நம்மால தாங்க முடியாது சாமி, நான் போறேம்பா...' என்று அவள் ஒடுகிற பாவனையில் வேகமாய் நடக்க ஆரம்பிக்கும்போது, 'சரி, போனுல் போகிறது, இன்றைக்கு இதோடு தர்பார் முடிவடைகிறது ராணி...' என்று நடித்து...

அத்தனை விளையாட்டும் எங்கே போயிற்று இப்போது!

வசந்தாவோடு சாதாரணமான, சுமுகமான பேச்சுக் கூடக் குறைந்துவிட்ட மாதிரி அல்லவா தோன்றுகிறது!

முன்பு இருவருமே வேலைக்குப் போனுலும் கூட, காலையும் மாலையும் பேசுவதற்கு நிறையப் பொழுது இருந்தது. அவள் என்ன வேலை செய்தாலும் கூடவே நின்று, 'உதவி' என்ற பெயரில் எதையாவது கொட்டி, மெழுகி...

எல்லாம் மறைந்து போய்விட்டது...

எப்போது எங்கே எதைப் பேச ஆரம்பித்தாலும், 'உள்ளாற அத்தம்மா மட்டும் வேலை செஞ்சுக்கிட்டு இருக்காங்க, நான் எட்டிக் கூட பார்க்கலேன்னு எப்படி மாது?' என்று போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போய் விடுகிறுள்.

'எட்டிப் பார்த்த' பிறகு ஒரு போதும் திரும்புவதில்லை. அங்கேயே ஐக்கியம் ஆகி விடுகிறுள்!

பொறுப்புகளை ஏற்க வீட்டுக்குப் பெரியவ

ராய் ஒருவர் வந்துவிட்டார் என்பது, முதல் கொஞ்ச நாட்களுக்கு நிம்மதியைத்தரத்தான் செய்தது.

போகப் போக, வீட்டில் பெண்களின் ஆக்கிரமிப்பு அளவுக்கு அதிகமாய் ஆகி விட்டதோ என்று தோன்றியது!

வசந்தாவோடு பேச, சேர்ந்தாற்போல் இரண்டு நிமிஷத் தனிமையாவது கிடைக்கும் என்றால், அது இரவு படுக்கை அறையில் தான்.

அங்கும், வயிற்றைச் சாய்த்துப் படுத்தவுடன் வசந்தா தூங்கிப் போய் விடுவதில் பேச்சாவது, கிண்டலாவது!

இன்றுபோல், ஞாயிற்றுக்கிழமைகளில் நாள் முழுவதும் வீட்டில் இருக்கும் போது ஏதாவதுஒருவிதத்தில்கோபமும்தாபமுமாய் வந்து பேச்சையே கட்டிப் போட்டு விடுகிறது.

கையாலாகாத்தனம் மீண்டும் எரிச்சலைக் கிளப்பிவிட, படுக்கையில் இருப்புக் கொள்ளாமல் மாதவன் எழுந்தான்.

ஜன்னலை ஒட்டி நின்று, வெளியே வேடிக்கை பார்த்தபோது, பக்கத்து போர்ஷன் குழந்தைகள் மூன்றும் விளையாடுவது தெரிந்தது.

பையன்கள் இருவரும் பந்தையும் 'பேட்'டையும் வைத்துக் கிரிக்கெட் விளையாடுகையில், அந்தச் சின்னப் பெண், ''டேய்... டேய்... என்னையும் சேர்த்துக்கங்கடா... நான்எப்பவும்பந்துபொறுக்கிக்கிட்டுமட்டும் தான் வரணுமா? ப்ளீஸ்டா...'' என்று கெஞ்சிக் கொண்டிருந்தாள். அதை லட்சியமே பண்ணாமல் ஒருவன் பந்தை வீச, மற்றவன் சடாரென்று தடுத்து அடித்தான்.

நாளைக்கு நம் குழந்தை பிறந்ததும், இவர்கள் தங்களோடு ஆட்டத்தில் சேர்த்துக் கொள்வார்களோ?

குழந்தை! ஆணா, பெண்ணா?

எதுவாக இருந்தால் என்ன, நல்லபடியாக வளர்த்து நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தால் போதாதா?

குழந்தை என்றதும் மாதவனின் நினைவில் அம்மா எட்டிப் பார்த்தாள்.

'நீ பொறந்தப்புறம் நம்ம குடும்பத்துல குழந்தைங்களே பொறக்கலை... இப்போ அந்த ஏக்கம் தீர, பேரப்புள்ளைய நான் தொட்டுத் தூக்கத்தான் என் உசிரக் காப்பாத்திவிருக்கானோ என்னமோ, அந்த முருகன்!' என்று நெகிழ்ந்தாள்.

குழந்தைகளைப் பற்றியும், இவன் குழந்தையாய் இருந்தபோது நடந்தவற்றைப் பற்றியும் என்னென்னவோ பேசினாள்.

சென்றமுறைபோனபோது கூட, வேலைக்காரப் பெண்ணைக் கிட்டத்தில் வைத்துக் கொண்டு, எதையெதையோ சட்டியில் போட்டு வறுத்து, பொடித்து, டப்பாவில் போட்டுக் கொடுத்தாள்.

'இதுல ஒரு கரண்டி போட்டுக் கஞ்சி காய்ச்சிக் குடிச்சா, தாய்ப்பாலுக்கு எப்பவுமே குறைவில்லை... தாயும் புள்ளையுமா வீட்டுக்கு வந்த உடனே, தவறாம தினம் சாப்பிடச் சொல்லிடு மாது...' என்றாள்.

உடம்பு ஓரளவுக்குக் குணமாகி, வீட்டுக்குள் நடமாடுவது, சாத்தியமானதிலிருந்து, ஒவ்வொரு தரம் மாதவன் வரும்போதும் இப்படி எதையாவது டப்பாவிலும் தூக்கிலுமாக நிரப்பி அனுப்பிக் கொண்டேதான் இருக்கிறாள்.

என்ன இருந்தாலும், அம்மாவின் சிரத்தையும், கைமணமும் அலாதியானதுதான்!

அம்மாவின் கைமணத்திலிருந்து மனசு அம்மா வைக்கும் காரக் குழம்புக்குத் தாவியது.

ஒன்றோடொன்று ஒட்டாத வெள்ளைச் சுடுசோற்றில், துளி நெய் விட்டு, இரண்டு கரண்டி குழம்பு ஊற்றி அதிராமல் உருட்டிச் சாப்பிட்டால் எப்படி இருக்கும்!

இப்போதே காஞ்சிபுரம் போனால்என்ன?

உடனே கிளம்பினால்கூட ஒன்றரை மணிக்குள் போய்விடலாம்.

இங்கே அத்தையும் மருமகளுமாய் எதையோ சமைத்துச் சாப்பிட்டுக் கொள்ளட்டும், நாம் இப்படி அருவருப்புப் பட்டுக் கொண்டு ஒதுங்கி உட்கார்ந்திராமல் போய் விட்டால் என்ன?

எண்ணம் தோன்றிய ஒரே நிமிஷத்தில் மேஜை அருகே வந்து பர்ஸை எடுத்தான். வாட்சைக் கையில் கட்டிக் கொண்ட நாழியில், திடுக்கிட்ட மாதிரி நின்றான்.

என்ன இது மடத்தனம்!

நேற்று மாலை வசந்தாவை டாக்டரிடம் செக் – அப்புக்காகக் கூட்டிப் போன போது கூட, 'எப்போது வேண்டுமானாலும் பிரசவம் ஆகிவிடும்' என்று டாக்டர் சொன்னாரே! அடுத்த தெருவில்தான் நர்சிங் ஹோம் இருக்கிறது என்றாலும், வீட்டு ஆம்பிளை இல்லாத நேரத்தில் வலி எடுத்து விட்டால் அத்தம்மா மட்டும் தனியாக என்ன செய்வார்!

எடுத்தவற்றை மீண்டும் மேஜையிலேயே வைத்தான்.

'எப்போது வேண்டுமானாலும் பிரசவம் ஆகிவிடும்' என்றால், இன்றேவா? நாளையா?

மறுபடி குழந்தை நினைப்பு எழ, தன் குழந்தையைச் சுமக்கும் சிரமத்தை ஏற்றிருக்கிற வசந்தாவிடம் திடீரென்று பரிவு உண்டாயிற்று.

வெட்டியாய் உட்கார்ந்திருக்கிற என்னையே அம்மாவின் காரக் குழம்பு சபலம் ஒரு நிமிஷம் ஆட்டி வைத்துவிட்டது என்றால், என் பிள்ளையைச் சுமந்து கொண்டு 'வாயும் வயிறுமாய்' இருப்பவளை மட்டும் சும்மா இரு என்றால் எப்படி?

இத்தனை நேரம் அலைக்கழித்துக் கொண்டிருந்த நினைவுகளை ஒதுக்கிவிட்டு, லேசான குற்ற உணர்வோடும், பரிவோடும், ''வசு...'' என்று கூப்பிட்டுக் கொண்டே சமையலறை அருகே போனபோது, அங்கேயிருந்து எழுந்த எந்த அசைவ மணமும் மாதவனை அதிகமாகத் துன்புறுத்தவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

(தொடரும்)

வேதம் புதிது



பாரதி ராஜா கதை சொல்லும் பாணியே தனிதான்.

கோயிலில் அமலா கோலம் போடுகையில் அதை ராஜா ரசிக்கிறாரே அந்த இடத்திலிருந்தே சொல்ல ஆரம்பிக்கலாம். மருதாணியிட்ட கால் கருங்கல் தூணுக்குப் பின் தோன்றித் தோன்றி மின்னலைப் போல் மறைவதும், அந்தப் பாதக்கொலுசு சிலுங் சிலுங் என்று சிணுங்குவதும்...

சௌந்தரிய லஹரிக்கு சாருஹாஸ நீலகண்ட சாஸ்திரிகள் பாஷ்யம் சொல்லிக் கொண்டிருக்கையில், ராஜா, அந்த உலக நாயகியை அமலாவின் முகத்தில், காதில், மூக்கில், கழுத்தில் தரிசிப்பதும்...

கைக்குட்டை மேலே பறக்க அதை இரண்டு கைகள் ஒருசேரப் பற்றுவதும்...

கோயிலில் ஊர் மக்கள் சிலையாகி நிற்க, அவர்களிடையே தலைவனும், தலைவியும் டூயட் பாடுவதும்...

ஓடிப் போய் பாரதிராஜாவைக் கட்டிப் பிடித்துக் கொள்ளச் சொல்லும் காட்சிகள் தான்.

ஆற்றங்கரையில் நின்று கொண்டு அந்தணச் சிறுவன், 'பாலுங்கறது உங்க அப்பா அம்மா உங்களுக்கு வச்ச பேர். தேவர்ங்கறது நீங்க படிச்சி பாஸ் பண்ணி வாங்கின பட்டமா என்று கேட்க, சத்யராஜ் தேவர் முகத்தில் அறைபட்டு நிற்க, மறுபடி சிறுவன் 'நான் கரை ஏறிட்டேன். நீங்க இன்னும் ஏறல போலிருக்கே' என்று கேட்பது நெகிழ வைக்கும் இடம். இதுபோல தேய்த்துத் தேய்த்து மெருகேற்றப்பட்ட வசனத்துடன் (வாழ்க வசனகர்த்தா) பளிச்சிடும் இடங்கள் பலப்பல.



அந்தணச் சிறுவனை வளர்க்கும் பாலுத் தேவர் சந்திக்கப் போகிற சங்கடங்களைச் சொல்லுவதுதான் பாரதிராஜாவின் பிரதான நோக்கமெனில், நீலகண்ட சாஸ்திரிகளைச் சாகடித்தது சரி. வைதேகியைக் கதையிலிருந்து விலக்கிவிட்டதும் ஓ.கே. சங்கர பாண்டியை ஏன் சாகடிக்க வேண்டும்?

பிற்பாடு சங்கரபாண்டி, வைதேகி, குடுமிச் சிறுவனுடன் பாலுத்தேவர் குடும்பத்துடன் குடி பெயர்ந்திருந்தால் பாரதிராஜா படைத்திருக்கும் வேதம் புதிதுதான் என்று சந்தோஷமாக ஒப்புக் கொண்டிருக்கலாம்.

அதைவிட்டு, தபோவனத்து ரிஷி போல நிழல்கள் ரவி. ஆதி என்ன, அந்தம் என்ன?; தெரியாது. 'புதுவெள்ளத்தில் வந்த புதுப் பெண்ணே' என்று அவர் அமலாவை அழைக்கக் காரணம் என்ன? தெரியாது. திடீரென்று வருகிறார். மோட்டார் சுந்தரம் பிள்ளை காரில் பவனி போய்த் திரும்பி வந்து இரண்டு டயரும் பங்க்சர் என்று அழுகிறார். அதோடு காணாமல் போகிறார். வைதேகி வந்து பாலுத்தேவர் குடும்பத்தில் இணைந்து கொள்ள ஊர் மொத்தமும் அனாவசியமாய்ப் பாலுத்தேவரை வெட்டிச் சாய்க்க... திரைக்கதை சூறாவளியில் அகப்பட்ட இலவம் பஞ்சு மாதிரி ஆகிவிடவில்லை?

தேவேந்திரனின் இசை — குறிப்பிட்டுப் பாராட்டப்பட வேண்டிய சமாசாரம்.

வைரமுத்துவின் பாடல்வரிகளும்டிட்டோ.

நடிப்பைப் பொறுத்தவரை எல்லோரும் நிறைவாகத்தான் செய்திருக்கிறார்கள்.

ராஜாவும், அமலாவும் இணைந்திருந்தாலாவது ஒரு நல்ல காதல் கதையைப் பார்த்த திருப்தி வந்திருக்கும். பாரதிராஜா ஜாதி ஒழிப்பு என்று கொடி தூக்கப் போய், அதுவுமின்றி இதுவுமின்றிப் போய்விட்டது.

பாரதிராஜா கோலம் போட்டிருக்கிறார் — அவசரக் கோலம். ஆனாலும் பார்க்கலாம்.

— ஜெயமன்மதன்

பின் குறிப்பு : இந்தப் படத்தைத் தடை செய்ய வேண்டுமென்று கோரியிருக்கிறார்களாமே ஒரு சாரார்! எதற்காக? உணர்ச்சி வசப்படத் தேவையேயில்லை.

கல்லூரியின் போர்ட்டிகோவில் வந்து மெதுவாக அசைந்து நின்றது அந்தப் படகுக் கார். இறங்கியவர் ராஜகோபால் — அந்தத் தொகுதியின் எம். எல். ஏ!

பொன்னிறத்தில் மின்னிய பட்டு வேட்டி; அதே நிறத்தில் மின்னலடித்த முழுக்கை ஜிப்பா; கணுக்கால் வரை நீண்டு வளர்ந்திருந்த துண்டு. கைகளில் கட்டை விரல்கள் தவிர மற்றெல்லாவற்றிலும் டிசைன் டிசைனாய், கலர்கலராய் மோதிரங்கள். கழுத்தில் விரற்கடை மொத்தத்திற்குப் புலிநகம் கோத்த மைனர் செயின். முறுக்கி வளர்த்த மீசை. 'டை' அடித்து ஒழுங்காய் வாரிய தலை.

நடக்கும் போது ஒரு பந்தாவான 'சருக்'

ஓடி வந்து பெரிசாய்க் கும்பிடு போட்டு பவ்யமாக அழைத்துப் போனான் பியூன். பின்னாலேயே பரிவாரங்கள் நாலைந்து பேர் காரில் இருந்து இறங்கி நடந்து போனார்கள்.

"உங்களைப் பார்க்க எம்.எல்.ஏ. வந்திருக்கார் சார்" — அவசரமாக ஓடி வந்த பியூன் சொன்னான்.

"எம்.எல்.ஏ. யா?" — பிரின்சிபால் கணேச மூர்த்தி புருவத்தைச் சுருக்கினார்.

நான்கு விநாடிகள் தான். அந்த முகம் அவர் நினைவுக்கு வந்து விட்டது.

'அந்த பந்தாப் பேர்வழியா? இப்ப எதுக்கு வந்திருக்கார்? இது அட்மிஷன் சமயமில்லையே! போன ஜூலையிலே வந்து மகனுக்கு கெமிஸ்ட்ரியிலே சீட் கேட்டப்போ, எதுக்கு வம்புன்னு, உடனே போட்டுக் குடுத்துட்டேனே...'

அதற்குள் அவரே வேகமாக உள்ளே வந்து விட்டார்.

"வணக்கம் பிரின்சிபால் சார்!" — தேர்தல் சமயக் கும்பிடு மாதிரி போட்டார்.

"வணக்கம்! வாங்க, வாங்க! உட்காருங்க. ஏது இவ்வளவு தூரம்? சௌகரியம்தானே?"

"எனக்கென்ன? நல்லாருக்கேன். உங்க காலேஜ் தான் சரியாக இல்லாத மாதிரி தோணுது...." — எடுத்த எடுப்பிலேயே சூடாக ஆரம்பித்தார் ராஜகோபால்.

பிரின்சிபால் துணுக்குற்றார்.

"என்ன சொல்றீங்க? புரியலையே?" — நெற்றியில் சுருக்கம் காட்டினார்.

"பசங்க பாடத்தைத் தான் ஒழுங்காக் கத்துத்தரதில்லே, நல்ல பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையுமாவது கற்றுக் கொடுக்கக் கூடாதா?" — வார்த்தைகள் கோபத்தில் தோய்க்கப்பட்டிருந்தன.

பிரின்சிபாலுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஓர் எம்.எல்.ஏ.



''இவனுக கெட்ட கேட்டுக்கு ஈவ் டீசிங் தாம், ஈவ் டீசிங்! பொட்டப் பசங்க....'' — மீண்டும் உறுமினார் எம்.எல்.ஏ.

இப்போது பிரின்சிபாலுக்கு விஷயம் ஓரளவுக்குப் புரிந்து விட்டது.

இரண்டாம் ஆண்டு படிக்கும் எம்.எல்.ஏ.யின் மகள் பூங்கோதையை எந்த வாலுப் பயலோ கிண்டல் பண்ணி விட்டான் போலிருக்கிறது!

''இவ்வளவு கோபமாகிற அளவுக்கு என்ன நடந்துச்சுன்னு...''

''இந்தக் காலேஜுக்கு அஸ்திவாரக் கல் கொண்டு வந்ததே நான்தான். நான் முயற்சியெடுக்கலேன்னு இந்த இடத்திலே காலேஜும் வந்திருக்காது. ஒரு சுருமாந்திரமும் வந்திருக்காது. ஒரே முந்திரிக் காடா கிடந்திருக்கும். என்கிட்டேயே வாலாட்டிப் பார்க்கிறீங்களா? வாங்கடா இங்கே, பார்த்துடலாம்'' — இப்போது கூச்சல் போடவே ஆரம்பித்து விட்டார்.

என்ன பேசுவதென்று தெரியாமல் சுவரைப் பார்த்தார் பிரின்சிபால்.

''பட்டிக்காட்டுப் பசங்க! இடம், பொருள், ஏவல் தெரிய வேண்டாம்? யாருக்கிட்டே வம்பிழுக்கிறோம்னு நினைக்கப் பார்க்க வேண்டாம்? என்னை என்ன கிள்ளுக் கீரைன்னு நினைச்சாங்களா? நான் நினைச்சா இந்தக் காலேஜையே இழுத்து மூடி விட முடியும்...''

''மன்னிக்கணும். உங்க கோபத்திலே நியாயமிருக்கலாம். ஆனால் அந்த நியாயத்தைத் தெளிவாச் சொன்னாத்தான் நான் நடவடிக்கை எடுக்க முடியும். தயவு செய்து அமைதியாச் சொல்லுங்க...'' — வார்த்தைகளில் பணிவை வரவழைத்துக் கொண்டார் பிரின்சிபால்.

''எனக்கு இன்னும் கோபமே வரலே பிரின்சிபால் சார். எனக்கு உண்மையாக் கோபம் வந்துட்டா சும்மா பேசிட்டு நிற்க மாட்டேன். யாரும் தாங்க மாட்டீங்க...''

....''

''யோவ்! இங்க வாய்யா. எவன்யா அவன் தியாகராஜன்? உடனே போய் அந்தப் பயலை தரதரன்னு இழுத்துட்டு வாய்யா...'' — பியூனைப் பார்த்துச் சொன்னார் எம்.எல்.ஏ.

பியூன் பிரின்சிபாலைப் பார்த்தான்.

''எதுக்கு அந்தப் பையனைக் கூப்பிடுறீங்க? அவன் என்ன பண்ணினான்?'' — பிரின்சிபால் கேட்டார்.

''என்ன பண்ணினானா? இன்னும் என்ன பண்ணணும் அந்த ராஸ்கல்? என் பொண்ணுன்னு தெரிஞ்சும் கிண்டல் பண்ணியிருக்கானே சார்! எவ்வளவு திமிர் இருக்கும் அவனுக்கு? கூப்பிடுங்க அவனை...

''தயவு செய்து கோபப்படாதீங்க. உட்காருங்க. அந்தப் பையனைக் கூப்பிட்டு விசாரித்துத் தண்டிக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு. சீக்கிரம் ஓடிப் போய் ரெண்டு காப்பி வாங்கிட்டு வாப்பா...''

''காப்பி கிடக்கட்டும் காப்பி. முதலில் அந்தப் பயலை இழுத்துட்டு வரச் சொல்லுங்க. நாலு புரட்டுப் புரட்டி, என் கையாலேயே நாலு அறைவிடணும்...'' — சப்தம் போட்டுக் கத்தினார்.

இப்போது அந்தப் பையனை அழைத்துக் கொண்டு வந்து இவர் முன்னே நிறுத்தினால் நிச்சயம் ஏதாவது ஏடா கூடமாக நடந்து விடுமென்று பயந்தார் பிரின்சிபால்.

''நான் சும்மா வரலே சார். கையிலே துப்பாக்கியோடு ரெடியாதான் வந்திருக்கேன். 'மைனா சுடற மாதிரி பொசுக்கித் தள்ளிடறேன். இதை நான் எனக்காக மட்டும் சொல்லலே. இந்த மாதிரி ஒரு பயலுக்கு சூடு போட்டாத்தான், அவனை மாதிரி இருக்கிற மற்ற காலிப்பயலுங்களெல்லாம் கொஞ்சம் பயப்படுவானுங்க''

குரல் இப்போது உச்சத்துக்குப் போய் விட்டது. பக்கத்தில் உள்ள வகுப்பறையில் நிச்சயம் இந்த சப்தம் எதிரொலிக்கும். பாடம் பாதிக்கப்படும். பிரின்சிபால் சில விநாடிகள் யோசித்தார். பியூனை அனுப்பி தியாகராஜனை அழைத்து வரச் சொன்னார்.

சில நிமிடங்களில் திரும்பி வந்த பியூன் ''அந்தப் பையன் இன்னைக்குக் காலேஜுக்கே வரலையாம் சார்!'' என்றான்.

ராஜகோபாலின் முகத்தில் ஏமாற்றக் கோடுகள்.

கொஞ்சம் கொஞ்சமாகக் கோபம் இறங்கியது.

'ராஜ்கோகுல்'

அந்த மாணவன் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரும்பத் திரும்ப பிரின்சிபால் வாக்குறுதி கொடுத்த பிறகு, வெளியே காத்திருந்த தன் பரிவாரங்களோடு காரில் ஏறிப் புறப்பட்டார் ராஜகோபால்.

கல்லூரிக் கவுன்சில் கூட்டம் உடனே கூட்டப்பட்டது. மூத்த பேராசிரியர்கள் எல்லாரும் கூடினார்கள்.

கிண்டல் செய்யப்பட்டது எம்.எல்.ஏ.யின் மகள் என்பதாலோ என்னவோ எல்லோருமே தீவிரமாகப் பேசினார்கள்.

பூங்கோதையைக் கூப்பிட்டு நேராகவே விசாரித்தார்கள்.

இது போன்ற தவறுகளுக்குக் கடுமையான தண்டனை வழங்கினால் தான் கல்லூரிச் சூழ்நிலை மேம்படும் என்று பேசினார்கள். அப்படிச் செய்தால் மாணவர்கள் உடனே 'ஸ்ட்ரைக், போராட்டம்' என்று ஆரம்பித்து வகுப்புகள் கெட்டு விடும் என்று ஒரு சாரார் எதிர்க் குரல் எழுப்பினார்கள்.

ஒரு மணி நேரம் பேசிய பின் ஒரு முடிவிற்கு வந்தார்கள்.

அன்று மாலையே தியாகராஜன் என்ற அந்த மாணவர் டிஸ்மிஸ் செய்யப்பட்ட விவரம் நோட்டீஸ் போர்டில் தொங்கியது!

அடுத்த நாள் காலை....

கல்லூரி வாசலில் ஒரே குழப்பமான சூழ்நிலை.

கும்பலாக சில மாணவர்கள் நின்று கொண்டு, மற்ற மாணவர்கள் உள்ளே செல்ல முடியாமல் மறித்துக் கொண்டு, கூட்டம் கூட்டிக் கொண்டிருந்தார்கள்.

''பிரின்சிபால்....... ஒழிக!....''

''டிஸ்மிஸ் ஆர்டரை ரத்து செய்...!''

''தியாகராஜனை திரும்பச் சேர்...!''

கோஷங்கள் உள்ளே உட்கார்ந்திருந்த பிரின்சிபாலின் செவித் திரைகளைக் கிழித்தன.

மாணவர் தலைவன் வேகமாக உள்ளே வந்தான்.

''நீங்க என்னப்பா நினைச்சுக்கிட்டிருக்கீங்க?'' — பிரின்சிபால் கண்களில் கோபம் தெறிக்கக் கேட்டார்.

''தியாகராஜனைத் திரும்பச் சேர்க்கிற வரைக்கும் மாணவர்கள் யாரும் உள்ளே வரமாட்டாங்க சார்''

''அது மட்டும் நடக்காது தம்பி. அந்தக் கடவுளே வந்து சொன்னாலும் அவனைத் திரும்பச் சேர்க்க முடியாது. செய்த தப்புக்கு தண்டனை அனுபவிச்சுத்தான் ஆகணும்'' — உறுதியாகச் சொன்னார்.

''பார்த்துடலாம் சார்'' — அவனும் கோபமாகச் சொல்லிவிட்டு வெளியேறினான்.

சில நிமிடங்களிலேயே வித்தியாசமான சப்தங்கள் கேட்க ஆரம்பித்தன! கண்ணாடிகள் நொறுங்கும் சப்தம்!

மாணவர்கள் சிலர் ஆவேசமாக வீசிய கற்களால் ஜன்னல் கண்ணாடிகளும், ட்யூப் லைட்களும் சிதறிச் சரிந்து கொண்டிருந்தன. சூழ்நிலையை உணர்ந்த பிரின்சிபால் அவசரமாக எழுந்து வெளியே ஓடி வந்தார்.

''ஏய் நிறுத்து, நிறுத்து! கல்லைக் கீழே போடு...'' கத்திக் கொண்டே ஓடி வந்த பிரின்சிபாலின் நெற்றியில்....

— யாரோ ஒரு மாணவன் எறிந்த கல் வந்து தாக்க...

— இரத்தம் அவசரமாக வெளியேறி, புருவம் வழியாக மூக்கில் இறங்கியது.

கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டது.

நிலையில் வலது கண்ணுக்கு மேலே பிளாஸ்திரி ஒட்டோடு பைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார் பிரின்சிபால் கணேசமூர்த்தி.

''எம்.எல்.ஏ. வந்திருக்கார் சார்'' — அவசரமாக வந்த பியூன் அறிவித்தான்.

''வரச் சொல்லு.''

''வணக்கம், பிரின்சிபால் சார்...''

''வணக்கம். வாங்க, உட்காருங்க.''

''என்னுடைய விஷயத்துக்காக நீங்க அடிபட்டுட்டீங்க. ரொம்ப வருத்தமா இருக்கு...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. யாரா யிருந்தாலும் தப்புப் பண்ணினா தண்டனை கொடுக்கத்தானே வேணும். கடமையைச் செய்யறப்போ இந்த மாதிரி சங்கடங்கள்

வரத்தான் செய்யும்...''

''நீங்க ஒரு உதவி செய்யணும்...''

''என்ன செய்யணும்? சொல்லுங்க...''

''அந்தத் தியாகராஜனைத் திரும்பவும் காலேஜிலே சேர்த்துக்கிட்டுடணும்...''

''ஏன்?'' — அதிர்ந்து போய்க் கேட்டார் பிரின்சிபால்.

''அந்தப் பையன் வசதியான, பெரிய இடத்துப் பையனாயிருக்கான். — அதோட எங்க ஜாதிக்கார பையனா வேற இருக்கான்...

''அதனாலே?...''

''அது மட்டுமில்லே. அவங்கப்பாவை யாருன்னு தெரிஞ்சுக்கிட்டு நேத்துத்தான் சந்திச்சுப் பேசினேன். மாற்றுக் கட்சியிலே ஒரு முக்கிய பிரமுகர். மாவட்ட அளவிலே முக்கியமான பதவியிலே இருக்கார். என்னோட கொள்கை என்னன்னு கேட்டீங்கன்னா, ஒரு குடும்பத்திலே ஐந்து பேர் இருந்தா, ஐந்து பேரும் ஐந்து கட்சியிலே இருக்கணும். அப்பத்தான் எந்தச் சூழ்நிலையிலும் நமக்குத் தேவையானதைச் சாதித்துக் கொள்ள முடியும். அந்த அடிப்படையிலே நாங்க ஒரு முடிவுக்கு வந்துட்டோம். என் மகள் பூங்கோதைக்கும், அந்தப் பையன் தியாகராஜனுக்கும் சீக்கிரமே கல்யாணம் முடிச்சுடுடறதுன்னு தீர்மானிச்சுட்டோம். அதனாலே...''

''எது எப்படியிருந்தாலும், அவனுக்குக் கொடுத்த தண்டனையை மாற்ற முடியாது'' — கடுமையான குரலில் சொன்னார் பிரின்சிபால்.

''என்ன சார் புரியாம பேசறீங்க? இந்த வயசிலே இதெல்லாம் இயற்கை தான் சார். பருவக் கோளாறு! சின்ன வயசிலே யாரு தான் பொண்ணுக பின்னாடி சுத்தலே, சொல்லுங்க பார்க்கலாம்? என்னையே எடுத்துக்கங்க. அந்த வயசிலே எவ்வளவு அட்டகாசம் பண்ணியிருக்கேன் தெரியுமா? நீங்களே கூட பண்ணியிருப்பீங்க. அதுவுமில்லாம, இந்தக் காலத்துப் பொண்ணுக மட்டுமென்ன, ஒழுங்காவா இருக்குதுங்க...? அதனாலே அப்படி, அப்படி... கண்டுக்காமல் போயிட வேண்டியதுதான்...''

''மன்னிக்கணும். அந்தப் பையனைத் திரும்பவும் சேர்த்துக்கறதுக்கில்லே'' — மீண்டும் உறுதியாகச் சொன்னார் பிரின்சிபால்.

''அப்படியா...? புகார் கொடுத்த என் மகளே, அந்தப் பையன் எந்தக் கிண்டலும் பண்ணலேன்னு சொல்லி, புகாரை வாபஸ் வாங்கிட்டா...?''

''ஓஹோ! இவர் அரசியல்வாதியாயிற்றே! அதான் டெக்னிகலாக பாயிண்டைப் பிடிக்கிறார்!''

பிரின்சிபால் சில விநாடிகள் மௌனமாகப் பார்த்தார்.

''சரி, சரி. அப்படியே எழுதிக் கொடுக்கச் சொல்லுங்க.'' — தோல்வியை ஒத்துக் கொள்வது போலத் தாழ்ந்த குரலில் பேசியபடியே பிரின்சிபால் நெற்றியைத் தடவிக் கொண்ட போது, அந்தப் பிளாஸ்திரி ஒட்டு சுருக்கிட்டது. இதயத்தில் வலித்தது.



ஆட்டோ டிரைவர்: 'மீட்டர்'னு ஒண்ணு இருப்பது ரொம்ப நல்லதாப் போச்சு!

நண்பர்: ஏன்?

ஆட்டோ டிரைவர்: அப்பத்தானே மீட்டருக்கு மேலே பணம் கேட்க முடியும்!

— எஸ். முகம்மது யூசுப்.



படுத்திருப்பவரிடம் அதிகாரி: நீங்கள் இறந்த பின்பு பத்தாயிரம் ரூபாய் கொடுக்க இருக்கிறோம். யாரிடம் கொடுப்பது?

படுத்திருப்பவர்: இப்போதே கொடுத்தீர்களானால் நான் நல்லபடியாக வைத்தியம் செய்து பிழைத்துக் கொள்வேனே!

அதிகாரி: சட்டம் இடம் கொடுக்கலியே!

— தேனி. எஸ். மாரியப்பன்.



''என்னப்பா இது. ஒரு இட்லி அம்பது பைசாவா...? அநியாயமா இருக்கே...?''

''சீக்கிரம் சாப்பிட்டுட்டுக், கையைக் கழுவுங்க சார். பில் போடுமுன்னே மறுபடி விலை ஏறினாலும் ஏறிடும்...!''

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

N. S. K. பில்டர்ஸ்

குறைந்த செலவில் வீடு கட்ட வேண்டுமா?


இதோ! என்.எஸ்.கே. பில்டர்ஸ் உங்களுக்காக அளித்திடும் மாபெரும் சலுகை

புரட்சித்திட்டம் புதுமைத்திட்டம்

1800 சதுர அடி மனையில் குறைந்த பட்சம் 500 சதுர அடி கட்டிடப் பரப்புள்ள ஒரு தனி வீடு

விலை சதுர அடி ஒன்றுக்கு ரூ. 200/- (மனை உட்பட)

வங்கி ஊழியர்கள் மற்றும் மாதச் சம்பளம் பெறுவோர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு!



10% மாபெரும் விழாக்கால சலுகை

ஒரு மனையின் விலை ரூ. 20,000/- மட்டுமே

முதலில் செலுத்த வேண்டிய தொகை 50% மீதியை 90 நாட்களில் செலுத்தலாம்.

வசதிகள்

1. எம்.எம்.டி.ஏ. (M.M.D.A.) அங்கீகாரம் பெற்றது. நெ. PPD 40 10/87
2. தெளிவான பத்திரங்கள்
3. மின்சார இரயில் மற்றும் பஸ் வசதிகள்
4. 10 அடி ஆழத்தில் சுவையுள்ள குடிநீர்
5. பள்ளிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இவை அனைத்தும் அருகாமையில் உள்ளன.

N.S.K. நகர்,
திருநின்றவூர், சென்னை-602 024.

சலுகைகள்

1. உடனடியாக வீடு கட்டுவதற்கு உண்மையில் விருப்பமுள்ளவர்களுக்கு 10% தள்ளுபடி வழங்கப்படும்.
2. முழுத் தொகையையும் செலுத்துவோருக்கு சிறப்புத் தள்ளுபடி அளிக்கப்படும்.
3. குரூப்பாக சேர்ந்து வாங்குவோர்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்.

ஒரு சில மனைகளே உள்ளன. 15.1.88 முதல் 15.2.88 வரை இச்சலுகை அளிக்கப்படும். ஏமாற்றத்தை தவிர்க்க இன்றே தொடர்பு கொள்ளவும்.

மனைகளை இலவசமாகப் பார்வையிட 15.2.88 வரை தினசரி ஏற்பாடு செய்யப்படும்.

அணுக வேண்டிய முகவரி:

N. S. K. ரியல் எஸ்டேட்ஸ்

38-B, பர்கிட் சாலை (முதல்மாடி), தி. நகர்.
சென்னை-600 017. தொலைபேசி எண்: 445252, 442106

EXELADS / NSK 006 / 87

26

நிற்க நிழல் வேண்டும்

இந்திய ஹை கமிஷனரின் அலுவலகத்திலிருந்து வெளியில் வந்து தெருவில் நடக்கும் போது, பிரபுவுக்கு மெலிதான திருப்தி ஏற்பட்டிருந்தது. இந்திய ஹை கமிஷனின் உதவியுடன் அவன் ஸ்ரீலங்கா விமானத்தில் மறுநாள் யாழ்ப்பாணத்திற்குக் கிளம்ப ஏற்பாடாகி விட்டது. சீலியாவையும் உடன் அழைத்துச் செல்ல அவர்கள் அனுமதி வாங்கிக் கொடுத்து விட்டார்கள்.

சீலியா அவனுடன் செல்வதில் விஜயபால சூர்யவுக்கு ஆட்சேபணை இருக்காது. சென்ற மாத மத்தியில் யாழ்ப்பாணத்துக்குக் கொழும்பிலிருந்து ரயில் போக்குவரத்து ஆரம்பித்திருந்தது. உடனே யாழ்ப்பாணத்துக்குக் கிளம்ப சீலியா அவசரப்பட்டாள். பாலசூர்ய இஷ்டப்படவில்லை.

''ஆபத்து இன்னும் விலகவில்லை'' என்றார் அடிக்கடி. ''அமுதச் சரண் முடியவில்லை. உடன்படிக்கையை எதிர்க்கும் தமிழ், சிங்களக் கும்பல்கள் எப்பொழுது என்ன செய்யும் என்று சொல்ல முடியாது. இத்தனை நாட்கள் பொறுத்தாய் இன்னும் கொஞ்ச காலம் பொறு!'' என்றார்.

அவரது பயத்தில் நியாயமில்லாமல் இல்லை என்று அவன் நினைத்துக் கொண்டான். சென்ற மாத ஆரம்பத்தில் உடன்படிக்கைக்கு ஒத்துழைப்பதாகப் புலிகள் ஒரு பக்கம் சொன்னவையுடன் மறுபக்கம் தனி ஈழத்துக்கான போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை என்று சொன்னது மனத்தின் மூலையில் ஈசுவரனின் பயமெல்லாம் வந்து அமர்ந்தது போல் தவிப்பு ஏற்பட்டது.

''இவர் என்ன கதைச்சாலும் நான் கிளம்பப் போறேன்'' என்ற சீலியாவைத் தடுக்க வைத்தது.

''நீங்க இப்பக் கிளம்பறது எனக்கும் சரின்னு படல்லே சீலியா'' என்றான் அவன் சிநேகிதமாக. ''ஏதாவது உங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுப் போனா உங்களை நான் கண்டுபிடிச்சதுக்கு அர்த்தமே இல்லாம போயிரும். ஒண்ணு பண்றேன். நிலைமை அங்கே எப்படியிருக்குன்னு பார்க்க நான் எப்படியும் போகணும். என்னை இந்திய ஹை கமிஷன் விமானத்திலே அனுப்பும். உங்க வீட்டுக்கு போய் விசாரிச்சா ஜயசீலன் வந்தானான்னும் தெரியும். நான் போய்ப் பார்த்து நாலு நாளிலே திரும்பிடுவேன். நான் வந்து க்ரீன் சிக்னல் கொடுத்து உங்களை அனுப்பி வைக்கிறேன்.''

ஆனால் அவன் திரும்பி வந்து பச்சைக் கொடி காட்ட முடியவில்லை. அவன் சென்ற போது யாழ்ப்பாணம் அமைதியாகத்தான் இருந்தது. இரண்டு மாதங்களுக்கு முன் அவன் பார்த்த, விடாமல் குண்டோசை கேட்ட யாழ்ப்பாணம் இல்லை. ஜனங்கள் பயமில்லாமல் தெருவில் நடந்தார்கள். இந்தியப் படை வீரர்களை மரியாதையோடு பார்த்தார்கள். முன்பு ஹோட்டலை இழுத்து மூடிய முதலாளி, இப்பொழுது வெட்டு மல்லாக்காகத் திறந்திருந்தார். ''இந்த உடன்படிக்கை ஒரு வரப்பிரசாதம் தம்பி'' என்றார் கண்ணீர் மல்க. ''பயந்து பயந்து செத்ததெல்லாம் இனி கனவாயிடணும் தம்பி...''

எளிய மக்கள் வெகு சரளத்தோடு சமாதானத்தை ஏற்றது மனத்துக்கு நெகிழ்வைத் தந்தது. அவன் அறைக்குள் சாமானை வைத்து விட்டு காலை ஆகாரம் செய்யப் போன போது முதலாளி தம் கையாலேயே பரிமாறினார்.

''முன்பு தம்பி வந்த போது சரியாச் சோறு கூட போட முடியல்லே. இப்ப நல்லாச் சாப்பிடுங்கோ. வண்டி தாறேன். எங்கு வேணும்னாலும் எடுத்துக்கிட்டுப் போங்கோ. போராளிகளுக்குப் பயந்து வண்டியைக் கொழும்பிலே வெச்சிருந்தேன். இப்பத்தான் வரவழைச்சேன்'' என்றார்.

அவனுக்குப் பழசெல்லாம் பகபகவென்று ஞாபகம் வந்தது.

பள்ளிகளும் சர்வகலாசாலையும் பழைய சரித்திரத்தை மறந்தது போல் இயங்கின. ஊரின் கலகலப்பு நம்ப முடியாததாக இருந்தது. ஈசுவரனின் கவலை அர்த்தமற்றது என்று தோன்றிற்று. போராளிக் கும்பல்கள் ஒன்றையொன்று மோதிக் கொண்டு உடன்படிக்கைக்கு எதிராக இடையூறுகள் ஏற்படுத்தப் பார்த்தாலும் ஜனங்களின் ஆதரவு அவர்களுக்கு இருக்காது என்கிற நிச்சயம் மனத்

வாஸந்தி

துக்குத் தென்பை ஏற்படுத்திற்று. அவன் ரொம்பச் சந்தோஷமான மனநிலையில்தான் சிலியாவின் வீட்டிற்குச் சென்றான். சிலியா உயிரோடு இருக்கிறாள் என்கிற செய்தி அவள் பெற்றோருக்கு எப்படிப்பட்ட ஆனந்தத்தைக் கொடுக்கும் என்கிற கற்பனையோடு, வீட்டை நெருங்கும் போது, காமராவைத் தயார்படுத்திக் கொண்டான். அடிக்குரலில் பாட்டுக் கூடக் கிளம்பிற்று.

கதவைத் திறந்த யாரோ ஒருத்தரிடம் அவன் புன்னகையுடன் ''செல்வநாயகத்தைப் பார்க்கணும்'' என்றதற்குக் கிடைத்த பதிலில் புன்னகை உறைந்து போயிற்று.

''ஓ மை காட்!'' என்றான் திரும்பத் திரும்ப. ''எப்படி? எங்கே?''

''வீட்டுக்குள்ளேதான்! குண்டுபட்டு. ஆமி மகளைக் கொண்டு போச்சு. இவர்களையும் ஆமியே சுட்டிருக்கும். யார் எண்டு யாருக்கும் தெரியாது.''

அவன் அதிர்வுடன் சிறிது நேரம் நின்றான். இந்த வீட்டில் இவர்களால் எப்படி இருக்க முடிகிறது என்கிற குழப்பத்துடன், ''இங்கே ஜயசீலன்னு ஒரு ஆள் வந்தாரா?'' என்றான்.

''இல்லே'' என்றவர், ''வேலையிருக்கு எனக்கு'' என்று முணுமுணுத்தபடி கதவைச் சாத்திக் கொண்டார்.

சற்று நேரத்துக்குச் செல்வநாயகம் தம்பதிகளின் உருவம் மனசை அலைக் கழித்தது. சிலியாவை நினைத்து நினைத்துச் சங்கடம் ஏற்பட்டது. வெகு பிரயாசைப்பட்டுத் தன் வேலையில் கவனத்தைத் திருப்பினான்.

எங்கள் ராஜ்யம்தான் இன்னும் என்பது போல் புலிகளின் கொடிகள் பறந்தன மூலைக்கு மூலை. அவர்களைப் பற்றிப் பேசும் போது எளிய ஜனங்கள் அக்கம் பக்கம் பார்த்து ரகசியக் குரலில் பேசினார்கள். இளைஞர்கள் அவர்களது வீரப் பிரதாபங்களைப் பெருமையுடன் அளந்தார்கள்.

''ஆயுதச் சரண் எப்படிச் செய்வோம்?'' என்று கோபத்துடன் கேட்டார்கள். ''நிராயுதபாணிகளாக்கி மிஞ்சியிருக்கிற தமிழனை சிங்களவன் கொல்லப் போவதை இந்தியா வேடிக்கை பார்க்கவா?''

யாழ்ப்பாணத்தில் எந்த மூலைக்குச் சென்றாலும் ஒரு சாராரின் இப்படிப்பட்டப் பேச்சு கலக்கத்தைத் தந்தது. பொது ஜனங்களின் இன்றைய சந்தோஷம் நிலையற்றது என்கிற பயத்தை அளித்தது. கொழும்பில் இருந்த போது ஏற்பட்டிருந்த நம்பிக்கை மெல்ல மெல்ல பலவீனப்பட்டுப் போயிற்று. ஒப்பந்த விகிதத்தின்படி ஸ்ரீலங்கா ராணுவப்படை பாரக்ஸுக்குப் போய் விட்ட நிம்மதியில் போராளிக் கும்பல்கள் ஒன்றையொன்று தாக்கிக் கொண்டிருந்தன. இதில் தலையிட அதிகாரமில்லாமல் இந்திய அமைதிப் படை சும்மா இருந்ததை பலர் சந்தேகத்தோடு பார்த்தார்கள் — ''இவர்கள் யாருக்கு நண்பர்கள்?'' என்று அவன் இந்தியன் என்று தெரிந்தும் கேட்டார்கள்.

இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த ஒரு சீக்கியர் அவனுடைய கேள்விக்கு உதட்டைச் சுழித்தார்.

''ஸ்ரீலங்கா ராணுவத்தால் இவர்களுக்கு மீண்டும் ஆபத்து வரக்கூடாது என்று கண்காணிக்கத்தான் நாம் இங்கு வந்தோம். இவர்களிடையே நடக்கும் உட்பூசல்களைத் தடுக்க நாம் இவர்களது காவல் படையில்லை. நம்மை வேண்டுமென்றே வம்புக்கிழுக்கிறார்களோ என்னவோ, அப்படி இழுக்கப்பட்டால் நமக்குப் பெரிய சோதனையாகப் போகும்.''

ஒரு தமிழ் தளபதி அவனிடம் இரகசியமாகப் பெருமூச்சு விட்டார்.

''ரொம்பப் பெரிய தலைவலியை வரவழைச்சுக்கிட்டோம். ஆயுதச் சரண் இன்னும் முடியல்லே. இவங்ககிட்டே எத்தனை ஆயுதம் இருக்குன்னு அந்த சர்வேசுவரனுக்குக் கூடத் தெரியாது. நிச்சயம் எல்லாத்தையும் கொடுத்திடப் போறதில்லே. கையிலே ஆயுதம் இருக்கிற வரைக்கும் அமைதி வரப் போறதில்லே. ஆயுத பலத்தினாலே அவங்க எப்படி நடந்துக்குவாங்கன்னு சொல்ல முடியாது. நீங்க அவங்களைப் பயங்கரவாதிகன்னு சொல்லுங்க. நியாயமான தர்க்கத்துக்குப் புறம்பானவங்கன்னு சொல்லுங்க, **but the fact remains that they are highly motivated.** பன்னிரண்டு பதிமூணு வயசுப் பையன்கள் கையிலே துப்பாக்கி பிடிச்சு, சாவைக் கண்டு பயப்படாமெ கழுத்திலே ஸயனைட் குப்பியை மாட்டிக்கிட்டு இந்தியப் படை ஜீப் எதிரே மறியல் செய்யறதை என்ன சொல்வீங்க? எப்படி



விளக்குவீங்க? இந்திய ராணுவம் உலகத்திலே மூன்றாவது ஸ்தானம் வகிக்கிறது சார்! அதைக் கண்டு அந்தப் பொடியனுக்கு பயமில்லேங்கறேன்!

"அவங்களுக்கு என்னதான் வேணும்?"

"அவங்களுக்கு இந்த உடன்படிக்கை, அதன் ஷரத்துக்கள் இதுக்கெல்லாம் ஏதும் அர்த்தமில்லே. 'இது எங்க சொந்தப் பிரச்னை. நீ யாரு இடையிலே புகுந்துக்க'ன்னு கேள்வி. 'எங்களுக்கு வேணும் என்கிற தனி ஈழத்தைக் கொடுக்க முடிஞ்சாக் கொடு. இல்லேன்னு நடையைக் கட்டு நாங்க சமாளிச்சுக்கறோம்' என்கிறது அவங்க வாதம்!"

பிரபு சிரித்தான்.

அவர் சினேகிதமாக அவன் முதுகைத் தட்டினார்.

"இந்த சைக்காலஜியை வெளிப்பேர் புரிஞ்சுக்கிறது கஷ்டம். முக்கியமா நம்ம வடக்கத்திக்காரனாலே புரிஞ்சுக்க முடியாது."

இதெல்லாம் ஒரு மாதத்துக்கு முந்தின கதை. இத்தனைக்கும் அப்பொழுது அமைதியான பயமில்லாத காலம். ஆனால் விஷயமறிந்தவர்களின் மனத்தில் அப்பொழுதே பயம் ஜனித்திருந்தது. அந்த பயத்திற்கு ஆதாரமுண்டு என்பதை அடுத்து நகர்ந்த நாட்கள் காட்டிக் கொண்டிருக்கின்றன.

அவன் மிகுந்த சோர்வுடன் கொழும்புக்குத் திரும்பினான். அவன் எப்பொழுது திரும்புவான் என்று காத்திருந்தவள் போல் சீலியா அவனை சந்திக்க வந்தாள். ஆர்வமும் எதிர்பார்ப்பும் பளபளத்த அந்த முகத்தைப் பார்க்கவே அவன் தயங்கினான். அவன் சொன்ன தகவலைக் கேட்டு அவள் சில நிமிஷங்கள் நிலை குலைந்து போனாள்.

"ஜயசீலன் இன்னும் திரும்பி வரல்லேன்னு நினைக்கிறேன்" என்றான் அவன் நொண்டிச் சமாதானமாக.

'எங்களுக்கெல்லாம் அதிர்ச்சிகளைத் தாங்கிப் பழக்கம்' என்பது போல் அவள் அவனை நிமிர்ந்து பார்த்து லேசாகச் சிரித்தாள்.

"என்னுடைய தலைவிதியும் ஜயசீலனுடைய தலைவிதியும் ஒரே கோணத்திலே போகிறது. ஜயசீலனுடைய அம்மாவையும் இரண்டு தங்கைகளையும் ராணுவக்காரர்கள் வீட்டுக்குள் நுழைஞ்சு சுட்டார்கள், ஜயசீலன் போராளி எண்ட காரணத்தாலே."

"ஜயசீலன் ரொம்ப அழுத்தக்காரன். வாயைத் திறந்து எதையும் சொன்னதில்லே. நானா ஊகிச்சதுதான் எல்லாம்."

"எல்லார் சரித்திரமும் இப்ப ஒன்றுதான். வித்தியாசமாக் கதைக்க என்ன இருக்கு?" என்றாள் அவள் ஜயசீலனைப் போலவே.

இந்த ஒரு மாதமாக, விஜயபால சூர்ய சொன்னது போல தினமும் ஒரு கலகத்தின் செய்தி வந்து கொண்டிருந்தது. புலிகளும் சிங்கள ஜே.வி.பி. பயங்கரவாதிகளும் பெருமளவில் கிழக்கிலும் தெற்கிலும் சேதமளித்துக் கொண்டிருந்தார்கள். வடக்கே இந்திய அமைதி படைக்குப் புலிகள் எதிர்ப்புக் காண்பித்துக் கொண்டிருந்தார்கள். யாழ் தேவி ரயில் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டது. ஆயுதச் சரணும் செய்து முடிக்காமல் இடைக்கால நிர்வாக அமைப்பு ஏற்படவும் முட்டுக் கட்டைகள் போட்டுக் கொண்டு, தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை உண்ணாவிரத அறிக்கை விடுத்திருந்தார்கள். இந்தச் செய்திகளினால் சீலியா மிகவும் அரண்டு போனாள்.

"நான் சீலனை மீளப் பார்த்தாலும் பார்க்க இயலாவிட்டாலும் யாழ்ப்பாணத்திலே எனக்கு முக்கியமான வேலையிருக்கு பிரபு. போராளிகளுடைய போக்கு ஆபத்தானது எண்டு எம்மக்களுக்குக் கதைக்கணும். யாழ்ப்பாணத்துக்கு நான் மீளப் போகணும் பிரபு. நீங்கதான் உதவணும்."


அவளுடைய கெஞ்சலின் விளைவாக இந்திய ஹை கமிஷனில் சொல்லி அவளையும் தன்னுடன் அழைத்துச் செல்ல அனுமதி வாங்கியாயிற்று.

இப்பொழுது, கொழும்பின் சுத்தமான விசாலமான வீதிகளில் விஜயபால சூர்யாவின் வீட்டை நோக்கிச் செல்கையில் இங்கோ, வேறெங்கோ அமர்ந்து கொண்டு யாழ்ப்பாணத்தின் சீதோஷ்ணத்தை கணிப்பதும், நிர்ணயிப்பதும் அசாத்தியமான, யதார்த்தத்துக்கு எதிரான விஷயமாகத் தோன்றிற்று.

ஒரு கார் அவனை உரசிக் கொண்டு நின்றது. உள்ளேயிருந்து மாயா எட்டிப் பார்த்தாள்.

"ஹலோ, வீட்டிற்குத் தானே போகிறீர்கள்? ஏறிக் கொள்ளுங்கள்!" என்றாள்.





"நான் கார் ஓட்டக் கத்துக்கறதுக்கு மூணு மாசம் ஆச்சு!"

"நான் கார் ஓட்டக் கத்துக்க மூணு கார் ஆச்சு!"

— திருத்துறைப்பூண்டி ஷேக்ராஜ்.

அவன் நன்றியுடன் ஏறிக் கொண்டான்.

"எப்படியிருக்கிறது வாழ்க்கை?" என்று அவள் கிண்டினாள்.

"உற்சாகமாக இல்லை" என்று அவன் ஒப்புக் கொண்டான்.

"எப்படி இருக்கும்? இந்திய அமைதிப் படை கரியைப் பூசிக் கொண்டு நிற்கும் போது?"

அவன் பதில் பேசவில்லை. இவள் வாயைத் திறந்தால் ஓயமாட்டாள்.

"இந்த பயங்கரவாதிகளை ரொம்பப் பெரிய ஆட்களா மதிச்சு முக்கியத்துவம் கொடுத்து ஒரு நிர்வாக அமைப்புக்கு ஒப்புதல் கேட்கும் போதே நான் நினைச்சேன். இது பாம்புக்குப் பால் வார்க்கிற கதை என்று. இப்ப என்ன நடக்கிறது பாருங்கள்! எத்தனை நிபந்தனைகள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்! எப்படியோ ஒழிந்து போகட்டும் என்று உங்கள் ஹை கமிஷனர் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஜயவர்த்தனவும் சரியென்று ஒப்புக் கொண்டு வருவது மானக்கேடான விஷயம். அப்படியும் அவன்களுக்குத் திருப்தியில்லை. தங்கள் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றவில்லையானால் சாகும்வரை உண்ணாவிரதமாம்! செய்யட்டும்! சாகட்டும்! இவர்கள் இன்னும் அப்பாவி ஜனங்களைக் கொல்லுவதை நிறுத்தவில்லை. ஆயுதச் சரண் செய்யவில்லை. அப்படியிருக்க, இதென்ன ஸ்டண்ட்? இவர்கள் மற்றவர்களை என்னவென்று நினைத்து விட்டார்கள்?"

அவளுடைய முகம் கோபத்தில் சிவந்திருந்தது. தமிழர்களைப் பற்றிய பேச்சே இவளுடைய இரத்தக் கொதிப்பை அதிகரித்து விடுகிறது என்று அவன் நினைத்துக் கொண்டான்.

"1983—க்குப் பிறகு நடந்த விஷயங்களைப் பரிந்து பேச எனக்கு வாயில்லை. ஆனால் அவர்களுடைய குறைகள் எல்லாம் மிகைப் படுத்தப்பட்டவை. இவர்களுக்கு என்ன குறை வைத்தோம்? எங்களுடைய ரூபாய் நாணயத்தைப் பாருங்கள், தபால் தலையைப் பாருங்கள், டீ.வி. செய்தி அறிக்கையைப் பாருங்கள். எல்லாவற்றிலும் தமிழ் இருக்கிறதா இல்லையா?"

அவளுடைய பேச்சைப் போலவே ஓட்டமும் வேகமாக இருந்தது.

"அதுவும் அவர்களுடைய பயங்கரவாதம்—மன்னிக்கக் கூடியதா? அனுராதபுரத்தில் அப்பாவிப் பிக்குகளைக் கொலை செய்தார்களே தெரியுமா? அங்கே தமிழ் போதிக்கும் ஆசிரியரின் நண்பனைப் போல ஒருத்தன் போனான். பிக்குகள் அவனுக்குத் தேநீரும் சிற்றுண்டியும் கொடுத்து சிநேகிதமாக உபசரித்திருக்கிறார்கள். மறுநாள் எங்கோ செல்ல பஸ் ஏறிக் கொண்டிருந்த அவர்கள் அத்தனை பேரையும் அவன் கொன்று விட்டான்! இந்த மாதிரி மனிதத் தன்மையே இல்லாத ஒரு கூட்டத்திடம் யாருக்காவது அனுதாபம் பிறக்குமா?"

"எல்லாத் தமிழர்களும் பயங்கரவாதிகள் இல்லை மாயா!"

"பயங்கரவாதிகளைத் தானே இப்பொழுது மக்களின் பிரதிநிதிகள் என்று முக்கியத்துவம் கொடுத்து வைத்திருக்கிறார்கள்! நான் சொல்கிறேன் இது உருப்படாது. கடைசியில் தோல்வியை ஒப்புக் கொண்டு நீங்கள் கிளம்ப வேண்டிவரும். ஏனென்றால் நாங்களே உங்களை விரட்டி விடுவோம்."

வீடு வந்து விட்டது. அவன் நன்றி சொல்லி இறங்கிக் கொண்டான்.

"நான் இறங்கவில்லை. விஜய சூர்யவுடன் பேசும் மனநிலையில் நான் இல்லை" என்று விட்டு மாயா கிளம்பிப் போனாள்.

அவன் யோசனையுடன் விஜயபால சூர்யவைத் தேடிக் கொண்டு சென்றான்.

"நாளைக்கு அதிகாலை கிளம்ப வேண்டும். அனுமதி கிடைத்து விட்டது" என்றான் சுருக்கமாக.

பாலசூர்யவின் நெற்றியில் யோசனைக் கோடுகள் விழுந்தன. பிறகு சுபாவமான சிரிப்புச் சிரித்து,

"வெல்!" என்று கைகளை மேலே ஏற்றி இறக்கினார். "சிலியாவின் எண்ணமும் நியாயமானதுதான். அங்கே கூத்தடிக்கிற பித்தாட்டத்தில் யாராவது கொஞ்சம் தெளிவைக் கொண்டு வர முயன்றால் அதைத் தடுப்பது பிசகு."

"நான் அவளை அங்கிருக்கும் வரை கவனித்துக் கொள்வேன்!" என்றான் அவன் சமாதானமாக.

"தன்னைக் கவனித்துக் கொள்ள அவளுக்குத் தெரியும். அதைப் பற்றி எனக்குச் சந்தேகமில்லை. அங்கே நடக்கும் விஷயங்களைப் பற்றித் தான் எனக்குக் கவலை. நீ வந்து தகவல் சொல்!" அவருடைய கையைக் குலுக்கும் போது, இந்தப் புன்னகை உண்மையில் இவர் போடும் வேஷம் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

மறுநாள் அதிகாலையில் அவனும் சிலியாவும் ரத்மலான விமான நிலையத்துக்குச் சென்று யாழ்ப்பாணத்துக்குக் கிளம்பினார்கள். விமானத்தில் செஞ்சிலுவை சங்கத்தைச் சேர்ந்த வேணுகோபால் அமர்ந்திருந்தார்.

"வாய்யா!" என்றார் அவனை பார்த்து. "சரியான நேரம் பார்த்துத்தான் யாழ்ப்பாணத்துக்குப் போறே!"

"என்ன விஷயம்?" என்றான் அவன்.

அவர் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "அந்த ஆள் போயிட்டான்!" என்றார்.

"எந்த ஆள்?"

"அதான், உண்ணாவிரதம் இருந்தானே,

திலீபன்!''

''ஓ!'' என்றான் அவன் திகைப்புடன். ''பெரிய கலாட்டாவா இல்லே இருக்கும் இப்ப?''

''அதுதானே உனக்கு வேணும்?'' என்றார் அவர் பரிகாசமாக. ''அவங்களுக்கும் பப்ளிஸிட்டி வேணும்.''

சீலியா வேறு ஒரு பக்கம் உட்கார அவன் அவரருகில் உட்கார்ந்தான்.

''எல்லாம் பப்ளிஸிட்டி ஸ்டண்ட்'' என்று அவர் முணுமுணுத்தார். ''ஜனங்களுடைய ஆதரவு குறைஞ்சுக்கிட்டு வருதோன்னு பயம் வந்துடுட்டது அவங்களுக்கு. தங்களுடைய பாதுகாப்புக்காகவே எல்லாரையும் முட்டாளுங்கன்னு நினைச்சு நாலைஞ்சு நிபந்தனைகள் போட்டு ஒருத்தனை உண்ணாவிரதம் இருக்கச் சொல்றது. உசிருக்குத்தான் வேல்யூ கிடையாதே அவங்களுக்கு! அணு அணுவா ஒருத்தனை சாக விட்டிருக்காங்க பாரேன்! இப்ப இந்தியா மேல பழியைப் போடப் போறான். பெரிய இரங்கல் ஊர்வலம் போய் ஜனங்களுடைய இரக்கத்தைச் சம்பாதிச்சுப்பான். இன்னும் ஏகமா ஆயுதம் வெச்சிருக்காங்க. யார் கொடுக்கறாங்க? எப்படி வருது? ஒண்ணும் தெரியல்லே. அவங்க கொரில்லாப் போர் முறை வேற. நமக்குப் பழக்கமில்லாதது.''

ஆழம் தெரியாமல் காலை விட்டு விட்டோம் என்று அவர் சொல்லாமல் சொல்வது போல் இருந்தது.

இப்பொழுது சீலியாவை அழைத்து வந்தது தவறோ என்கிற கவலையில் அவன் மூழ்கிப் போனான்.

யாழ்ப்பாணத்துக்குச் சென்று இறங்கியதும், ''சுபாஷ் ஹோட்டல் தானே, நான் கொண்டு விடறேன். வண்டி வந்திருக்கு'' என்றார் வேணு கோபால் சிநேகிதமாக.

''என்னோடு வேலை செய்யறாங்க'' என்று சீலியாவை அறிமுகப்படுத்தி அவன் அவள் பின்னால் ஏறிக் கொண்டான்.

பலாலி வீதியைத் தாண்டி ஊருக்குள் நுழைந்ததுமே நிலைமை புரிந்து போயிற்று. சோகப் பாட்டுக்கள் ஒலி பெருக்கியில் பெரிதாகக் கேட்டன. கையில் சிவப்புக் கொடியைப் பிடித்தபடி பள்ளிச் சிறுவர்கள் சிறுமிகள் ஊர்வலம் சென்று கொண்டிருந்தார்கள். அங்கங்கே இந்தியாவைத் தாக்கிப் போஸ்டர்கள் பானர்கள். நல்லூர் வீதியை ஒட்டிய எல்லா வீதிகளிலும் மக்கள் ததும்பி நின்றார்கள்.

''திடீர்னு எவனாவது நம்ம வண்டி மேலே வெடியை எறிஞ்சான்னா ஆச்சரியப்படக் கூட நேரமிருக்காது'' என்று வேணு கோபால் ஜோக்கடித்தார். போக்குவரத்துத் தடைப்பட்டு வண்டி நின்ற போது பிரபு கீழே இறங்கி அவசரமாக இரண்டு படங்கள் எடுத்தான். வண்டி மெல்ல மெல்ல ஊர்ந்து சென்றது. நல்லூர் வீதிக்கருகில் சென்ற போது அவன் சீலியாவைப் பார்த்து.

''சீலியா, நான் இங்கே இறங்கிக்கறேன். நீங்க ஹோட்டலுக்குப் போய் இரண்டு ரூம் புக் பண்ணி அங்கேயே இருங்க'' என்றான்.

''இல்லே, நானும் இறங்கிக்கிறேன்'' என்றாள் அவள்.


''நீங்க போகணும்னா போங்க. நான் உங்க சாமானை இறக்கி ரூமுக்குச் சொல்லிடறேன்'' என்றார் வேணுகோபால்.

இருவரும் அவருக்கு நன்றி சொல்லி இறங்கிக் கொண்டார்கள். சீலியா தலைப் பால் முக்காடு போட்டுக் கருப்புக் கண்ணாடி அணிந்திருந்தாள். தன்னை மறைத்துக் கொள்ளும் முயற்சியில்.

பிரபு சிறிது நேரத்துக்கு அவளை மறந்து அந்த ஜனசமுத்திரத்தை வியப்புடன் பார்த்தான்.

இந்த உண்ணாவிரதம் ஜனங்களின் கவனத்தையும் அபிமானத்தையும் திருப்புவதற்கான ஸ்டண்ட் என்றால், நிச்சயம் இவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள் என்று தோன்றிற்று. திலீபனுக்கு மாலை போட்ட வண்ணம் — அஞ்சலி செலுத்திய வண்ணம் இருந்தது கும்பல்.

யாரோ ஒருத்தன் ஒலிபெருக்கியின் முன் பேச ஆரம்பித்தான்.



''ஞாயிற்றுக்கிழமை டீ. வி. பார்த்துக் கொண்டிருக்கும்போது என் தாத்தா மாரடைத்துச் செத்துட்டார்!''

''ஏன்! டீ. வி. யில் புதுப்படம் எதுவும் போட்டுட்டாங்களா?''

— உ. ராஜாஜி.

''அநியாயமாய் ஒரு மாவீரனின் உயிர் பிரிந்தது. இதன் பொறுப்பு இந்தியாவைச் சேர்ந்தது. உண்ணாவிரதத்தின் போது நாம் வைத்த கோரிக்கைகளில் எதுவும் இந்திய அரசுக்குச் செயல்படுத்த முடியாதவை அல்ல. பதினொரு நாட்களுக்குள் அவற்றை நிறைவேற்றும்படி இலங்கை அரசைக் கட்டாயப்படுத்துகிறோம் என்று எமக்கு வாக்குறுதி அளித்திருந்தால் மாவீரன் திலீபனின் உயிர் பிரிந்திருக்காது....''

லாங் ஷாட்டுக்காகப் பிரபு ஃபோகஸ் செய்து தொலைவை லென்ஸ் வழியாகப் பார்க்கையில் சட்டென்று நிலைத்து கவனித்தான். கும்பலுக்கு நடுவில் ஜயசீலனின் முகம்தான். சந்தேகமில்லை. உடனடியாகக் கிளிக் அடித்து செய்தியை சீலியாவுக்குச் சொல்லத் திரும்பினான். அவளைக் காணவில்லை.

— (தொடரும்)



இன்னொரு முகம்



"அந்தாளு சோறு போட வேணும். உடுப்பு வாங்கித்தர வேணும். என் உடம்புல தெம்பு இருக்கு. எனக்கும் எம்புள்ளைக்கும் நான் பார்த்துக்குவேன். அடிச்சு நொறுக்காம இருந்தாப் போதும். அதுக்கு ஒரு வழி பண்ணுங்க. இல்ல... குளம் குட்டைன்னு காட்டுங்க. விழுந்து சாகறேன். என்னால இனி முடியாது எஞ்சாமி..."

கல்யாணி ஆவேசமாகச் சொன்னாள். கண்ணும், மூக்கும் சிவந்து போய் நெருப்புக் கோழி மாதிரி நின்றாள்.

"ஊர் உலகத்துல ஆம்பளைங்கன்னு இல்லையா? இந்தாளு மாதிரியா எல்லாம்? சோத்துக்குன்னு சல்லிக்காசு தர்றது இல்லே. தெனமும் பத்து இருவதுன்னு சம்பாதிக்கிறது. அவகிட்டகுடுத்துட்டுக்கும் மானம் போடறது. கைப்புள்ளைக்காரி கூலிக்குப் போயி வயித்தைக் கழுவுறேன். என்னய்யான்னு கேட்டா கைநீட்டறது. என் உடம்பைப்பாருங்க. எத்தனை காயம்னு. பொம்பளை நான் எத்தனை நாளைக்குத்தான் பொறுப்பேன்?"

அவள் தனது கஷ்டத்தைச் சொல்லச் சொல்ல சபை கனத்தது.

சினி நாய்க்கர் கூட அனுதாபத்துடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். பல தடவை பஞ்சாயத்

துக்கு வந்துவிட்ட வழக்குத்தான் அது. அவரே வரதனைக் கண்டித்திருக்கிறார்.

"ஒழுங்காக் குடும்பம் நடத்தத் தெரியாத நீயெல்லாம் ஒரு ஆம்பளையாடா...? த்தூ..."

"இனிமே அடிக்க மாட்டேன்ங்க..."

"நெசந்தானே...?"

"சத்தியம்ங்க..."

"போடுங்க அஞ்சு ரூபா அபராதம்..."

"ஒழுங்கா இருப்பேன்னு சொல்லுடா..."

"அந்தப் புள்ளைகிட்ட மன்னிப்புக் கேளுடா..."

பத்து நாட்கள் சந்தோஷமாக இருந்தது தெரியும். பிறகு சண்டை, சச்சரவு என்று தகவல் வரும். கண்ணைக் கசக்கிக் கொண்டு உடன் பிறந்தவன்களோடு சினி நாய்க்கரின் எதிரில் வந்து நிற்பாள்.

பஞ்சாயத்து, விசாரணை, அபராதம்...

புருஷன், பெண்டாட்டி விவகாரங்களில் எவன்தான் முடிவான தீர்ப்பு எழுத முடியும்? முன்கட்டு, பின்கட்டுப் போட்ட மாதிரிதான். அசையலாமே தவிர, நகர முடியாது.

இவனை எல்லாம் என்ன பண்ணித் தொலைப்பது?

அவளது தம்பி பொன்னுச்சாமி வழக்கம் போலவே குதித்தான்.

"கையைக் காலை முறிச்சுப் போடாம அடங்க மாட்டான். பஞ்சாயத்து எல்லாம் வேணாம். என்கிட்ட விட்ருங்க. நான் பார்த்துக்கறேன்..."

அதற்குக் கூட்டத்திலிருந்து ஒருவர் பதில் சொன்னார்: "ஆயிரந்தான் இருந்தாலும் அக்கா புருஷன்டா. மச்சான்கிறவன் அப்பனுக்குச் சமானம். கைதொடப்படாது. பார்த்துக்க......"

"இப்படி விட்டு விட்டுத்தான் அவனுக்குக் கொழுப்பு ஏறிப் போச்சு. எவன் கேக்கப் போறான்னு தைரியம்..."

"பொறு... அதுக்கும் ஒரு நேரம் வர வேணாமா?"

"எனக்கென்னமோ, வரதன் நல்லவன் தான். புதுசாக் கூட்டி வந்திருக்கானே... அவ சொல்லித் தர்றாளோன்னு ஒரு சந்தேகம்..." என்றார் ஒருவர்.

"அட... அப்படித்தான் இருக்கட்டும்... இவனுக்குப் புத்தி எங்கே போச்சு...?" என மற்றவர் சொல்ல, "இதை இப்படியே விடப்படாது. ரெண்டுல ஒண்ணு பார்த்திட வேண்டியதுதான்" என்றார் சினி நாய்க்கர்.

பெண்டுகள் மத்தியில்தான் கண்டதை மிகவும் விஸ்தாரமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள் ரெங்கம்மாள் — கல்யாணியின் பக்கத்து வீட்டுக்காரி.

"என்ன எளவுக்கோ மத்தியானத்திலிருந்தே சண்டை. சாயங்காலம் கோபமா வெளியே போனான். ராத்திரி பத்து மணி இருக்கும். குடிச்சிட்டு வந்தான். கதவைத் தள்ளிக்கிட்டு உள்ளே போயி அடிச்சான் பாரு... என் ஆயுசுக்கும் அப்படி நான் பார்த்ததில்லேடி அம்மா...!"



அவள் சொன்னது நிஜம் என்பதற்குக் கல்யாணியின் உடம்பில் சாட்சியம் இருந்தது. கிழிந்த ஜாக்கெட். கன்றிச் சிறுத்த சதை. வீங்கிய முகம். உதட்டோர இரத்தக் கசிவு...

ஆசை நாயகியுடன் கொஞ்சிவிட்டு வரும் ஒருவன், கட்டியவளிடம் பிரியமாக நடந்து கொண்டதற்குச் சரித்திரம் உண்டா? விவகாரத்தின் அசிங்கத் தன்மையும், தானாகத் திருந்திவிடுவான் என்ற நம்பிக்கையும் இவ்வளவு காலம் பொறுமையாக இருக்க வைத்து விட்டது. இது தான் உச்சம். இனி பொறுக்கக் கூடாது. அவனுக்கு மட்டுமல்ல. அவளுக்கும் சேர்த்தே உதை கொடுக்க வேண்டும். 'அடுத்தவன் குடியைக் கெடுப்பியா... கெடுப்பியா?'

பல்லை நறநறத்தபடி கல்யாணியைப் பார்த்தான் பொன்னுசாமி.

"என்னய்யா... வரதனை இன்னும் காணோம். கூட்டி வர்றேன்னு போனவனையும் காணோம்?" குறிப்பாக இன்னாரிடம் என்று இல்லாமல், பொதுவில் எல்லோரையும் பார்த்துக் கேட்டார் சினி நாய்க்கர்.

"பொறுங்க... இன்னும் கொஞ்ச நேரம் பார்ப்போம். இல்ல... அடுத்த ஆளை அனுப்புவோம்..." என்றார் வடிவேலு.

வரதனுக்குப் போதை தெளிந்து இருந்தது. கண்களைத் திறந்து பார்த்தான். காலை வெளிச்சம் துல்லியமாகத் தெரிந்தது. தான் 'அவள்' வீட்டில் படுத்துக் கிடப்பதும், ராத்திரி கல்யாணியை அடித்ததும் நினைவிற்கு வர, சங்கடமாக இருந்தது.

. கல்யாணிக்குப் பலமான அடிதானோ?

தன்னுள் அப்படியொரு வெறி ஏன் துளிர்த்தது?

ஆம்பளைத்தனமா? சிதைந்து போன சுய

மும்தாஜ் யாசீன்

கௌரவத்தை எடுத்து நிறுத்துகிற முயற்சியா?

''ஆ.....வ்வ்'' என்று கொட்டாவி விட்டான். தலையணைக்கு அடியில் கையை விட்டு பீடிக் கட்டைத் தேடினான். இல்லை.

''எங்கேடி?.....''

சரசுவையும் காணோம்.

''சரசு..... ஏய்.....''

அவள் குழாயடியில் இருந்தாள்.

''சரசூ.....''

''வர்றேன். பொறு.....''

இடுப்பில் தகரக் குடத்துடன் வந்தாள். கறுத்த உடம்பின் மினுமினுப்பு. நீர் ததும்பிச் சேலையில் பாதி நனைந்திருந்தது. கொசுவத்தை இழுத்துச் செருகிய நேர்த்தியில், கெண்டைக் கால் சதை தெரிந்தது.

அவனுக்கு பீடி ஞாபகம் மறந்து போயிற்று.

தான் கூப்பிட்டதற்கு அர்த்தம் கொடுப்பதற்காக. ''காலையிலேயே எங்க போயிட்டே?'' என்றான்.

இத்தனை நாள் பழகியதில் அவனுடைய எந்த மாதிரியான கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டியதில்லை என்பது சரசுவுக்கு தெரிந்திருந்தது.

''தொரை கண்ணைத் தொறந்தாச்சா... எந்திரிச்சு முகத்தைக் கழுவிட்டுக் கௌம்பு. எனக்கும் வேலைக்கு நேரமாச்சு'' என்றாள் சரசு.

''நான் எங்கியும் போகலே'' என்றான் வரதன்.

''ஏன் என்ன வந்துச்சு?''

''இனிமே இங்கதான் இருக்கப் போறேன்....''

''என்னய்யா சொல்றே?''

ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்தாள். உள்ளே பொறி தட்டிய மாதிரி இருந்தது. ''பெஞ்சாதியோடு சண்டையா?''

''ஆமா.... பெரிய ரகளையே நடந்து போச்சு.....'' விளக்கமாகச் சொன்னான்.

''உம் பலத்தை எப்பவும் பொம்பளைகிட்டத்தான் காட்டுவே.... எத்தனை தடவை சொல்லி இருக்கேன் அவளை ஒண்ணும் பண்ணாதேன்னு.....''

''என்னை அவ என்ன கேள்வி கேட்டான்னு உனக்குத் தெரியுமா?''

''ஒண்ணும் தெரிய வேணாம். சித்த பேசாம இரு.....''

சரசு கதவை அடைத்துக் கொண்டு சரிந்து உட்கார்ந்தாள். அவளுக்கு என்னவோ படபடவென்று வந்தது.

அவளைப் போல கல்யாணி ஒன்றும் அனாதை இல்லை. ஆள் பலம் உண்டு. அண்ணன், தம்பி, சொந்த மனிதர்கள். பொதுவில் நியாயம் சொல்கிறவர்கள்.....

அவளை நோக்கி எறியப்படுகிற கல் எந்த இடத்தில் வந்து விழும் என்று அவளுக்குத் தெரியும். முந்தைய சண்டைகளில் ஏற்கெனவே அவளது தலை உருண்டிருக்கிறது. இதே நிலை நீடித்தால் என்ன ஆகும்? அது ஏன் இந்த ஆளுக்குப் புரிய மாட்டேன் என்கிறது?

''கடவுளே!.... என் தலையில் மட்டும் ஏன் இப்படி எழுதி வச்சுட்டே?''

சரசுவுக்கு எல்லாமே வெறுப்பாகத் தெரிந்தது.

கண் விழித்த நாளிலிருந்தே கஷ்டம். எட்டு வயதிலேயே சித்தாளாகி அம்மாவுடன் கல் சுமந்திருக்கிறாள். சேறு மிதித்திருக்கிறாள். முரட்டு மேஸ்திரிகளிடம் உதைபட்டிருக்கிறாள். வயதுக்கு வந்த பின்னர் வேறு மாதிரியான சோதனைகள். தட்டுத் தடுமாறி எழுந்து நிற்கும் போது, அம்மா செத்துப் போனாள். மஞ்சள் கயிறைக் கட்டி, தாய் மாமன் புருஷன் ஆனான். ஆறு மாத வாழ்க்கையில் அவனுக்கு நிறையச் சந்தேகங்கள். ''அவன்ட்ட ஏன் பேசினே? இவன் கூட ஏன் சிரிச்சே?'' என்று கேட்க ஆரம்பித்தான். ஒரு நாள் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப் போனான்.

அப்புறம்தான் அவள் நாடார் மில்லில் வேலைக்குச் சேர்ந்தது — நெல்லை உலர்த்தி அள்ளும் ஏழெட்டுப் பெண்களில் ஒருத்தியாக. அது அவளது நல்ல காலமோ, கெட்ட காலமோ. வரதனும் அங்கேதான் வேலை பார்த்தான். வண்டி ஓட்டி. கல்யாணம் ஆகவில்லை. வசீகரிக்கிற இளமை. முரட்டு உடல்வாகு. எத்தனை பெரிய சுமையையும் தனி ஒருவனாகத் தூக்கி நிறுத்துகிற பலம். பக்கத்தில் யாரும் இல்லாத போது, பிரத்யேகமான ஒரு சிரிப்புடன், ''என்ன புள்ள?'' என்று கேட்பான்.

ஆரம்பத்தில் எரிச்சல் வந்தது என்னவோ நிஜம். முதலாளியிடம் சொல்லி விடலாமா என்று கூட நினைத்தது உண்டு. போகப் போக ''இதுல என்ன கெடக்கு?'' என்கிற அளவுக்குச் சாதாரணமாகி விட்டது. சில சமயங்களில் கண்ணைச் சிமிட்டி அவன் சிரிப்பதில் கிரீடத்தைச் சூட்டிய மாதிரிக் கூட இருந்தது.

பலவீனப்பட்ட பின்னர் எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிக்க முடியும்?

பதிலுக்குச் சிரித்து, தனியே பேசி, தொட்டு, வீட்டிற்கு அழைத்துப் போய்....

எவ்வளவோ நேர்ந்து விட்டது.

அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ முடிவு செய்தது—

முதலாளி வேலையை விட்டு இருவரையும் விரட்டியது—

ஊராரின் பார்வையில் கூனிக் குறுகியது—

அவனது உறவுக்காரர்களின் வற்புறுத்தலின் பேரில்தான் கல்யாணியைக் கல்யாணமும் செய்து கொண்டான். அன்றைக்குக் குப்புறப்படுத்துக் கொண்டு அழுதவள்தான். அதற்காக இடிந்து போய் விடவில்லை.

தனக்கென்று அவன் என்ன செய்து விட்டான்?

குடும்பச் செலவு, சேலை, ரவிக்கை என்று எதுவும் இல்லை. பிரியப்பட்டால் அவனாகப் பத்து, இருபது என்று கொடுப்பான். மல்லிகைப் பூ வாங்கி வருவான். எப்போதாவது ஒரு சினிமாவுக்குக் கூட்டிப் போவான்.

கல்யாணமான மூன்றும் நாளே அவளைத்

தயாரிப்பாளர்: என் படத்தில் நடிச்சா உங்களுக்கு நிச்சயம் அவார்டு கிடைக்கும்!

நடிகர்: இவ்வளவு உறுதியா எப்படிச் சொல்றீங்க?

தயாரிப்பாளர்: பூஜை போடறப்பவே அவார்டுக்கு அட்வான்ஸ் கொடுத்துட்டேனே!

— திருத்துறைப்பூண்டி ஷேக்ராஜ்.



தேடி வரதன் வந்த போது, தன்னை அவன் கைவிட்டு விடவில்லை என்பது அவனுக்கு உறுதியாயிற்று. "கண்ட நாய்களும் இனி சுத்திச் சுத்தி வராதபடி ஆம்பளைன்னு இவனே வந்துட்டுப் போகட்டும். போ......"

இடையிடையே கல்யாணிதான் அவனுக்குப் பிரச்னை. தன்னிடம்தான் கொண்டு வந்து கொட்டுகிறான் என்று அவளுக்கு நினைப்பு. அடிப்படையிலேயே கோளாறுகிப் போன புருஷனைப் பற்றி அவள் தெரிந்து கொண்டால் சரசுவுக்கு இனி எந்தப் பிரச்னையும் இல்லை.

அதற்கு என்னதான் செய்வது?

"இங்க தங்கறேன்கிறது நல்லா இல்லை. ஏற்கெனவே அவளை அடிச்சிட்டு வந்திருக்கிறே.... என் மேல தான் பொல்லாப்பு வரும்" என்றாள் சரசு.

எனக்கு இஷ்டம், நான் தங்கிக்கறேன்... எவன் கேக்கறது?"

"வீணு விவகாரம்தான் வரும்...."

"வரட்டும்..... பார்த்துக்கலாம்...."

"சொன்னக் கேளு.... நாஸ்தா வாங்கிட்டு வர்றேன். தின்னுட்டு கிளம்பு."

சேலையைச் சரி செய்தபடி சரசு வீதியில் காலெடுத்து வைக்க, "உன் ஆம்பளையைத் தேடிக்கிட்டு கொஞ்சம் முந்தி ஒரு ஆளு வந்திச்சு....." என்றாள் தெருவாசி ஒருத்தி.

"முதலாளி ஆளா?......"

"ம்ஹூம்...... புதுசா இருந்தான். வரதன் இருக்கானன்னு கேட்டான். எனக்கென்னமோ ஒரு சம்சயம் உன் சக்களத்தி ஆளா இருக்குமோன்னு.... இல்லைன்னு வாயில வந்துருச்சு. போய்ட்டான்....."

"அது யாரோ..... போ" அப்போதைய மனநிலையில் சரசு அதை ஒன்றும் பெரியதாக எடுத்துக் கொள்ளவில்லை.

சீனி நாய்க்கருக்கு உட்கார முடியவில்லை. சபையில் எல்லோரையும் கூட்டி வைத்துக் கொண்டு எத்தனை நேரம்தான் காத்திருக்க முடியும்?

ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு ஜோலி. அவருக்குக் கூட கடையைத் திறக்க நேரமாகிக் கொண்டிருந்தது.

"சரி.... ராத்திரிக்காவது வச்சுக்கலாமா?"

சீனி நாய்க்கர் வாயைத் திறந்த வேளையில், "[illegible]ழு வந்துட்டான்" என்று சப்தம் கேட்டது.

[illegible] வழிய அவன் வந்து நின்றான்.

"கண்டு பிடிச்சுட்டேன்..... அவ விட்ல ஒளிஞ்சுக்கிட்டு இருக்கான்...."

"இழுத்துக்கிட்டு வர வேண்டியது தானேடா...."

"ஆளைப் பார்க்கலை. வீட்டுக்கு வெளியே செருப்புக் கெடக்கு. அவ சொல்லி வச்சிருப்பா போல இல்லைன்னு சொல்றாங்க தெருவுல. சரி.... இதுல-என்னமோ சூது இருக்குன்னு திரும்பிட்டேன்....."

ஆள் அனுப்பியும் ஒருத்தன் வரவில்லை.

சீனி நாய்க்கருக்கு மட்டுமல்ல. சபைக்கே நேர்கிற அவமானம் இது. இத்தனை பேர் கூடிக் காத்திருக்க ஒரு பொம்பளை அதைத் தடுக்கிறது எனில்....

இதில் இரண்டு விஷயங்கள் மட்டுமே கவனிக்க வேண்டியவை.

ஒன்று. அவளால்தான் எல்லாம் நடக்கிறது என்பது நிஜமாகி விட்டது.

இன்னொன்று. அவன் பாவம், மாட்டிக்கிட்டு முழிக்கிறான்....

"ம்..... இப்ப என்ன செய்யலாம்?" சீனி நாய்க்கர் மெதுவாக ஆரம்பித்தார்.

"இத்தனை பேரு இருந்தும் ஒரு பொண்ணுக்கு நியாயம் தரமுடியலைன்னு ஆகப்படாது....." என்றார் வடிவேலு பெரியவர்.

"அவதான் ஒளிச்சு வச்சுக்கிட்டு இல்லேங்கிறாளேய்யா."

"எனக்கு அவ மேலதான் சம்சயம். அப்பவே சொல்லலை?"

"நல்லாத்தான் பொடி போட்டு மயக்கி இருக்கா....."

"கண்டந்துண்டமா வெட்டிப் போடணும்...." என்றான் பொன்னுச்சாமி.

"அப்பவே செஞ்சிருக்கணும்....."

"இப்ப ஒண்ணும் மோசம் போயிடலை.... எந்திரிங்கடா....."

"ஏலே.... எக்குத்தப்பா எதாச்சும் ஆயிடப் போவுதுடா....." சீனி நாய்க்கருக்கு 'சுருக்' கென்றது. அப்போதைக்கு என்ன சொல்லி கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது என்று தெரியவில்லை. "அவளை இங்க இழுத்துக்கிட்டு வந்து எம்முன்னால நிறுத்துடா....." கல்யாணி ஆவேசமாகக் கத்த, பொன்னுச்சாமி துள்ளி எழுந்தான். அவனோடு இன்னும் நாலைந்து பேர்.

ஹோட்டல் வாசலில்—டிபனுக்கு ஆர்டர் கொடுத்து விட்டு "என்ன சொல்லி இந்த ஆம்பளையை அனுப்பறது?" என சரசு யோசித்த வேளையில் அவர்கள் புறப்பட்டு இருந்தார்கள்.

Filmotsav

கேரள முதல்வரின் குத்தல்!

இடம்: தென்னைகள் சூழ்ந்த திருவனந்த புரம். தேதி: 10.1.1988.

'ஐந்து மணிக்கெல்லாம் உங்கள் இருக் கையில் இருக்கவும்' என்று உத்தரவிட்டது



அழைப்பிதழ்.

கனகக்குன்னு அரண்மனை விஸ்தீரணத் தில் நிஸாகந்தி திறந்தவெளி அரங்கம்.

நுழையும் போது வரவேற்க, வியர்வை வழியும் மார்புகளோடு, செண்டை வாத்தி யங்களின் தட்தட, தட்தட, தட்தட, தட்தட. அலங்காரம் செய்யப்பட்ட யானையின் ஓராஸ் ஓராஸ் என்ற துப்பிக்கை மூச்சு. இரு மருங்கிலும் பூத்தட்டுகள் ஏந்தி கேரள ஸ்டை லில் முண்டுகளுடன் களைத்து நின்ற (எந்த கோலேஜோ?) பெண்டுகள்.

விழா ஆரம்பித்து வெகுநேரம் வரை விலகாத வெயில். அசௌகரியமான மடக்கு நாற்காலிகள். பேட்ஜ் குத்திய ஆண்கள், பெண்கள். மேடையை, அதன் சிறப்பு விருந் தினர்களைக் கவனிக்க உயரத்து டீ.வி. காமி ராக்கள்.

மிகச் சரியாக 5.30க்கு விழா ஆரம்பம். மத்திய மந்திரி அஜித் பாஞ்சா பெரிய அரசி யல் கும்பிடு போட, தயங்கி விட்டுக் கை தட்டினார்கள். கேரள முதல்வர் நாயனார் சிறப்புரையில், 'எத்தனையோ பணத்தட்டுப் பாடுகள், கட்டுப்பாடுகளுக்கிடையில் (அஜித் பாஞ்சாவை அர்த்தத்தோடு பார்த்து) இந்த விழா நடத்தப்படுகிறது' என்று மத்திய அரசின் கெடுபிடிகளை கச்சக் என்று குத்தல் செய்ய, கிளம்பியது கரகோஷம்.

மற்றபடி அத்தனை பேரும் 1988 சிறப் பான ஆண்டு என்று மூன்று காரணங்களை மறக்காமல் சொன்னார்கள்: மலையாள சினி மாவின் 50—ஆம் ஆண்டு, இந்திய சினிமா வின் 75—ஆம் ஆண்டு, ஜவாஹர்லால் நேரு வின் 100—ஆம் ஆண்டு.

கிட்டத்தட்ட நாற்பது நாடுகள். இருநூறு படங்கள் என்று புள்ளிவிவரம் சொல்கிறது.

வெயில் தாழத் தாழ, 'ஊர்வசி' சாரதா உதவ, பிரபல டைரக்டர் மிருணாள்சென் ஆளுயரக் குத்துவிளக்கேற்றியதை நூறு காமிராக்கள் ஃப்ளாஷ் செய்தன.

ஃபிலிமோத்சவ் 88—க்கு ரிப்பன் வெட்டி யாகி விட்டது.

முதல் படமாக இங்கிலாந்தின் **WHITE MISCHIEF**.

1940—களில் கென்யாவில் பிரிட்டிஷின் காலனி ஆட்சியைப் பின்னணியில் வைத் துக் கணவன் — மனைவி — அவனுடைய காதலன் என்று கதையும், சதையும் நிறைந்த படம்!

— ஜெயமன்மதன்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034. போன்: 473389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 280/-; விமானத் தபால் ரூ. 680/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 340/-.




படியுங்கள் இதோ...ஃபேர் அண்ட் லவ்லி எப்படி ராதாவுக்கு கவனிக்கத் தக்க சிகப்பழகை அளித்துவிட்டது... இயற்கைக்கே உரிய இதமான வழியில்.


விளக்கேற்றி வணங்குகிறாள் ராதா...நெஞ்சிலே நன்றிக் கீதம்—பூரணமாய்த் தன் மீது பொன்மாரி பொழிந்ததற்கு, மேனிமலர நன்றி... நன்றி பொங்க வாழ்த்துகிறாள் ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை. எந்தப் பெண்ணும் கனவு காணும் பொன்வண்ணம்—சிகப்பழகு, அதனை மேனி மென்மையோடு இயல்பாகப் பூக்க வைத்த க்ரீம்—அதன் வண்ணஜாலமோ, துவக்கிய இரண்டே மாதங்களில்! நடந்ததை நம்பமுடியவில்லை. இந்நாளிலோ, ராதாவின் காதுகளில் ராகமென ஒலிக்குது ராஜா 'அவர்' கொஞ்சும் ரகசியப் புகழுரை: ''பொன்னிறமாய் பூக்குதே உன் அழகு...!''

ராதாவைப் போலவே உங்களுக்கும், அந்த சிகப்பழகுக் கனவு பலித்திட முடியும் - ஃபேர் அண்ட் லவ்லி துணையோடு.


ஃபேர் அண்ட் லவ்லி துவங்குமுன்


ஃபேர் அண்ட் லவ்லி உபயோகிக்கும் நாட்களில்

ஒரு முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு...
ஃபேர் அண்ட் லவ்லி, இயல்பாக உங்களை சிகப்பழகியாக்க இதிலுள்ள ஒப்பற்ற ஃபார்முலா—இரு முக்கிய வழிகளில் வேலை செய்கிறது. ஒன்று: சருமத்தின் அடியாழத்தில்



செயல்பட்டு, உடல் கறுக்கும் உள்வினையைத் தடுக்கிறது—வேறெந்த க்ரீமுக்கும் இது இயலாத சாதனை. மற்றொன்று: இதிலுள்ள இரட்டை ஸன்ஸ்க்ரீன் ஆற்றல், உடல் கறுக்க வைக்கும் சூரிய ஒளியை உட்புகாதபடி தடுத்து நிறம் காத்திடுகிறது. ஆகவே, 6 முதல் 8 வாரங்களில் புதிதாக மேலெழும்பும் கொழுந்துச் சருமப் படலங்களில் செவலையான சாயல் மிளிரும். அன்றாடம் இருமுறை ஃபேர் அண்ட் லவ்லி—நாள் தவறாமல் உபயோகித்து வந்தால், மென்மை கொஞ்சும் இயல்பான சிகப்பழகு உறுதியாக உமதாகிவிடும்.

உபயோக முறை:
கழுவிக் கொண்ட முகம், கழுத்து, கரங்கள்மீது ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை பொட்டுப் பொட்டாக இட்டபின், மேல் நோக்கித் தேய்க்க வேண்டும் மெதுவாக. ஃபேர் அண்ட் லவ்லி செயல்படத் துவங்கும் போது சற்றே கூசும் உணர்வு ஏற்படு-மானால் கவலை வேண்டாம், விரைவில் அது மறைந்துவிடும்.

எளிதில் உள் உறிஞ்சப்படும்.
குழைவு குணமோங்கி முன்னிலும் மென்மையாக வருகிறது ஃபேர் அண்ட் லவ்லி, ஒரேசீராய் பரவுகிறது சருமத்தில் மேலும் எளிதில் உறிஞ்சப் படுகிறது. உடலார உணருவீர் அந்த மாறுதலை...பிறகு காண்பீர் கண்கூடாய்.

ஃபேர் அண்ட் லவ்லி பற்றி மேலும் கேட்டறிய விரும்பினீரானால் எழுதுங்கள் இம் முகவரிக்கு: திருமதி கவிதா குமார், ஃபேர் அண்ட் லவ்லி அட்வைசர், பி.ஓ. பாக்ஸ் 758, பம்பாய் 400 021.

ஃபேர் அண்ட் லவ்லி
சிகப்பழகு க்ரீம்



...ண்காணும் சிகப்பழகை உமதாக்கும்... இயற்கைககே உரிய இதமான வழியி...

REGISTERED No. M 4362
Registered as a Newspaper in Sri Lanka

